
தமிழரசு
மே-2003
முதல்நிலை நோக்கிய
லட்சியப் பயணத்தின்
ஈராண்டுச் சாதனைகள்



# ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை



"அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை திராவிடர் உடமையடா''

– என்று முழங்கினார் நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அவர் கற்றுக் கொடுத்த பாடம் தான், எனது அனைத்து முயற்சிகளிலும், எனக்குத் துணை நிற்கிறது.

*'My Strength is as the strength of Ten
Because my heart is pure'*

– என்று கூறினார் ஆங்கிலக் கவிஞர் Lord Tennyson. எனது இதயம் தூய்மையானதாய் இருப்பதால், என் வலிமை பத்து பேர் வலிமைக்குச் சமமானது என்பது அந்தக் கவிஞரின் கருத்து.

என்னுடைய உள்ளம் தூய்மையானது. ஆனால் என் வலிமை பத்துப் பேர் வலிமைக்குச் சமம் என்று சொல்ல மாட்டேன், ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை என்று தான் நான் சொல்வேன்.

உங்கள் அன்பும் ஆதரவும் எப்போதும் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு இருப்பதால், உங்கள் அனைவருடைய வலிமையும் எனது வலிமை என்று தானே பொருள்? இந்தப் பாசப் பிணைப்பை எந்தக் கொம்பனாலும் பிரிக்க முடியாது. எந்தக் காலத்திலும் பிரிக்க முடியாது.

அப்படிப்பட்ட அன்பை ஆதரவை, ஊக்கத்தை உறுதியை வழங்கி, உறுதுணையாக இருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி வரும் அன்பை, நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

செல்வி **ஜெ ஜெயலலிதா**
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
(தேனி மாவட்ட அரசு விழாவில்)

# முதல்நிலை நோக்கிய லட்சியப் பயணத்தின் ஈராண்டுச் சாதனைகள்



மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றால்,
மக்கள் பணியே மகேசன் பணி

இதுதான்
தமிழகத்தில்
ஒரு புதிய வளர்ச்சி சகாப்தத்தைப் படைத்துவரும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
இலட்சிய முழக்கம்.

தன்னிகரற்ற தமிழகத்தை,
தலைசிறந்த தமிழகத்தைப் படைக்கின்ற பணியில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஈடுபட்டு வருகிறார்கள்.

சத்திய சோதனைகள் பலவற்றைத் தாண்டி,
மக்களின் மகத்தான ஆதரவோடு,
புதிய சரித்திரம் படைப்பதற்காக
2001ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள்
புரட்சித்தலைவி அவர்கள் முதலமைச்சர் ஆனார்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக
தமிழகத்தை ஆக்குவேன் என்று
சூளுரைத்தார் முதலமைச்சர்.
அதன்படி துறைதோறும் புதிய சாதனைகளை
நிகழ்த்தி வருகிறது
அவரது தலைமையில் அமைந்த தமிழக அரசு.

கடந்த ஈராண்டுகளில்
தமிழ்நாடு அரசு படைத்த சாதனைகள் ஏராளம்!
தமிழ்நாடு பெற்ற சிறப்புகள் ஏராளம்!
அந்தச் சாதனைகளுக்கும், சிறப்புகளுக்கும்
கட்டியம் கூறுகின்ற வகையில்,
உற்பத்தித்திறனில் இந்தியாவிலேயே,
தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது.

## வேளாண் வளர்ச்சியும்! விழுமிய பணிகளும்

கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி. இது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. தமிழகத்தில் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்களுக்கு நன்மை தரும் பல நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்த அரசு தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்ற 2001–2003ஆம் ஆண்டுகளில், வேளாண் துறையில் பல வியத்தகு சாதனைகள் புரிந்துள்ளது.

### உற்பத்திச் சாதனைகள்

உணவு தானியம் 84.716 இலட்சம் மெ. டன்கள், பருத்தி 3.26 இலட்சம் பஞ்சு பொதிகள், எண்ணெய் வித்துக்கள் 14.346 இலட்சம் மெ. டன்கள். கரும்பில் 34.50 இலட்சம் மெ. டன்கள் வெல்ல உற்பத்தி.

### நிவாரணங்கள்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு, இறவைப் பயிர்களுக்கு ரூ.2,500 மானாவாரிப் பயிருக்கு ரூ.1,000, பல்லாண்டுப் பயிர்களுக்கு ரூ.4,000. காவிரி ஆற்றுப்படுகை மாவட்டங்களில் 2002இல் பெய்த பெரு மழையால் நெல் மற்றும் பிற பயிர்களுக்கு ஏற்பட்ட பெருத்த சேதத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ.48.10 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மர சாகுபடியாளருக்கு ரூ.30.50 கோடி நிவாரணம்.

### தரிசு நில மேம்பாடு

மாநிலத்தில் வறுமை ஒழிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தவும், முதன்மைத் துறைகளில் வளர்ச்சி விகிதத்தை வலுப்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வழிகாட்டுதல்படி தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மூன்று கூறுகளைக் கொண்டது. முதலாவதாக, அனைத்துக் கிராமங்களிலும் உள்ள தனிப்பட்ட உழவர்களுக்குச் சொந்தமான நிரந்தரமான மற்றும் நடப்பு நிலவரப்படியான தரிசு நிலங்கள் வேளாண் ஆய்வு அடிப்படையிலான அணுகுமுறை மூலம் ஆதாயம் தரத்தக்க பொருளாதார நடவடிக்கையின் கீழ் கொண்டுவர வேண்டும். இரண்டாவதாக தரிசு நில மேம்பாட்டுப் பணிகளிலும் அவற்றுடன் இணைந்த பதப்படுத்தும் தொழில்களிலும் தொழில்கூட்டு நிறுவனங்களை ஈடுபடச் செய்யவேண்டும். வேளாண்மை அடிப்படையில் அமைந்த தொழில்கள் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தனிக் கவனம் செலுத்துவது மூன்றாவதாக அமையும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நீர்வடிமுகடு மேம்பாட்டு முகமை நிறுவப்பட்டுள்ளது. அதன் தலைமையில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. தரிசு நிலங்களை பசுமை நிலங்களாக்க 10 மாவட்டங்களில் 28 வட்டங்களில் 55,000 எக்டர் தரிசு நிலங்கள் மேம்படுத்தும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.


தரிசு


மேம்பாட்டுப் பணிகள்


பசுமையை நோக்கி



* பருத்தி பயிரிடப்படும் பரப்பளவை அதிகரித்து, உற்பத்தித் திறனை உயர்த்தி மாநில பருத்திக் குழு அமைக்கப்பட்டு, பருத்தித் தொழில்நுட்பக் குழு திட்டம் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.180.255 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

* சிறு விவசாயிகளுக்கு மூன்று 30 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்கள், 567 பவர் டில்லர்கள், 4 கதிரடிக்கும் இயந்திரங்கள் மற்றும் 1 நெல் நாற்று நடும் கருவி போன்ற இயந்திரங்கள் ரூ.191.867 இலட்சம் மானிய செலவில் வழங்கப்பட்டன.

* தேசிய மானாவாரி நீர் வடிப்பகுதித் திட்டம் ரூ.20.07 கோடி செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டு திருத்தி வடிவமைக்கப்பட்ட நீர் வடிப்பகுதி மேம்பாடு திட்டம் ரூ.15.32 கோடி செலவிட உத்தேசிக்கப் பட்டுள்ளது.



* பயறுவகை அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பண்ணை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம், நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் விநியோகம், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம், தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் போன்ற இனங்களுக்கு மானியம் வழங்க 2001–2002ஆம் ஆண்டு ரூ.106.78 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.164 இலட்சம் செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

* எண்ணெய் வித்துக்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம் ரூ.597.98 இலட்சம் செலவில் 2001–2002ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.628.025 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.



* பண்ணை மகளிரின் வாழ்க்கைத் தரம் உயர தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம். ரூ.512.737 இலட்சம் செலவில் 8,475 பண்ணை மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

* தமிழகத்திலுள்ள 12 உழவர் பயிற்சி நிலையங்களில் ரூ.5 இலட்சம் செலவில், மொத்தம் 26,784 விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

* பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், தானிய உற்பத்தித் திட்டம், கரும்பு அபிவிருத்தித் திட்டம், மானாவரி நீர்வடிப்பகுதி மேம்பாடுத் திட்டம் போன்ற திட்டங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது.

* மண்ணின் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உர விதைகள் 25 சத மானியத்தில் வழங்கப்பட்டது. 2001–2002ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவிலும், 2002–2003ஆம் ஆண்டு ரூ.25 இலட்சம் செலவிலும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் செயல்பாடுகள்

### ரோஜா மலர் ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்

தருமபுரி மாவட்டம் ஓசூரில் ரோஜா மலருக்கென ஏற்றுமதி மண்டலமானது ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையும் டிட்கோ நிறுவனமும் இணைந்து "டான்ப்ளோரா" எனும் பெயரில் கூட்டு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம் நீலகிரி மாவட்டத்தில் ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட உள்ளது.

### மாம்பழ ஏற்றுமதி மண்டலம் அமைத்தல்

தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி தேனி மாவட்டத்தில் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம் அமைப்பதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழக அரசின் வேளாண்மைத் துறையும் கையெழுத்திட்டுள்ளது.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

விளைபொருட்களை விற்பனைக்குக் கொண்டுவரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஆண்டிபட்டி, எழுமாத்தூர் மற்றும் தாத்தையங்கார் பேட்டை ஆகிய 3 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.25 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணியும், செம்பனார் கோவில், கம்பம், கொடுமுடி மற்றும் சேவூர் ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.0.77 கோடி செலவில் ஊரகக் கிடங்குகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

### விற்பனைத் தகவல் மையம்

2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.45.45 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 100 இடங்களில் உலர்களங்கள்

அறுவடைக்குப்பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் 2002–03ஆம் நிதியாண்டில் ரூ.2 கோடி செலவில் 100 கிராமங்களில் உலர்களங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### புதியதாக விற்பனைக் குழுக்கள்

ஏற்கெனவே செயல்பட்டு வந்த 16 விற்பனைக் குழுக்களுடன் தேனி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 4 விற்பனைக் குழுக்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், பரப்பு விரிவாக்கத் திட்டத்தில், தரமான நடவுச் செடிகள், விதைகள், உயிர் உரங்கள், தாவரப் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. 2001–2002ஆம் ஆண்டில் 27,413 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு ரூ.322.33 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.293.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

### ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன்மலை, அருநூத்துமலை, பச்சைமலை மற்றும் கல்ராயன்மலை, நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை, திருச்சி மாவட்டத்தில் பச்சை மலை, தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, விழுப்புரம் மாவட்டத்தில் கல்ராயன்மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. 2001–2002ஆம் ஆண்டில் 1,050 ஏக்கர் பரப்பளவில், இத்திட்டம் ரூ.17.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.193.59 இலட்சம்

செலவிலும், 2002–2003ஆம் ஆண்டில், ரூ.299.48 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்பட்டது.

### தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்திக்கு மாநிலத்திலுள்ள சாதகமான சூழ்நிலைகளை உரிய முறையில் பயன்படுத்திடவும், பயிர்சாகுபடியில் மட்டுமன்றி அறுவடைக்குப்பின் மேலாண்மை மற்றும் சேமிப்பு ஆகிய இனங்களிலும் அதிக கவனம் செலுத்திடவும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இக்குறிக்கோளை அடைந்திட அரசு சென்ற ஆண்டு, ''தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்'' ஒன்றை அறிவித்தது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் தோட்டக்கலை வளர்ச்சியில் 8 விழுக்காடு வளர்ச்சி நமது மாநிலத்தில் எய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தோட்டக்கலை வளர்ச்சிக்கென கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக அரசு திட்டங்களின் கீழ் ரூ.19.50 கோடி செலவிடப்பட்டு, மேம்படுத்தப்பட்டுள்ளது.

### வேளாண்மைப் பொறியியல்

நீர்வடிப்பகுதி மேலாண்மை, பாசனநீர் மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு மற்றும் சிக்கன நீர்ப்பாசன முறைகளான நுண்ணிய நீர்ப்பாசன முறைகளை அறிமுகப்படுத்தி பரவலாக்குதல் ஆகிய புதிய திட்டங்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை முக்கியத்துவம் வழங்கி செயல்பட்டு வருகிறது.

### மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

சமவெளிப்பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1,172.79 இலட்சம் செலவில் 82,043 எக்டர் நிலத்தில் பணிகள் 25 விழுக்காடு மானியத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

★ **பண்ணைக் குட்டைகள்**

2002–2003ஆம் ஆண்டில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ரூ.2.997 கோடி செலவில் 1139 பண்ணைக் குட்டைகள் போர்க்கால அடிப்படையில் 90 நாட்களில் அமைக்கப்பட்டன.

★ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.92.90 இலட்சம் செலவில் 646 எக்டர் நிலத்திலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.89.46 இலட்சம் செலவில் 595 எக்டர் நிலத்திலும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

★ நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு 2001–2002ஆம் ஆண்டில் குந்தா, கீழ்பவானி மற்றும் வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.547.25 இலட்சம் செலவில் 4,473 எக்டர் நிலத்திலும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.467.11 இலட்சம் செலவில் 3,058 எக்டர் நிலத்திலும் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

★ மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.330.34 இலட்சம் செலவில் 3904 எக்டர் நிலத்திலும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.258.48 இலட்சம் செலவில் 1933 எக்டர் நிலத்திலும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப் பட்டுள்ளன.

★ தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் தென்னைக்கு சொட்டு நீர்ப்பாசனம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.2,787.06 இலட்சங்களிலும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2137.36 இலட்சங்களிலும் செயல்படுத்தப்பட்டது.

★ 2001–2002இல் 5,697 குழாய்க்கிணறுகளும் 2002–2003இல் 5,068 குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

★ 2001–2002இல் ரூ.3,674.33 இலட்சம் செலவில் 40,681 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும், 1,00,416 எக்டர் நிலத்தில் சுழற்சிமுறைப் பாசனப் பணிகளும் 2002–2003இல் ரூ.3,887.49 இலட்சம் செலவில் 51,222 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 59,443 எக்டர் நிலத்தில் சுழற்றிமுறைப் பாசனப் பணிகளும் செயல் படுத்தப்பட்டுள்ளன.

★ **புதிய திட்டங்கள்**

பாலாறு, பொரந்தலாறு திட்டம், தொப்பையாறு திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய புதிய திட்டங்கள் 2001–2002இல் துவக்கப்பட்டு செயலாக்கப்பட்டுள்ளன.



★ திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2001–2002ஆம் ஆண்டில் ரூ.386.10 இலட்சம் செலவில் 3,232 எக்டரில் பணிகளும், விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.48.94 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.205.76 இலட்சம் செலவில் பராமரிப்புப் பணிகளும் செயலாக்கப்பட்டுள்ளன.

## பசுமைப் போர்வைத் தோட்டங்கள்

பசுமைப் போர்வைத் தோட்டங்களை 20 மாவட்டங்களில் (20 எக். வீதம் ஒரு மாவட்டத்திற்கு) சராசரியாக 800 மி.மி.க்கு குறைவாக மழை வளம் கிடைக்கக்கூடிய இடங்களில் 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு இடத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் பசுமைப் போர்வைத் தோட்டங்கள் உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் தோட்டங்களைத் தொடர்ந்து 2002–2003ஆம் ஆண்டில் பராமரிக்கும் பொருட்டு ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு எக்டருக்கு ரூ.3,000 வீதம் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தோட்டங்களின் நிலைமை திருப்திகரமாக உள்ளது.

### தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

காடு வளர்ப்பு திட்டப் பணியில் சிறப்பாக செயலாற்றியதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஈக்வெட்டோரியல் விருது தமிழகத்திற்கு கிடைத்துள்ளது. இவ்விருதுப்பரிசுத் தொகையினை பயன்படுத்தி ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் 25 மாவட்டங்களில் 959 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 80,000 மக்கள் பயன்பெறும் வகையில் சித்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

★ சமூகப் பாதுகாப்பினால் தரமிழந்த காடுகளில் மரம், செடி, கொடி, புல் போன்ற தாவர வகைகள் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் மறுவளர்ச்சி அடைந்துள்ளன. தரங்குன்றிய காடுகள் நல்ல முறையில் மறுதளிர்வு அடைந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது. திட்டகிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயம் பெருகியுள்ளது. இதுவரை ஒரு போகம் நெல் விளைந்த கிராமங்களில் 2 மற்றும் 3 போக விவசாயம் நடைபெறுகிறது.

### கடலோரத் தொடர் தடுப்புக் காடுகள் தோட்டங்கள்

2001–2002ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.178.19 இலட்சத்திற்கு செயல்படுத்தப்பட்டது. 2002–2003ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் கீழ் மரம் வளர்ப்புப் பணிகளுக்கு மைய அரசினால் நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத நிலையிலும் உருவாக்கப்பட்ட மரங்களின் பராமரிப்புப் பணி 2002–2003ஆம் ஆண்டில் ரூ.28 இலட்சத்திற்கு செயல்படவுள்ளது.

### கோடியக்கரை வன உயிரின சரணாலயம்

★ அரசின் சிறப்பான முயற்சிகளால் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் காணப்படும் தனித் தன்மை வாய்ந்த தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அப்பகுதி, 2002 நவம்பர் 18 – 26 வரை 'வெலன்சியா' நகரில் நடைபெற்ற மாநாட்டில் 'சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக' (Ramsar site) அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல மன்னார் வளைகுடா பகுதியையும்



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து சுற்றுப்புறச் சூழலுக்கான "பசுமை விருதுகள்" பெறும் மாவட்ட ஆட்சியர்கள் – 5.6.2002*

முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அறிவித்துள்ளது.

### இயற்கை வழி மரசாகுபடி

இரண்டாண்டுகளில், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்திற்கு மட்டும் 3 கோடி மர நாற்றுகளுக்குத் தேவையான உயிர் உரங்கள் மற்றும் ஊட்டச் சத்துக்கள் தயார் செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டது. இது இந்தியாவிலேயே முதன்முறையாகும். தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு இதுவரை 1,500 டன் மண்புழு உரம், 400 டன் வேர்ப்பூசனம் மற்றும் 200 டன் உயிர் உரங்கள் நாற்றங்கால் மற்றும் மர நடவுக்கு பயன்படுத்தும் பொருட்டு வனத்துறையினரால் தயார் செய்யப்பட்டுள்ளது ஒரு தனிச் சிறப்பாகும்.

### மூலிகைச் செடி வனம் காத்தல்

★ நாட்டிலேயே முதன் முதலாக மூலிகைச் செடிகள் வளர்க்கத் தேவையான சாகுபடிக் குறிப்புகள் பெற 30க்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகளில் ஆராய்ச்சி, கோவை விதை மையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆழியார் மூலிகை ஆராய்ச்சி மையத்தில் இதுவரை 300க்கும் மேற்பட்ட மூலிகை இனங்கள் கொணர்ந்து சேகரிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வருடங்களில் 125 எக்டர் நிலப்பரப்பில் சுமார் 300 முன்னோடி விவசாயிகளின் நிலங்களில் ஒட்டுபுளி, சவுக்கு, மூங்கில், பலா, வேம்பு, சொர்க்கமரம் போன்ற மரங்களைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் செயல்விளக்கத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 2,000 நபர்களுக்கு மரங்கள் வளர்ப்பது சம்பந்தமான தொழில்நுட்பப் பயிற்சி தரப்பட்டு, இரண்டு ஆண்டுகளில் சொர்க்கமரம், தேக்கு, புளி, நெல்லி, பலா போன்ற சுமார் 50,000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு விற்கப் பட்டுள்ளன.

★ 2002–2003ஆம் ஆண்டில் சந்தன மர ஏலம் மூலம் கிடைக்கப்பெற்ற வருவாய் ஏறத்தாழ ரூ.121.59 கோடியாகும். இதுவரை கிடைக்கப்பெற்ற 'சந்தனமர ஏலத்தின் வருவாயில் அதிகமான வருவாய் இதுவே' என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

கடந்த 2001–2002 ஆம் ஆண்டில், இக்கழகமானது 77478.660 மெட்ரிக் டன் மரக்கூழ் மரங்களை காகித ஆலையினருக்கு விநியோகம்

செய்து ரூபாய் 9.10 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் மெட்ரிக் டன் மரக்கூழ் மரங்களை அறுவடை செய்யத் திட்டமிட்டு, இதன் மூலம் ரூ.9 கோடி வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், தெக்குப்பட்டில் உள்ள சந்தனப் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலையில் கடந்த 2001–2002ஆம் வருடத்தில் 1587.300 கிலோ சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2001–2002 ஆம் வருடத்தில் 2725.569 கிலோ சந்தன எண்ணெய் விற்கப்பட்டுள்ளது. மேலும் 1424.94 கிலோ சந்தன எண்ணெய் ஏற்றுமதி செய்யப்பட்டும், அதன் மூலம் வெளிநாட்டு பரிவர்த்தனையாக ரூ.2.69 கோடி கிடைத்துள்ளது.

2001–2002 ஆம் வருடத்தில், மொத்த வருவாய் ரூ.18.92 கோடி ஆகும். இக்கழகமானது இலாபமாக ரூ.3.48 கோடி ஈட்டியுள்ளது.

## சுற்றுச் சூழல் துறை – ஆறுகள் மற்றும் ஏரிகள் பாதுகாப்பு

★ ஆறுகள் மற்றும் ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.6.30 கோடி செலவிடப்பட்டுள்ளது. அதே போல மதுரையில் வைகை நதிக்கரையிலும், கும்பகோணத்தில் காவிரி நதிக்கரையிலும் மாசுத்தடுப்புப் பணிகளுக்காக ரூ.29.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னைக்கு ...

★ சென்னைப் பெருநகர் நீர்வழித்தடங்கள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் ரூ.116.22 கோடி கடந்த இரண்டு ஆண்டுகளில் செலவிடப் பட்டுள்ளது.

## மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் மாசில்லாப் பணி

பெருகிவரும் சுற்றுச்சூழல் கேட்டைத் தடுக்க தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் சிறப்பான பணியை ஆற்றி வருகிறது.

★ பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களை வெளிப்படுத்தும் ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3.8.2001 அன்று துவக்கி வைக்கப்பட்டது.





★ இத்தகைய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தலா ரூபாய் 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான, 'பிளாஸ்டிக்கிற்கு எதிராக குழந்தைகள்' என்னும் திட்டம் 15.9.2001 அன்று துவக்கப்பட்டுள்ளது.

மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை

★ அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவ நுண்ணுயிர் கழிவுகளுக்காக, தனியான வசதிகள் 6 மாநகராட்சிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

★ சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதுடன் தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டுதோறும், உலக சுற்றுச்சூழல் தினம் (ஜூன் 5) மற்றும் உலக எரிப்பதற்கு எதிரான தினம் (ஜூன் 25) முதலியன சுற்றுச்சூழல் நிகழ்ச்சிகளுடன் அனுசரிக்கப்படுகின்றன.

பசுமை விருதுகள்

★ பசுமை விருதுகள், 5.6.2002, உலக சுற்றுச்சூழல் தினத்தன்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அவர்களது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாடு பணிகளுக்காக வழங்கப்பட்டன.

★ நகர்ப் பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து 37,000த்திற்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன.

## கால்நடைச் செல்வம்

சிறப்புக் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

மருத்துவ வசதி இல்லாத தொலைதூர கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை மற்றும் இனப்பெருக்கக் குறைதீர்க்கும் சிகிச்சை, செயற்கைமுறைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை, ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம் மற்றும் பல்வேறு நோய்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாத்திட தடுப்பூசி போடுதல் போன்றவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. 2001–2002 ஆம் ஆண்டில் 4,613 இலவச முகாம்களும் 2002–2003 ஆம்

ஆண்டில் 4,648 இலவச முகாம்களும் நடத்தப்பட்டு அதன் மூலம் முறையே 56.77 இலட்சம் மற்றும் 53.98 இலட்சம் கால்நடைகளும் இரு ஆண்டுகளில் பயனடைந்துள்ளன.

## டென்மார்க் உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்

2001–2002ஆம் ஆண்டில் 273 இணைப்பு தம்பதிகளும், 10,689 இலக்கு விவசாயிகளும், 2002–2003ஆம் ஆண்டில் 282 இணைப்பு தம்பதிகளும், 7,366 இலக்கு விவசாயிகளும் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர். இத்திட்டத்தின் வெற்றியினைக் கருத்தில் கொண்டு எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களிலும் ரூ.3.36 கோடி செலவில் இத்திட்டத்தினை அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. 2002–2003ஆம் ஆண்டில் திண்டுக்கல், பெரம்பலூர், திருவாரூர், கரூர், நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலுள்ள 1278 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்திட ரூ.63.48 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகையிலுள்ள அரசு கால்நடைப் பண்ணையினை மேம்படுத்திடவும், வலுப்படுத்திடவும் 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.10.698 இலட்சம் மற்றும் ரூ.8.5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

★ சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2000–2001 முதல் மார்ச் 2003 முடிய ஆதிதிராவிட பயனாளிகளுக்கு 50% மானியத்துடன் 2,196 செம்மறி ஆடு அலகுகளும் 646 வெள்ளாடு அலகுகளும் வழங்கிட தாட்கோ ரூ.4 கோடி வழங்கியுள்ளது.

★ ஏழ்மை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 10,665 குடும்பங்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலமாகப் பயனடைந்துள்ளன. 2002–2003ஆம் ஆண்டில் 127.50 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சையும், ரூ.5.71 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 118.71 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், 157.09 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசியும், 24.90 இலட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும் செய்யப் பட்டுள்ளன.

★ 1–5–2001 முதல் இத்துறையின் கட்டுப் பாட்டிலுள்ள 7,626 மொத்த பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,883 சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.



★ கடந்த 2 ஆண்டுகளில் 6,881 சங்கங்களில் பொதுக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

### இலாபத்தில் செயல்படும் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள்

2002–2003ஆம் ஆண்டு 14 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் இலாபகரமாக இயங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் டிசம்பர் 2002 வரை ரூ.14.36 கோடி இலாபத்தில் இயங்கி வருகின்றது.

### பால் குளிரூட்டும் நிலையம்

2002–2003இல் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறையில் 50,000 லிட்டர் கொள்திறன் கொண்ட ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையம், விரிவுபடுத்தப் பட்டுள்ளது.

### மகளிருக்கான பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம்

2002–2003ஆம் ஆண்டில் 48 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் 3,570 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

### தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

இப்பல்கலைக்கழகத்தின் கீழ் மூன்று கல்லூரிகள், ஐந்து ஆராய்ச்சிப் பண்ணைகள், பதினேழு பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், இரண்டு வேளாண் அறிவியல் மையங்கள், இரண்டு மீன்வளப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் ஒரு வேளாண் தொழில்நுட்பத் தகவல் மையம் ஆகியவை செயலாற்றி வருகின்றன.

★ தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேளாண்காடுகளுடன் கால்நடைகளை ஒருங்கிணைத்து வளர்க்கும் ஒரு ஆராய்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 1,113 எக்டர் தரிசு நிலப்பரப்பில் 5,235 வேளாண் குடிமக்கள் கால்நடை மற்றும் மீன் வளர்ப்பின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ தமிழகத்தில் கனடா நாட்டு சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு நிதியுதவியுடன் மூன்று தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மையங்கள் (Tele centres) வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புதுதாமரைப்பட்டியிலும் இயங்கி வருகின்றன.

★ மீன் வளர்ப்போர் பயனடையும் வகையில் தஞ்சாவூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பறக்கையிலும், மீன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றன.

★ 2001–2003ஆம் ஆண்டுகளில் பல்கலைக் கழகத்தின் பயிற்சிகளின் மூலம் 52,611 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## மீன்வளத்துறை

மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்படி, வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் ஏழை மீனவர்களுக்கு ரூ.37,000 மதிப்புள்ள வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்படுகிறது. 2001–2002ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4,000 வீடுகளுக்கு செலவினம் ரூ.1.48 கோடி. 2002–2003ஆம் ஆண்டில் மத்திய மாநில அரசின் நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும் மாதிரி மீனவ கிராம திட்டத்தின் கீழ் 4,000 வீடுகளுக்கு ஒப்புதல் அளித்திட மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், மீனவர் கூட்டுறவு சங்க அங்கத்தினர்களிடமிருந்து மாதம் ரூ.75 வீதம் ஆண்டில் 8 மாதங்களுக்கு வசூல் செய்யப்படுகிறது. அரசும் இதற்கான உதவியை அளிக்கிறது. வசூல் செய்யப்பட்ட ரூ.600 இணையான பங்கினை மாநில மற்றும் மத்திய அரசுகள் வழங்குகிறது. மொத்தத் தொகை ரூ.1,200இல் மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாத காலங்களுக்கு ஒவ்வொரு மீனவருக்கும் மாதம் ரூ.300 வீதம் வழங்கப்படுகிறது. இதன்கீழ் 2001–2002ஆம் ஆண்டு 1,91,849 பேர்களுக்கு ரூ.15.27 கோடியும், 2002–2003ஆம் ஆண்டு 1,95,996 பேர்களுக்கு ரூ.23.51 கோடி வழங்கப்படுகிறது.

மீனவர் குழு காப்புறுதித் திட்டத்தின் கீழ் மீனவர் விபத்தில் இறந்தாலோ/முழுமையாக நிரந்தர ஊனம் அடைந்தாலோ ரூ.50,000 மீனவர் குடும்பத்திற்கு வழங்கப்படுகிறது. பகுதி நிரந்தர ஊனம் அடைந்தால் ரூ.25,000 வழங்கப்படுகிறது.



இதன்படி 2001–2002ஆம் ஆண்டு 172 பேர்களுக்கு ரூ.61.15 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டு 130 பேர்களுக்கு ரூ.58.10 இலட்சமும் வழங்கப்பட்டது.

மீனவ மகளிர் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 2001–2002இல் 120 பயனாளிகள் பயன்பெற்றனர். இதற்காக ரூ.17.33 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இலங்கை கடற்படையினரால் பிடிபடும் தமிழக மீனவர் குடும்பங்களின் துயர்துடைக்க நாள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் அரசால் நிவாரணமாக, மீனவர்கள் தாயகம் திரும்பும் வரை வழங்கப்படுகிறது.

★ தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தி உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு உடனடி நிவாரணமாக ரூ.1 இலட்சம் தமிழக அரசின், மாண்புமிகு தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

★ நீலாங்கரை, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் மீனவர் அங்காடிகள் திறக்கப் பட்டன.

★ காஞ்சிபுரம் – கோவளம், நாகப்பட்டினம் – கீச்சான்குளம், தூத்துக்குடி – தருவைக்குளம், திருநெல்வேலி – இடிந்தகரை, கடலூர் ஆகிய ஊர்களில் ஏலக்கூடம் மற்றும் உலர்களம் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டது.



★ 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் 205 பேர் மீன் பிடி பயிற்சியும், 193 பேர் பொருத்துநர் பயிற்சியும் பெற்றுள்ளனர்.

★ 500 உள்நாட்டு மீனவர்கள், 25 விழுக்காடு மானியத்தில் புதிய வலைகள் வாங்குவதற்கு ரூ.12.50 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு மீனவருக்கு அதிகபட்ச மானியம் ரூ.2,500 ஆகும். இதுவரை 619 உள்நாட்டு மீனவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ 500 உள்நாட்டு மீனவ மகளிருக்கு 500 அலுமினியப் பாத்திரம் 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கும் பொருட்டு ரூ.0.75 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்து 531 மீனவ மகளிருக்கு மானியம் வழங்கப் பட்டுள்ளது.

## நாட்டுயர்வு நோக்கில் பணியாற்றும் கூட்டுறவுத் துறை

வேளாண் பெருமக்களின் நலனில் என்றென்றும் அக்கறை கொண்டும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விரைவான நடவடிக்கை மூலம் நாளும் பணியாற்றி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 2001ஆம், ஆண்டில் 6,11,193 விவசாயிகளுக்கு 226.56 கோடி ரூபாய் அளவில் வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்ய உத்தரவிட்டார்கள்.

★ ரூ.25,000க்கு மேல் ரூ.50,000 வரையிலான குறுகிய காலப் பயிர்க் கடனுக்கான வட்டியை 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகவும், ரூ.50,000–க்கும் மேலான பயிர்க் கடனுக்கான வட்டியை 16 சதவீதத்திலிருந்து 14



★ புதிய மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் ரூ.284.47 இலட்சம் 407 மகளிர் தொழில் முனைவோருக்கு கடன் வழங்கப் பட்டுள்ளது.

★ ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement Scheme) என்ற திட்டத்தை அரசு அறிவித்தது. இதுகாறும் 36,336 நபர்கள் ரூ.1028.85 இலட்சம் அளவிற்கு பயனடைந்துள்ளனர்.

சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. மகளிர் வாழ்வில் மகத்தான அக்கறையுடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வரின் விருப்பப்படி, மகளிரின் பொருளாதாரத் தன்னுரிமையை நிலைநாட்ட சில சிறப்புத் திட்டங்களின் கீழ் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் முன்னுரிமை கடன்களுக்கு (Priority Sector Loans) 1 சதவீதவட்டி குறைக்கப்பட்டு உள்ளது. சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன்களுக்கான வட்டிவிகிதம் 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக குறைக்கப் பட்டுள்ளது. உழைக்கும் மகளிருக்கும், மகளிர் தொழில் முனைவோருக்கும் வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் 15 சதவீதத்தி லிருந்து 14 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

★ சீரமைக்கப்பட்ட மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தின் கீழ் நகராட்சி, மாநகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 3.3.2003 முடிய 62,429 நபர்களுக்கு ரூ.1599.37 இலட்சம் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ சுயஉதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்துள்ளது. இதுவரை இவ்வங்கிகளில் **17,708 சுயஉதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக** சேர்க்கப்பட்டு 6,016 இலட்ச ரூபாய் அளவிற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவின் மூலம் குறைந்த விலை வேட்டி மற்றும் சேலை விற்பனைத் திட்டம்**

★ நெசவாளர்களின் இன்னலைப் போக்கும் நோக்கில் அரசு முடிவின்படி கைத்தறி வேட்டி மற்றும் சேலைகள் கூட்டுறவு நியாய விலை கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டன. இந்த மலிவு விலை கைத்தறி சேலை, வேட்டி ஆகியவற்றை 6.8.2002 முதல் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் இதுகாறும் ரூ.16.20 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டு உள்ளது.

★ **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய நடவடிக்கையின் காரணமாக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்து வந்த லெவி முறையை (100% & levy system) மாற்றி சோதனைச் சாவடிகளை அகற்று வதற்கான ஆணை 11.9.2001 அன்று வெளியிடப்பட்டுள்ளது.**

★ வியாபாரிகள் உரிமங்கள் பெறாமலேயே அரிசி/ நெல்லை எங்கு வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்லலாம் என்ற நிலையை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக மாநிலம்

முழுவதும் செயல்பட்டு வந்த 72 சோதனைச்சாவடிகள் கலைக்கப்பட்டுள்ளன. இனி விவசாயிகளும், வியாபாரிகளும், அரவையாளர்களும் சோதனைச்சாவடி அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்று புகார் கூற இடமில்லை. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகவும், நியாயமான விலையில் கிடைக்கவும் இந்த அணுகுமுறை வழி வகுக்கிறது. இனி அரிசி/நெல் கொள்முதல் செய்வதிலோ அல்லது விற்பனை செய்வதிலோ சிரமம் இருக்காது.

★ அரிசி ஆலைகளின் அரவைத் திறன் மேம்படுத்தப்பட்டு இவ்வருடம் உச்ச அளவாக 82.8 சதவிகிதத்தை அடைந்துள்ளது.

### நெல் கொள்முதல்

இவ்வரசு, மக்களுக்குத் தரமான அரிசியை வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தேவைக்கேற்ப மைய அரசிடமிருந்து அரிசியைப் பெற்றுக் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டும் மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் செய்வதில் கண்ணும்கருத்துமாக உள்ளது. இதற்கேற்ப மைய அரசின் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தை (Decentralised Procurement System) 1.10.2002 முதல் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. அதன்படி மைய அரசுக்காக நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது.

### போலி குடும்ப அட்டைகளைக் களைய கூப்பன்

ஏராளமான போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளதால் இடைத்தரகர்கள் மற்றும் கடத்தல்காரர்களும் செயல்பட்டு அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக இவ்வரசு 1.7.2002 முதல் அரிசி கூப்பன் முறையை பொதுவிநியோகத் திட்டத்தில் அறிமுகப்படுத்தி உள்ளது.

### மண்ணெண்ணெய் மற்றும் அரிசி விலை உயரவில்லை

மைய அரசின் விலை நிர்ணயப்படி, பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.9.60 வரை விற்கப்பட வேண்டும். ஆனால், இவ்வரசு 9.3.2002 முதல் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40 முதல் ரூ.9 வரை மானிய விலையில் விற்பனை செய்ய ஆணையிட்டு செயற்படுத்தப்படுகிறது.

இந்த அரசு கடுமையான நிதிப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வந்தாலும் பாகுபாடின்றி அனைத்து குடும்பங்களுக்கும் 10 கிலோ அரிசியை ஒரு கிலோவுக்கு ரூபாய் 3.50க்கு மிகவும் சலுகை விலையில் வழங்குகிறது.



### நிலங்களை அளப்போம், வளங்களை ஆராய்வோம்

### நில ஆவணங்களை கணினி மயமாக்கும் திட்டம்

மாநிலம் முழுவதிலுமுள்ள 206 வட்டங்களிலும் கணினி பொருத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 17,246 கிராமங்களுக்கான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் முடிவுற்றன. இதற்காக ரூ.164இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.




*சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு கணினிப் பயிற்சி துவக்கம் – 21.4.2003*

இதுவரை 66 வட்டாட்சியர் அலுவலகங்கள் Online செய்யப்பட்டுவிட்டன. மீதமுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள் 1.7.2003–க்குள் Online-ல் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

**தொடுதிரைக் கணினி**

பொதுமக்களின் உபயோகத்திற்காக 29 வட்டங்களில் தொடுதிரைக் கணினி (TSCK) அமைக்கப்பட்டுள்ளது. இது 15.4.2002 முதல் செயல்பட்டு வருகிறது. 8.4.2003 முடிய 51,898 நபர்கள் இந்த தொடுதிரைக் கணினியினைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

**நிலப்படங்களை**
**கணினி மயமாக்கும் திட்டம்**

நிலப்படங்களை கணினி மயமாக்கும் திட்டத்தின் கீழ் 2 முன்னோடித் திட்டங்கள் செங்கல்பட்டு, கொடவாசல், ஈரோடு மற்றும் கோபிச்செட்டிப் பாளையம் வட்டங்களில் செயல்படுகின்றன. இதுவரை 122 இலட்சம் செலவில் 1.22 இலட்சம் நிலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**10-ஆவது மானியக் குழு**

10–ஆவது நிதி மானியக் குழுத் திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் 33 கட்டடங்கள் ரூ.3.30 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

ரூ.3.5 கோடி செலவில் சென்னையில் ஆவணக் காப்பகத்திற்காக 3 மாடிக் கட்டடம் கட்டப்பட்டு 18.7.2001 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறக்கப் பட்டது.

2001–2002, 2002–2003–இல் 4,43,265 பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டது.

முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 12,19,696 பயனாளிகள் பயன் பெற்றனர்.

முதியோர் ஒய்வூதியம் பெறும் பயனாளிகளில் 1,44,973 நபர்கள் சத்துணவுக் கூடத்தில் உணவு உட்கொண்டு மாதம் 2 கிலோ இலவச அரிசி பெறுகின்றனர். 8,03,202 நபர்கள் சத்துணவுக் கூடத்தில் உணவு உட்கொள்ளாமல் மாதம் 4 கிலோ இலவச அரிசி பெறுகின்றனர்.

முதியோர் ஒய்வூதியம்: 2000–2001இல் ரூ.251.62 கோடி, 2001–2002இல் ரூ.263.07 கோடி, 2002–2003இல் ரூ.296.03 கோடி.

இலவச அரிசி: 2000–2001இல் ரூ.10.95 கோடி, 2001–2002இல் ரூ.9.21 கோடி, 2002–2003இல் ரூ.17.43 கோடி.

இலவச வேட்டி, சேலை: 2000–2001இல் ரூ.12.60 கோடி, 2001–2002இல் ரூ.12.40 கோடி, 2002–2003இல் ரூ.16.80 கோடி மதிப்பில் பயனாளிகளுக்கு உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்**

விபத்தினால் இறக்க நேரிட்டால் தமிழக அரசு பங்காக ரூ.5,000–ம் மத்திய அரசு பங்காக ரூ.10,000/–மும் ஆக ஒட்டு மொத்தம் ரூ.15,000/– இறந்தவருடைய குடும்பத்தினருக்கு (வாரிசுதாரர் களுக்கு) நிவாரணத் தொகை கொடுக்கப்படுகிறது.

## கணினி மயமாகும் பதிவுத்துறை

இதுவரை 350 அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு இவைகளில் 225 அலுவலகங்கள் 13.9.2002 முதல் செயல்பாட்டில் உள்ளது.

2001–2002இல் ரூ.1264.20 கோடி வருவாய் ஈட்டியது பதிவுத்துறை. இவை அதற்கு முந்தைய

ஆண்டைவிட 15.54 சதவிகிதம் அதிகமாகும். 2002–2003இல் பிப்ரவரி வரை ஈட்டப்பட்ட வருவாய் ரூ.1444.31 கோடியாகும். இந்த வருவாய் உயர்வு தமிழ்நாட்டில் நில விற்பனை அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டுவதாகக் கொள்ளலாம்.




**"ரெஜிநெட்"**

நாட்டிலேயே முதல்முறையாக சென்னை மாநகரில் அமைந்துள்ள 20 சார்பதிவாளர் அலுவலகங்களை இன்டர்நெட் மூலம் இணைக்கின்ற ரெஜிநெட் (REGINET) என்ற இணைப்பகத்தை பதிவுத்துறைக்கென மாண்புமிகு முதல்வர் ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.9.2002 அன்று துவக்கி வைத்துள்ளார்கள்.

**சமாதான் திட்டம்**

தனித்துணை ஆட்சியரால் பெறப்படும் ஆவணங்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் அளவுக்கு அவரால் ஆவணங்களைத் தீர்வு செய்ய முடிவதில்லை. இதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் தடைபட்டதால் இதற்காக 1.10.2002 முதல் 29.11.2002 வரை 60 நாட்களுக்கு "சமாதான் திட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு, ரூ.95.95 கோடி முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

## வணிகவரித்துறை

2001–02ஆம் ஆண்டில் வணிக வரி வருவாய் ரூ.8,905 கோடியாக 2.78 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடைந்தது.

வரி வழக்குகளையும், பூசல்களையும் குறைக்க புதிய சமாதான் திட்டம் 1–7–2002 முதல் 31–10–2002 வரை அமல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ரூ.10.43 கோடி வசூலிக்கப்பட்டது. ரூ.45.40 கோடி ஈடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, தங்கும் விடுதிகளின் மீது விதிக்கப்பட்டு வந்த ஆடம்பர வரிவிகிதம் 31–12–2002 முதல் பின்வருமாறு குறைக்கப் பட்டுள்ளது.

| நாளொன்றுக்கு தங்குவதற்கான கட்டணம் | முன்னர் வரிவிகிதம் | தற்போதைய வரிவிகிதம் |
|---|---|---|
| ரூ.200 முதல் ரூ.499 வரை | 15% | 5% |
| ரூ.500 முதல் ரூ.999 வரை | 20% | 10% |
| ரூ.1000 (அ) அதற்கு மேல் | 25% | 12.5% |

2002–2003ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி அமல்படுத்தப்பட்ட வரிவிகித மாற்றங்களினால் கிடைக்கப்பெற்ற கூடுதல் வரி வருவாய் பின்வருமாறு :

அ மறு விற்பனை மீதான வரி ரூ.143.32 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

ஆ மேல் வரி மூலம் ரூ.155.36 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

இ. தங்க வெள்ளி நகை மற்றும் மதிப்பு மிக்க கற்கள் மீதான ஆடம்பர வரி ரூ.4.56 கோடி (1–7–2002 முதல் 31–3–2003 வரை)

ஈ. நடப்பு ஆண்டில் 2001ஆம் ஆண்டு நுழைவு வரிச் சட்டத்தின் பொருட்களின் மீதான நுழைவு வரி (2002–2003) ரூ.228.77 கோடி.

2002–2003ஆம் ஆண்டிற்கான வரி வருவாய்க்கான மொத்த இலக்கு ரூ.10,240 கோடி ஆகும். ஆனால் இவ்வாண்டில் வசூலிக்கப்பட்ட மொத்த வரி ரூ.10,199.88 கோடி ஆகும். கடந்த



ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பு ஆண்டில் ரூ.1295.20 கோடி அதிகம் வசூலிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் வருவாய் வளர்ச்சி விகிதம் 14.55 விழுக்காடாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## குடும்பத்திற்கு ஒரு வீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அரசு தமிழகத்தில் நாளும் உயர்ந்து வரும் வீட்டுவசதித் தேவைகளை நிறைவு செய்வதற்காக "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்னும் உயரிய திட்டத்தினை தலையாய பணியாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், கடந்த 2 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்காக 562 மனைகளும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக 106 மனைகள், நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்காக 747 மனைகள்/குடியிருப்புகளும் மற்றும் உயர்வருவாய்ப் பிரிவினருக்காக 423 மனைகள்/குடியிருப்புகளும் ஆக மொத்தம் 1,838 மனைகள்/குடியிருப்புகள் மொத்தம் ரூ.94 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 6,548 மனைகள் மற்றும் 4,155 வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ.284.35 கோடிக்கு விற்பனை செய்துள்ளது.

### வீட்டுவசதி

★ தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2001 முதல் 2003 வரையிலான இரண்டு ஆண்டு காலங்களில் 5,828 அடுக்குமாடி குடியிருப்புகளும், 1,000 தனி வீடுகளும் மற்றும் 7,060 கல்நார் ஓட்டு கூரை வீடுகள் ரூ.60.20 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1624 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு ரூ.12.39 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதே பகுதியில், பகுதி 2இல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 1,704 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ரூ.11.42 கோடி செலவிடப் பட்டுள்ளது.

### தீப்பிடிக்காத வீடுகள் அமைத்தல்

★ சென்னை நகரில் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரைகள் 6,300 குடும்பங்களுக்கு ரூ.10.76 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் மேலும் 2,724 தீப் பிடிக்காத வீடுகள் ரூ.4.24 கோடி செலவில் அமைக்கப் பட்டுள்ளன.

★ தமிழகத்தில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு கான்கிரீட் தளம், கூரைத் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன் கூடிய 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட 1000 தனி வீடுகள் ரூ.4 கோடி செலவில் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன.

★ இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1,620 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து முடிக்கப் பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக இதுகாறும் ரூ.13.48 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் கட்டப்பட்டுள்ள சுமார் 10,000 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.6.55 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ சென்னை மாநகரில் சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஒத்துழைப்புடன் 30.4.2002 வரையிலான ஓராண்டு காலத்தில் 100 ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தண்ணீர்ப் பற்றாக்குறை உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டு ரூ.0.76 கோடி செலவிடப் பட்டுள்ளது.

★ குடிசைப் பகுதிகளில் வாழும் 38,709 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த குடும்பங்கள் ரூ.37.40 கோடி செலவில் பல்வேறு திட்டப்பணிகளின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளில் 30,124 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்காக ரூ.5.250 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ 5,251 குடியிருப்புகளுக்கு கிரயப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. 7,723 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 162 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 1,024 மனைகளுக்கு கிரயப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

★ நகர்ப்புறப் பூங்காக்களைப் பராமரிக்கும் முகத்தான் திருச்செங்கோடு மற்றும் தூத்துக்குடி நகரங்களுக்கு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.2.40 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த இரண்டாண்டில் கிராமிய மற்றும் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டங்களின்கீழ் 39,818 வீடுகள் கட்டிட ரூ.620.83 கோடி ரூபாய் கூட்டுறவு வீட்டுவசதித் துறை மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ புதுடெல்லியில் 3.11.2001 அன்று நடைபெற்ற 13ஆவது தேசிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் கருத்தரங்கில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ ஜெயலலிதா விருது வழங்கப்பட்டுள்ளது.

★ தவணை தவறும் வட்டித் தொகைகள் தள்ளுபடி செய்யும் திட்டத்தின்கீழ் இதுவரை 76,145 பயனாளிகள் ரூ.33 கோடியளவுக்கு பயனடைந்துள்ளனர்.

## சிறந்த காவல்துறை

*"இன்று இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும், மிகச் சிறந்த காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான். சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில், நிலை நாட்டுவதில், பராமரிப்பதில் இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதல் இடம் வகிக்கிறது. குற்றங்கள் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில் தான் பிற மாநிலங்களை விட மிகவும் குறைவாக இருக்கின்றன.*

*இந்த நல்ல நிலை தொடர வேண்டும். இந்தியாவிலேயே சிறந்த காவல் துறை தமிழ்நாடு காவல் துறை தான் என்ற பெருமையை நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். நம் காவல் துறையின் திறமை மென்மேலும் வளர வேண்டும். காவல் துறையின் தரம் மேம்பட வேண்டும் என்பது தான் இந்த அரசின் நோக்கம் ஆகும். காவல் துறையினரின் பணி மிகவும் கடினமான பணி. நாட்டில் எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன. எத்தனையோ விதமான பணிகள் இருக்கின்றன. ஆனால், எல்லாவற்றையும் விட மிகவும் கடினமான, ஆபத்து நிறைந்த சிரமமான பணி காவல் துறையினரின் பணி ஆகும். இத்தகைய ஆபத்து நிறைந்த சிரமமான கடினமான பணியை விரும்பி ஏற்றுள்ள காவல் துறையினர் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுதல் களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்".*

– *காவல் துறைப் பணியாளர்களின் குறை தீர்க்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்.

## காவல் கரங்களை ஊக்கும் கரங்கள்

★ காவல்துறைக்கு போக்குவரத்து மிக இன்றியமையாததாகும். 2002–2003–ஆம் ஆண்டில் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக வாங்கப்பட்ட வாகனங்கள் உட்பட 1244 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டன.

*"எங்கு அமைதி ஆட்சி செலுத்துகிறதோ, அங்கு வளர்ச்சி வளர்பிறை ஆகிறது. தமிழகம் இந்தியாவில் முதல் நிலை நோக்கி, முன்னேறி வருகிறது என்றால், தமிழகத்தில் நிலவுகின்ற அமைதியும், அதற்கு ஒரு முக்கிய காரணம்.*

*கடந்த இரண்டு ஆண்டு காலமாக, தமிழகம், சாதிப்பூசல் அற்ற, மதக் கலவரம் இல்லாத மாநிலமாக விளங்கி வருகிறது. இது தற்செயல் விளைவு அல்ல – இது ஒரு சாதனை! நாம், நமது சிந்தனையாலும், செயலாலும் படைத்த சாதனை. இதற்கு எது காரணம்? சகல மக்களையும் ஒன்றாகக் கருதும், நம்து மனப்பான்மை ஒரு காரணம்! மக்கள் இந்த அரசின் மீது வைத்த, மாபெரும் நம்பிக்கை ஒரு காரணம்! காவல் துறையின் இடையறாத கண்காணிப்பு, இன்னொரு காரணம்!*

*தமிழகக் காவல் துறை, இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக விளங்குகிறது. இந்தப் பாரம்பரியச் சிறப்பை இன்னும் உயர்த்துகின்ற, உயரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது, இந்த அரசு".*

*– சட்டப்பேரவையில்*
*மாண்புமிகு முதலமைச்சர்*
செல்வி **ஜெ ஜெயலலிதா** *அவர்கள்*

★ 1.1.2002இல் 7,433 ஆக இருந்த தமிழ்நாடு காவல்துறையின் வாகன எண்ணிக்கை 28.2.2003இல் 8,677 ஆக உயர்ந்துள்ளது.

★ உணவு மானியத் திட்டத்துக்கு காவலர்களின் குடும்பங்களின் நலன் கருதி, பொது விநியோக விலையில் தோராயமாக 72 சதவீதம் 9 வகையான உணவுப் பொருள்கள் (மண்ணெண்ணெய் உள்பட) வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக 2002–2003 வருடத்தில் ரூ.226.49 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.

★ தமிழ்நாடு காவலர் சேமநல நிதிக்கு 2002–2003 ஆம் ஆண்டு முதல் ரூ.50 இலட்சம் கொடையாக வழங்கி வருகிறது.

★ காவலர்களின் குழு காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பணி நிமித்தமாக செல்லும்போது விபத்துகளில் மரணம் ஏற்பட்டால், அவர்களின் வாரிசுதாரருக்கு ரூ.1 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை வழங்கப்பட்டு, 2002–2003 ஆம் வருடத்தில் ரூ.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு அதிவீரப்படை மற்றும் சிறப்பு பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களுக்கு குழு காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10 இலட்சம் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

## கருணைத் தொகை

வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு காயம் அடையும் காவல் பணியாளர்களுக்கும் அல்லது இறந்தவரின் குடும்பத்திற்கு கருணைத் தொகை கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| இறந்தால் | ரூ. 5 இலட்சம் |
| நிரந்தரமாக உறுப்பு இழந்தால் | ரூ. 1 இலட்சம் |
| கொடுங்காயம் அடைந்தால் | ரூ. 20,000/– |
| சிறுகாயம் அடைந்தால் | ரூ. 10,000/– |

வீரதீரச் செயல்புரிந்து, இறந்து போகும் காவல் பணியாளர் அவர் கடைசியாக பெற்று வந்த ஊதியத்தையே அவர் பணி முதிர்வு ஒய்வுபெறும் வரை, அன்னாரின் வாரிசுக்கு குடும்ப ஒய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## பரிசுத் திட்டம்

★ காவல் துறையினரின் குழந்தைகளுக்கான பரிசுத் தொகை 2002–2003–ஆம் ஆண்டுக்கு 215 மாணவர்களுக்கு வழங்குவதற்கு ரூ.9,70,000 செலவழிக்கப்பட்டது.

★ காவல்துறையில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெறாத களப்பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரி அளவில் உயர்கல்வி பெற உதவித்தொகை வழங்கப் படுகிறது.

## கருணை அடிப்படையில் நியமனம்

பணிக்காலத்தில் மரணமடைந்த அரசு ஊழியரின் வறுமை நிலையிலுள்ள வாரிசுதாரருக்கு 2002–2003ஆம்




வருடம் 30 இளநிலை உதவியாளர்கள், 14 ஆயாக்கள், 216 காவலர்கள் / பெண் காவலர்கள் (24 பெண் காவலர்கள் + 192 ஆண் காவலர்கள்) ஆகியோர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. 805 கணினி ஆபரேட்டர்கள், 225 வீட்டு ஏவலர்கள் மற்றும் 63 அடிப்படைப் பணியாளர்கள் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. 249 நபர்கள் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் / அலுவலக உதவியாளர்கள் / காவலர்கள் / காத்திருப்போர் பட்டியலிலிருந்து காவலர்களாக பணி நியமனம் செய்ய ஆணை வழங்கியுள்ளது.

## அதிரடிப்படை வீராங்கனைகள்

இந்தியாவிலேயே பெண் கமாண்டோக்களை உருவாக்கிய பெருமை, தமிழக காவல் துறைக்கே உண்டு. அந்தப் பெருமையை தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்.

## போலீஸ் அகாடமி

- ★ காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான முன்னோடி பயிற்சி நிலையமாக தமிழ்நாட்டில் "போலீஸ் அகாடமி" நிறுவப்படுகிறது.

- ★ காவல் நிலையங்களுக்கும் மாவட்ட காவல் அலுவலகங்களுக்கும் அடிப்படை வசதிகளை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

- ★ மாவட்டங்களில் தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வலுப்படுத்தப்படுகின்றன.

2001–02 மற்றும் 2002–03 ஆகிய இரு ஆண்டுகளில் காவல்துறையை நவீனப்படுத்து வதற்காக தமிழக அரசு ரூ.136.20 கோடி நிதி உதவி அளித்துள்ளது.

## தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம்

- ★ 3,581 ஆண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிக்குப் பின்னர் அணிகளுக்கு நியமனம் செய்யப்பட்டனர். மேலும், 300 பேர் பயிற்சியில் உள்ளனர். விரைவில் 961 பெண் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 631 மகளிர் காவலர்களையும் தேர்வு செய்யும் பணி முடிவுறும் நிலையிலுள்ளது.

- ★ ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு அனைத்து மகளிர் காவல்நிலையம் என்ற அடிப்படையில் 2001 ஆம் ஆண்டு, 126 மகளிர் காவல் நிலையங்களை கூடுதலாக நிறுவ உள்ளதாக அரசு அறிவித்தது. 2001–2002 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக உதவிக்கரம் வசதியுடன் 50 மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக, அரசாணை பல்வகை எண்.625 உள்துறை (காவல் 14) நாள் 18.7.2002 கீழ் மேலும் 40 மகளிர் காவல் நிலையங்களைத்



திறக்க ஒப்பளித்தது. அவற்றில், 27.1.2003 அன்று 37 காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இக்காவல் நிலையங்களில், குழந்தைகளுக்கான உதவிக்கரம், வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் தற்பொழுது 146 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

★ சென்னை நகரில் 1091 மற்றும் 1098 ஆகிய இரு தொலைபேசி எண்களை சுழற்றினால் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு உதவிக்கரம் அளிக்கப்படுகிறது.

★ கூடுதல் காவல்துறை இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் மதுவிலக்கு அமல்பிரிவு சிறப்பாகப்பணியாற்று கின்றது.

## சமுதாயக் காவல் முறை

★ சமுதாயக் காவல் முறை சென்னை நகரம், அசோக் நகர் மாவட்டத்தில் 9.11.2002 அன்று ஒரு வித்தியாசமான முறையில் தொடங்கப்பட்டது. இந்த மாவட்டம் 29 ரோந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு, காலை மற்றும் மாலை நேரங்களில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மக்களின் அத்தியா வசியத் தேவையான குடிநீர், மின்சாரம், அவசர சிகிச்சை வாகனம் போன்ற பணிகளுக்கும் காவல் பணியாளர்களின் சேவை பயன்படுத்தப் படுகிறது.

## சிறப்பு சுற்றுக் காவல் பணிகள் (ஊர்க்காவல் படை)

★ சென்னை நகரில் ஒப்பளிக்கப்பட்ட 2,147 ஊர்க்காவல் படையினரில் 500 ஊர்க்காவல் படையினரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் இரவு ரோந்துப் பணிக்கு அமர்த்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

★ சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்தவும் 81 மஞ்சள் படை மற்றும் 81 நீலப்படை முறையே காலை மற்றும் இரவு நேரங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதுவரை 815 காவல்துறை நண்பர்கள் ரோந்துப் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.

## சிறப்பு சுற்றுக்காவல் குழுக்கள்

பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் உதவியுடன் சென்னை நகரில் உள்ள தியாகராயர் நகர் பகுதியிலும், வடக்கு மண்டலத்திலும் சிறப்பு சுற்றுக் காவல் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிசிடிவி கண்காணிப்பின் மூலம் தியாகராயர் நகர் ரங்கநாதன் தெரு முழுவதும் கண்காணிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



★ உயர்மட்டக் குழு தவிர, மகளிர் ஆலோசனைக் குழு சென்னை நகரில் அமைக்கப்பட்டு செயல்படுவதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் நன்கு பராமரிக்கப்படுகின்றன.

## சிறப்புப் படை அமைப்பு

25.4.2002 அன்று நடைபெற்ற காவல்துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றத்தில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதிதாக வீராபுரத்தில் தலைமையகத்தையும் மற்றும் வீராபுரம் (சென்னை), கோயம்புத்தூர், மதுரை, வேலூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆறு அணியுமாக "சிறப்புப் படை" அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அவ்வறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு "சிறப்பு செயல்படை" என்ற பெயரில் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் அணி ஒன்றை உருவாக்க அனுமதி அளிக்கப்பட்டது. இதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் "உதவி ஆய்வாளர் பயிற்சி அகாடமி" அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள்.

## அனைத்து மகளிர் சிறப்புக் காவல் அணி

10.12.2002 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை அதிகாரிகள் கூட்டு மாநாட்டில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து மகளிர் காவல் அணியைப் பெற்றிருக்கும் முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு வெகு விரைவில் அடைய உள்ளதாக அறிவித்தார்கள்.

## இரயில்வே காவல்படையின் சாதனைகள்

★ 2002– ஆம் ஆண்டில், சிறு குற்றங்களில் ஈடுபட்ட 17,694 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேச காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் மயக்க பிஸ்கட்டுகளைக் கொடுத்து கொள்ளையடிக்கும் கொல்கத்தாவைச் சேர்ந்த மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர். பிரபல குற்றவாளிகள் 11 பேர் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். குழந்தைகளைக் கடத்திச் செல்வோர் மீது கடும் நடவடிக்கை எடுத்து, 51 சிறுமியர், 10 சிறுவர்களை, சென்னை மற்றும் கோவை ரயில்வே காவல் நிலையத்தினர் மீட்டனர். மேலும் வீட்டை விட்டு ஓடிப்போன 102 பெண்களை மீட்டனர்.

★ 239 மதுவிலக்கு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு, ரயில்களில் கடத்திச் செல்லப்பட்ட 5,340 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள், 45,646 கள்ளச் சாராய பாக்கெட்டுகள், 46 கிலோ கஞ்சா, 5,350 கிலோ அரிசி ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

## நாட்டைக் காப்போருக்கு வீட்டைக் கட்டித்தரும் காவலர் வீட்டுவசதிக் கழகம்

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் தற்போது புதுப்பொலிவுடன் செயலாற்றி வருகிறது.

இக்கழகத்திற்கென சிறப்பு அலுவலகம் இல்லாததை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட உத்தரவிட்டார்கள். அதன்படி சென்னை, கீழ்ப்பாக்கம் 132, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையில் ரூ.1.50 கோடி மதிப்பில், 15 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் 3 மாடிகளைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடத்தை 3.3.2003 அன்று திறந்து வைத்தார்கள்.

## சீரிய செயல்பாடுகள்

2002–03 ஆம் ஆண்டில் 2,600க்கும் அதிகமான குடியிருப்புகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

## சிறைத்துறை

★ கிளைச் சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிச் சிறைகளாக மாற்றி அரசு ஆணையிட்டுள்ளது. அச்சிறைகளில் சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக கணிப்பொறிப் பயிற்சி அளிக்க ஏதுவாக வரலாற்றுச் சிறப்பு மிக்க திறனாய்வுப் போட்டியினை நடத்த முன்வந்து, தமது பங்காக ரூ.6.08 இலட்சம் நிதி ஒதுக்கீடும் செய்து இப்போட்டியினை சென்னையில் சிறப்பாக நடத்தியது சிறைவரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். ரூ.85.30 இலட்சம் செலவில் திருவைகுண்டம் கிளைச்சிறையினை முதல் மாவட்ட சிறையாக நிலைஉயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

இவ்வரசு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக புதிய உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங் களின் விற்பனை கடந்த ஆண்டுகளைவிட குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. கள்ளச் சாராயம் மற்றும் தீர்வை செலுத்தாத மதுபானங்களை ஒழிக்கவும் உதவி அரசிற்கு வருவாய் இழப்பை தடுத்ததுடன், கூடுதல் வருவாய் பெறவும் வழிவகுத்துள்ளது. இப்புதிய உரிமம் வழங்கும் முறையினால் அரசு கருவூலத்திற்கு இத்துறையின் மூலம் 2000–2001ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ.3,373.56 கோடிக்கு மாறாக 2003–2004ஆம் ஆண்டில் ரூ.3,808.35 கோடி கிடைத்துள்ளது.

இந்த அரசு பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளினால் 2002–2003ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் மெத்தனால் தொடர்பான எந்த ஒரு உயிர்ச்சேத சம்பவமும் நிகழவில்லை.

ரூ.2.5 கோடி செலவில் மறுவாழ்வுக் குழு மற்றும் மறுவாழ்வு நிதி ஏற்படுத்த ஆணை வெளியிடப் பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள கரும்புள்ளி கிராமங்களையும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல்/ விற்பதில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளையும் கண்டறிந்து, அவர்களை இத்தகைய தீங்கு விளைவிக்கும் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்கள் மாற்று வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான பொருளுதவி, மானியங்கள் மற்றும் கடன்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## சட்டத்துறை

★ பெங்களூரில் உள்ள இந்திய தேசிய சட்டப் பள்ளியின் தர நிலைக்கு சென்னையிலுள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியின் தரநிலையை உயர்த்தியும் 5 ஆண்டு பி.ஏ,பி.எல்., (ஹானர்ஸ்) சட்டப்படிப்பில் 80 மாணவர்களை சேர்ப்பதற்கும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அதற்கு இணங்க சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் 2002–2003ஆம் கல்வியாண்டில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டு வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக பாடத்திட்டத்தின்படி தமிழில் சட்டப் புத்தகங்களை எழுத சட்டக் கல்லூரி ஆசிரியர்கள் அரசால் பணிக்கப்பட்டுள்ளனர்.

★ சட்டத்துறை பெரும்பாலான சட்டங்களை மொழி பெயர்த்துள்ளது. இவ்வாறு மொழி பெயர்க்கப் பட்டவை மைய அரசின் ஒப்புதலுடனும் இந்திய குடியரசு தலைவரின் அதிகாரத்துடனும் இருமொழி பதிப்பால் வெளியிடப்பட்டுள்ளன. 16.4.2003 அன்று இருமொழி பதிப்பில் உள்ள 60 மையச் சட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

## கல்வி என்னும் ஒளி விளக்கு

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை –

– இது வள்ளுவர் வாக்கு

கல்விப் பணிகளுக்கு தடையில்லா நிதி உதவி அளித்து தகைசால் சமுதாயத்தை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நிகழ்த்தப்படாத பல சாதனைகளை கடந்த 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் கல்வித்துறையில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ளது.

★ தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் "அனைவர்க்கும் கல்வித் திட்டம்" 2001–2002–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2010 வரை செயல்படுத்தப்படும். முதற்கட்டமாக, பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக ரூ.1,649 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திய அளவில் திட்ட அறிக்கை முடிவு செய்த முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

★ "அனைவர்க்கும் கல்வி" திட்டத்தின் கீழ் 2001–2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ரூ.184.22 கோடி செலவில் பல பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ 2001–2003 ஆகிய இரு ஆண்டுகளில் 756 தொடக்கப்பள்ளிகள், 676 நடுநிலைப் பள்ளிகள், 220 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 260 மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டன.

★ முதல் முறையாக கல்வித்துறைக்காக நபார்டு வங்கியிடம் கடன் பெற்று இரண்டு கட்டமாக 346 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.99 கோடி செலவில் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

★ ஆசிரியர் பயிற்சி சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 4,661 தரம் வாய்ந்த மாணவர்கள் குறைந்த செலவில் ஆசிரியர் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் உள்ள இடங்கள் உயர்த்தப்பட்டு ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,560 நபர்கள் கூடுதலாகப் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ பள்ளி ஆண்டுத் தேர்வில் 6–12 வகுப்புகளில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில்



தோல்வியுறும் மாணவர்களுக்கு உடனடி மறு தேர்வு நடத்தப்பட்டு 10-ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் மட்டும் 56,063 மாணவர்கள் 2002-ஆம் ஆண்டில் பயன் பெற்றார்கள்.

✶ ஆசிரியர் இடமாற்றலில் வெளிப்படையான கலந்தாய்வு முறை பின்பற்றப்பட்டு சுமுகமான முறையில் ஆசிரியர்கள் இடமாறுதல் நடைபெறுகிறது.

✶ 6, 7, 8 வகுப்புகளில் பி.எட். தகுதி பெற்ற பட்டதாரி இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

✶ 10,178 ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

✶ பள்ளிகளில் பி.டி. ஆசிரியர் மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் போட்டித் தேர்வு மூலம் திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

✶ மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மேற்பார்வையிட தனி இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது.

✶ இளைஞர் விளையாட்டுத் திறன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவியல் தொழில் நுட்பத்துறைக்கு அயராத ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள்.

ஆராய்ச்சித் திட்டம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சங்கள் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 15 ஆய்வுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காக கடந்த இரண்டாண்டுகளில் ரூ.40 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

### மாணவர் ஆராய்ச்சித் திட்டம்

இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பில் இறுதியாண்டில் பயின்றுவரும் மாணவர்களுக்கு சமூகத்திற்கு உபயோகமுள்ள ஆராய்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு திட்டம் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் 370 மாணவர் ஆராய்ச்சித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து நிறைவேற்றியதில் 1200 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். மொத்தம் ரூ.23 இலட்சங்கள் இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

### தமிழக அறிவியலறிஞர்கள் விருது

10 துறைகளைச் சார்ந்த சிறந்த அறிவியல் அறிஞர்களை ஊக்குவித்து பெருமைப்படுத்துவதற்காக கடந்த இரண்டாண்டுகளில் 20 அறிவியலறிஞர் களுக்கு ரூ.2 இலட்சங்கள் ரொக்கமாகவும் தாமிரப் பட்டயங்களும் வழங்கப்பட்டு உள்ளன.

### அறிவியல் வெளியீடுகளுக்கு நிதியுதவி

தமிழில் வெளிவந்த அறிவியல் வெளியீடு களுக்கு ரூ.1.40 இலட்சங்கள் ஊக்க ஆதரவுத் தொகை வழங்கப்பட்டுள்ளன.

### அறிவியல் தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

அறிவியல் தொழில்நுட்பப் பயன்களை விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே பரப்ப கடந்த இரண்டாண்டுகளில் 162 கல்வி நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.26.22 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனால் மொத்தம் 1 இலட்சத்து 62 ஆயிரம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறிவியல் விழிப்புணர்ச்சியடைய வாய்ப்பு பெற்றனர்.

### உலகப் புகழைத் தேடித்தரும் உயர்கல்வி

✶ தமிழக அரசு, அண்ணா பல்கலைக்கழக (திருத்தப்பட்டது) சட்டம் 2001-இன் மூலம் தமிழக மாநிலத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் சனவரி 2002 முதல் அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழா ஆண்டை 4-9-2002 முதல் 3-9-2003 வரை கொண்டாடுகிறது.

கல்வித்தரம்

✶ தற்போதைய சமுகத்தின் தேவைகளுக்கு பொருத்தமான பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அவை சார்ந்த அறிவியல் உயர்கல்வியை அண்ணா பல்கலைக்கழகம் அளிக்கிறது.

✶ ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நடவடிக்கைகளை விளக்கமுடன் செய்யும் கூட்டு செயற் பாட்டினைப் பெற இந்திய வெளிநாட்டு முதன்மை தொழிலகங்களுடனும், கல்வி நிறுவனங்களுடனும் அண்ணா பல்கலைக் கழகம் கருத்து உடன்பாட்டறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறது.

✶ பல்கலைக்கழக மானிய ஆணையம் அண்ணா பல்கலைக்கழகத்திற்கு 2002இல் மிக உயர்ந்த தரவீதமான ஐந்து நட்சத்திரத் தகுதியை தொழில்நுட்பக் கல்வியின் சிறப்பிற்காக ஐந்து வருடத்திற்கு வழங்கியது.



*காமன்வெல்த் போட்டிகளில் வென்றவர்களுக்கு நிதியுதவி - 24.3.2003*

அண்ணா பல்கலைக்கழகம் ஐந்து அமெரிக்க காப்புரிமைகளை புற்றுநோய், நீரிழிவு நோய், செயலறு நிலை இவற்றைத் தடுக்கும் மூலிகை மூலக்கூறுகளில் பெற்றுள்ளது. குறிப்பிட்ட திசு இலக்குகளும் மூலக்கூறுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மேலும் ஐந்து மூலக்கூறுகள் காப்புரிமை பெற ஆயத்த நிலையில் உள்ளன.

இந்திய வான்வெளி ஆராய்ச்சி கழகத்திலிருந்து நுண்துணைக்கோள் உருவாக்க மூன்று கோடி நிதியுதவியுடன் அண்ணா பல்கலைக்கழகம் பெருமைப்படத்தக்க திட்டத்தைப் பெற்றுள்ளது. இது பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனங்களுடனுள்ள உறவை வலுப்படுத்தும். பல்கலைக்கழகத்தின் இலக்கில் இது ஒரு முக்கியமான படியாகும்.

## இளையோர் நலம் மற்றும் விளையாட்டுக்கள்

இன்றைய இளைஞன் நாளைய வளம்மிக்க வரலாற்றை உருவாக்குகிறான். இன்றைய இளைஞன் நாளைய சாதனையாளன்.

சதுரங்க அரங்கம் மற்றும்
கத்திச் சண்டை அரங்கம்

✶ சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், சதுரங்க அரங்கம் அமைக்க ரூ.9.05 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு 3.1.2003 அன்று திறந்து வைக்கப்பட்டது. இது பல சதுரங்க வீரர்களுக்குப் பயன்படுகிறது.

✶ கத்திச்சண்டை அரங்கம், உள்ளரங்க விளையாட்டரங்கத்தில் ரூ.3.85 இலட்சம் செலவில் உருவாகி வருகிறது.

✶ மாநில மற்றும் தேசிய விளையாட்டுக்களில் பங்கேற்கும் வீரர்கள் காயமடைந்தாலோ, இறந்தாலோ அவருக்கு நிதி உதவி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. செல்வி கே.சோலைமதி, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறையினரால், ரூ.2 இலட்சம் நிதிஉதவி பெற்றார்.

✶ ஜப்பானில் நடந்த உலகக்கராத்தே போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற நாகப்பட்டினம் என்.வி.ஆர். வாசுதேவனுக்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

✶ உலகத்தர வரிசைக்கான டென்னிஸ் போட்டியில் பங்கேற்ற செல்வி ரூஷ்மி சக்ரவர்த்திக்குத் தமிழ்நாடு அரசு ரூ.4 இலட்சம் வழங்கியது.

உயர் ஊக்கத்தொகை

இதில் மான்செஸ்டர் காமன்வெல்த் நீளம் தாண்டுதல் போட்டியில் தாமிரப்பதக்கம் வென்ற திருமதி. அஞ்சு ஜார்ஜுக்கு ரூ.11.50 இலட்சமும், வலுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.டி.முத்துவுக்கு ரூ.17.25 இலட்சமும், குழுப்போட்டிகளில் டேபிள் டென்னிஸில் தாமிரப் பதக்கங்கள் பெற்ற திரு.எஸ்.இராமனுக்கு ரூ.20 இலட்சமும் பரிசாக உயர் ஊக்கத்தொகையாக வழங்கப்பெற்றன.

தென் கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் பெற்ற திருமதி. அஞ்சு ஜார்ஜுக்கு ரூ.23 இலட்சமும், ஸ்னூக்கர் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற திரு.ரபித்ஹபீப் அவர்களுக்கு ரூ.23 இலட்சமும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

விளையாட்டு வீரருக்கு வேலைவாய்ப்பு

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறையில் விளையாட்டு வீரர்களுக்கு 10 விழுக்காடு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடும், சிறந்த வீரர் அடிப்படையில் சிறைத்துறையில் 10 விழுக்காடு வேலைவாய்ப்பும் அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி உதவித்தொகை

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் உயர் / மேனிலை வகுப்பிலும், கல்லூரியிலும் பயிலும் தேர்ந்தெடுக்கப் பட்ட 73 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.4.17 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

நீச்சல் குளம்

திருச்சிராப்பள்ளி மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.80 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற்ற நீச்சல் குளம் 10.3.2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

## சென்னை அரசு அருங்காட்சியகத்தின் அரும்பணிகள்

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் 151 ஆவது ஆண்டு ஆகும் இதனை நினைவுகூரும் வகையில் தொடர்ச்சியான பல நிகழ்ச்சிகளை, நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இவ்வருங்காட்சியகத்துக்கு 2001–2002ஆம் ஆண்டில் ரூ.62 இலட்சம் செலவிடப்பட்டது.

★ பாறை மற்றும் குகை ஓவிய காட்சிக் கூட அமைப்பு மற்றும் அகச்சிவப்பு கதிர்கள் மூலம் ஒலி, ஒளிக் காட்சிகள் செம்மையாக அமைக்கப்பட்டன.

★ 2002–2003 ஆம் நிதியாண்டில் ரூ.370.50 இலட்சம் செலவிடப்பட்டு பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ இலண்டனில் உள்ள குளோப் கலையரங்க பாணியில் அமைக்கப்பட்ட நூற்றாண்டு பழமை வாய்ந்த அருங்காட்சியகக் கலையரங்கம் மீட்டுருவாக்கப்பட்டது.

★ மாண்புமிகு தமிழக முதல்வர் எண்ணியபடி, படிமக்கூடம் மற்றும் வளர்கலைக் கூடம் பராமரிக்கப்பட்டு குளிர்சாதனங்கள் பொருத்தப் பட்டுள்ளன. இக்கூடங்களில் நவீன ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ இவ்வருங்காட்சியகத்தில், புகைப்படங்கள் கி.பி.1805 ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை ஒருங்கிணைத்துப் பட்டியலிட்டுக் குறுந்தகடுகளிலும் காகிதங் களிலும் அச்சிடப்பட்டு பாதுகாக்கப்பட உள்ளன.

★ 'சென்னை மாகாண மொழி மற்றும் பேச்சு வழக்கு – வரி வடிவம்' என்ற நூல் வெளியிடப் பட்டது. தற்பொழுது இக்குறுந்தகடுகளும் புத்தகமும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

தமிழக அரசின் நிதி உதவியால் இவ்வருங்காட்சியகத்தின் பாரம்பரியக் கட்டடங்கள் மீட்டுருவாக்கி பாதுகாத்து அவற்றில் மீண்டும் மேம்படுத்தப்பட்ட வகையில் காட்சியமைப்புகள் அமைக்கப்பட பெருமுயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

## அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம்

சென்னை அண்ணா நகரிலுள்ள அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையம் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவர்களுக்கு அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதுவதற்குப் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி மையம் மாணவர்களுக்கு இறுதித் தேர்வு எழுதப் பயிற்சி அளிப்பதோடு, மாதிரி நேர் காணலையும் நடத்துகிறது. 2001–இல் இம்மையத்தில் பயிற்சி பெற்ற 21 நபர்களுக்கு அகில இந்தியப் பணிகளில் பணி வழங்கப்பட்டது. 2002–இல் 28 மாணவர்கள் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

## தகவல் தொழில்நுட்பம்

தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பத் துறையில், நாட்டில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது. இவ்வாண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி செய்து, 900–க்கும் மேற்பட்ட மென்பொருள் ஏற்றுமதி நிறுவனங்களையும், 50,000க்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட மாநிலமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின் கீழ், தமிழ்நாடு மீண்டும் சிறப்பாகச் செயலாற்றியுள்ளது.

*மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் முன்னிலையில், இணையச் சேவை (Web Services) இணைய வழிக் கல்வி (e-learning), மின்–ஆளுமை (e-Governance) ஆகிய செயற்பாடுகளுக்காக தமிழ்நாடு அரசு, அண்ணா பல்கலைக்கழகம், சன் மைக்ரோ சிஸ்டம் ஆகிய மூன்று அமைப்புகளும், சன் மைக்ரோ சிஸ்டத்தின் நிறுவனத் தலைவரும், முதன்மைச் செயல் அலுவலருமான ஸ்காட் மெக்நியலி அவர்கள் அண்மையில் சென்னை வந்திருந்தபோது, ஒரு உடன்பாட்டு ஒப்பந்தம் (MOU) செய்து கொண்டனர். மின் ஆளுமையில் சிறந்த அறிஞரும் சிந்தனையாளருமான திரு.டக்லஸ் ஹோமஸ் என்பவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மூத்த அரசு அதிகாரிகளுக்கு ஒரு பயிலரங்கினை நடத்தினார்.*

மாநிலம் முழுவதும் 14,000 கி.மீ.க்கும் மேலாக பொது மற்றும் தனியார் தொலைத் தொடர்பு வழங்குபவர்கள் (Private Communication Providers-PCP) ஒளி இழை வடங்கள் (Optical Fiber Cable-OFC) அமைத்துள்ளார்கள். இதனால், இந்தியாவில் மிகுதியாக இணைக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.



"தகவல் தொழில்நுட்பத் துறைப் பொருட்காட்சியான 'சிபிட் 2003'–இல் இந்திய அரசுடன், ஒரு கூட்டாளி மாநிலமாகத் தமிழக அரசு பங்குபெற்றது.

அரசுத் துறைகளின் செயலாற்றத் திறனை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படும். குடிமக்களுக்கான மின்வழிச் சேவை (EDS) என்னும் முன்னோடித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இச்சேவை இவ்வாண்டு மேலும் உயர்த்தப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அரசின் தகவல் தொழில்நுட்ப கொள்கை, தகவல் தொழில்நுட்பத்தில் தமிழின் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. அதற்கிணங்க, அனைத்து அரசுத் துறைகளின் இணைய தளங்களையும் இரு மொழி தளங்களாக மாற்றுவதற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனமும், தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சான்றிதழ், பட்டப்படிப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வரால் தொடங்கிவைக்கப்பட்டன. தமிழில் ஆப்டிக்கல் கேரக்டர் ரீடர் (தமிழ் OCR) என்னும் மென்பொருள் ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

உலக அளவிலான பயன்பாட்டிற்காக தமிழ் மென்பொருள் மற்றும் மின் நூலகம் (Digital Library) ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

மின்னணு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து, அரசு, தொழிற்கூடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் ஒரு வழிகாலாக எல்காட் (ELCOT) செயல்பட்டு வருகின்றது.

தகவல் தொழில்நுட்ப முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதற்கு எல்காட் (ELCOT) கருத்தரங்கங்களையும், கண்காட்சி களையும் நடத்தியுள்ளது. தேசிய மற்றும் உலகக் கருத்தரங்க நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றுள்ளது.

## கனெக்ட் 2002

2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 முதல் 22ஆம் தேதிகளில் சென்னையில், தமிழக அரசு, எல்காட் (ELCOT) மற்றும் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII) ஆகிய நிறுவனங்களுடன் சேர்ந்து கனெக்ட் 2002 (Connect 2002) என்ற நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றின் வளரும் முறைகளும் (Emerging Trends) வாய்ப்புகளும் பற்றி கருத்தாய்வு செய்யப்பட்டன.

தமிழக அரசு, எல்காட் (ELCOT) நிறுவனத்தை முன்னிறுத்தி இந்திய அரசு மற்றும் பாரிஸ் நகரிலுள்ள பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (Organisation for Economic Co-operation and Development - OECD) ஆகியோரின் துணையோடு "இந்திய ஆசிய வளர்ச்சியில் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு ஒன்றினை நடத்தியது. இம்மாநாடு நவம்பர் 2002இல் சென்னையில் நடத்தப்பட்டது.

டிசம்பர் 2002இல் டெல்லியிலும் சென்னையிலும் இந்திய வர்த்தக வளர்ச்சி நிறுவனம் (India Trade Promotion Organisation - ITPO) ஸ்விட்சர்லாந்தில் ஜெனிவா நகரில் உள்ள உலக வர்த்தக மையம் மற்றும் எல்காட் (ELCOT) ஆகிய நிறுவனங்கள் இணைந்து இரண்டு நாள் மாநாடு ஒன்றினை நடத்தியது.

ஜனவரி 2003இல் 'மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களின் தேசிய கூட்டுச் சங்கம்' உச்சி மாநாடு ஒன்றினை நடத்தியது, எல்காட் (ELCOT) மற்றும் நாஸ்காம் (NASSCOM) ஆகிய நிறுவனங்கள் தமிழக அரசு சார்பில் இந்த பொருட்காட்சியின் முக்கிய அமைப்பாளர்களாகச் செயல்பட்டனர்.

டிசம்பர் 10–2002இல் கோவையில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் இணைந்து 'தகவல் தொழில் நுட்பத்தில் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் மாநாடும், அக்டோபர் 2002 இல் திருச்சியில் இந்திய தொழிற்கூடங்களின் கூட்டமைப்புடன் (CII)

இணைந்து ITES மற்றும் BPOல் வணிக வாய்ப்புகள் என்ற தலைப்பில் மாநாடும், மார்ச் 11, 2003இல் மதுரை மற்றும் திருநெல்வேலி வட்டாரங்களை இணைத்து 'தொழில் முனைவோர் முன்னேற்ற மையத்துடன்' (Centre for Entrepreneurship Development) இணைந்து தகவல் தொழில் நுட்பத்தில் சாத்தியப்பட்ட சேவைகள் (ITES) வாய்ப்புக்கள் பற்றிய வட்டார கருத்தரங்கம்' என்ற தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கமும், மார்ச் 25, 2003இல் சோனா பொறியியல் கல்லூரி மற்றும் 'இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவினருடன்' (STPI) இணைந்து தகவல் தொழில்நுட்பத்தில் சாத்தியப்பட்ட சேவைகளின் (ITES) வாய்ப்புக்கள்' என்ற தலைப்பில் ஒரு வட்டார கருத்தரங்கமும் நடத்தப்பட்டது.

## இந்தியா சாஃப்ட் 2003:

பிப்ரவரி 2003இல் புதுடெல்லியில் 'மின்னணு மற்றும் கணினி மென்பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆலோசனைக்குழு' (Electronics & Computer Software Export Promotion Council - ESC) ஏற்பாடு செய்த 'India Soft 2003' என்ற பொருட்காட்சியில் எல்காட் (ELCOT) ஒரு அரங்கம் அமைத்தது.

## துபாயில் GITEX:

அக்டோபர் 2002 இல் துபாயில் நடைபெற்ற உலகின் மூன்றாவது பெரிய தகவல் தொழில்நுட்பப் பொருட்காட்சி, உலகின் முன்னணி தகவல் தொழில் நுட்ப (IT) முதலீட்டு நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டை அறிமுகம் செய்யும் வாய்ப்பை அளித்துள்ளது.

## சிபிட் 2003 (CEBIT 2003)

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12–19 ஆம் நாட்களில் ஜெர்மனியிலுள்ள ஹானோவர் (Hannover) நகரில் பன்னாட்டு அளவில் பெரிய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொழில் மற்றும் தொலைத் தொடர்புப் பொருட்காட்சி நடத்தப்பட்டது. அந்தப் பொருட் காட்சியில் தமிழ்நாடு, ESC - உடன் பங்கேற்றது.

வரும் ஆண்டுகளில் RASI திட்டம் மாநிலத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கம்

சென்னையில் டைடல் (TIDEL), எல்நெட் மென்பொருள் நகரம் மற்றும் கோவையில் டெக்ஸ்சிட்டி மென்பொருள் பூங்கா முதலான பல்வேறு தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை எல்நெட் உருவாக்கியுள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையை, தகவல் தொழில்நுட்பப் பூங்காவாக உருவாக்க சிறப்பு முயற்சி எடுக்கப்படும். பெருங்குடியில் தகவல் தொழில் நுட்பம் சார் சேவை மற்றும் வணிகச் செய்முறைகள் வெளியே செய்தலுக்கான மையம் ஒன்றினை உருவாக்க எல்காட் (ELCOT) முயற்சி மேற்கொள்ளும்.

## தொலைத் தொடர்புத் திட்டங்கள்

ஒளிப்படக் கலந்துரையாடல் அமைப்பு (Video Conferencing System) நிர்வாகத் தரத்தை உயர்த்தும் பொருட்டு ஆளுமையில் தகவல் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தும் தமிழக அரசுக் கொள்கையின் ஒரு பகுதியாக அரசு அலுவலர்களுக்காக ஒளிப்படக் கலந்துரையாடல் வலை அமைப்பு (Video Conferencing Network) ஒன்றினை எல்காட் (ELCOT) நிறுவனம் நிறுவியுள்ளது. இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வலைஅமைப்பு கீழ்காணும் இணைப்புகளைக் கொண்டுள்ளது.

- ★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் மாநாட்டு அறையில் பொருத்தப் பட்டுள்ள, ஒரே நேரத்தில் மூன்று ஒளிப்படக் கலந்துரையாடல் அழைப்பைக் காணும் வசதி கொண்ட பல்முனைக் கலந்துரையாடல் அமைப்பு
- ★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலர் மற்றும் நிதி உள்துறை மற்றும் பொதுத்துறைச் செயலாளர்கள்.
- ★ அனைத்து 29 மாவட்ட ஆட்சியர்கள்
- ★ காவல்துறையின் 52 கள அலுவலர்கள்

நாட்டில் மிக விரிவான ஒன்றான இந்த ஒளிப்படக் கலந்துரையாடல் வசதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள்.

வருவாய்த் துறையின் சார்பாக கம்பியில்லா உயர் அலைவரிசை (Wireless High Frequency) அதி உயர் அலைவரிசை (VHF) பேரிடர் இடருதவி (Calamity Relief) மற்றும் நெருக்கடி தொலைத் தொடர்பு வலை அமைப்பு (Emergency Communication Network) போன்ற பணிகளை தொலைத் தொடர் பிரிவு செயல்படுத்தி வருகிறது.

### அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி

1,200 உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி நிகழ்ச்சியை தமிழக அரசு செயலாற்றி வருகிறது.

### தொடுதிரைக் கணினி

முன்னோடி அடிப்படையில் ஆண்டிபட்டி தொகுதியில் (குறை தீர்ப்போம்) என்ற வலைத்தள கியோசக் ஒன்று நிறுவப்பட்டது. இது வெற்றிகரமாக இயங்குகிறது.

மாநிலத்திலுள்ள பிற சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் ஸ்டார் திட்டத்தை விரிவுபடுத்தும் பணியை எல்காட் நிறுவனம் எடுக்கவுள்ளது. அனைத்து இந்திய முன்மாதிரியாயுள்ள தமிழக அரசின் இம் மின் ஆளுமை முயற்சியை ஒரு தலைசிறந்த மின் ஆளுமை முயற்சியாக இந்திய அரசு தெரிந்தெடுத்துள்ளது.

வரவு செலவுத் திட்ட 2003-04 உரையில் அறிவிக்கப்பட்டது போல் வரும் ஆண்டுகளில் 206 வட்டங்களில் உடனடித் தொடர்புச் (ON LINE) சேவைகள் அளிக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

2002-2003ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 100 துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான தகவல் தொழில் வன்பொருள் மற்றும் மென்பொருட்களை எல்காட் நிறுவனம் வெற்றிகரமாக கொள்முதல் செய்து முடித்துள்ளது.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

உலகு தழுவி வாழும் தமிழ்மக்கட்கும், தமிழில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ் மொழியைக் கற்கவும், தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக அளிக்கும் நோக்கத்தோடு, தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியது.

### மின் நூலகம்

மின் நூலகத்தில் இலக்கியம், உரைகள், அகராதிகள், கலைச்சொற்கள் ஒலி-ஒளிப்படக்காட்சிகள், படக்காட்டியகம் ஆகியன உருவமைக்கப்பட்டு இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. இதுவரை 76,192 பக்கங்களை உள்ளடக்கிய 169 புத்தகங்கள் இணையதளத்தில் இடப்பட்டுள்ளன. 54,427 பக்கங்களை உள்ளடக்கிய 180 புத்தகங்களை இணையதள உள்ளீடு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள 126 சைவ மற்றும் வைணவக் கோயில்களின் ஒலி-ஒளிப்படக்காட்சிகளின் தொகுப்புகளும் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளது.

### தமிழ்த் தகவல் தொழில்நுட்பப் பணிகள்

தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியின் கீழ், கீழ்க்கண்ட தமிழ் மென்பொருள்கள் உருவமைக்கப் பட்டுள்ளன.

1. பொன்விழி – ஒளி வழித் தமிழ் எழுத்துரு அறிவி (Tamil OCR)
2. தமிழ் தேடு பொறி (Tamil Search Engine)
3. தமிழ் இணையதள உலாவி (Tamil Web Browser)
4. தமிழில் விண்டோஸ் 95, 98
5. இதழ் 2000 – தமிழ் சொற்செயலி (Tamil Word Processor)
6. தமிழ் அச்சு எழுத்திலிருந்து ஒலி உருவாக்கும் மென்பொருள் (Tamil text to Voice Synthesizer)

'பொன்விழி' – தமிழ் OCR என்னும் தமிழ் மென்பொருள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2002 ஜுன் திங்கள் 22-ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.

## இலவச மின்சாரம் – ஒளி வீசும் உண்மைகள்

மின்வாரியத்தின் வரலாற்றில் முதன் முறையாக தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் 2001–02 மற்றும் 2002–03 ஆகிய ஆண்டுகளில் மிக நன்றாகச் செயல்பட்டு, ஒரே சமயத்தில் இந்திய அரசின் தங்கப்பதக்கம் / ரொக்கப் பரிசுகள் பெறத் தகுதிப் பெற்றுள்ளன.

இந்தியத் தரச் செயலக நிறுவனம், வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு (3 X 210 மெகாவாட்) அதன் தரமான அமைப்பை அங்கீகரிக்கும் வகையில் ஐ எஸ் ஓ (ISO) – 9002 : 1994 தரச்சான்றிதழை 1.1.2003 முதல் வழங்கியுள்ளது.

தனியார்த் துறையில் சமயநல்லூரில் 106 மெகாவாட் நிறுவுதிறன் கொண்ட மின்திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தனியார்த் துறையில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் 16.12.2002 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

வழுதூரில் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 95 மெகாவாட் திறனுடைய வாரியத்தின் சொந்த மின் திட்டம் 13.3.2003 அன்று இயக்கி வைக்கப்பட்டது.

தேசிய அனல் மின் கழகத்தின் இராமகுண்டம் மிகுதிறன் அனல் மின் நிலையம் –III (500 மெகாவாட்)லிருந்து 118 மெகாவாட் மின்சாரத்தைப் பெறுவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதல்வரின் முன்னிலையில் 12.9.2001 அன்று கையெழுத்திடப்பட்டது.

மேலும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் அனல் மின் நிலையம் – I விரிவரக்கம் (2 X 210 மெகாவாட்) மற்றும் அனல் மின் நிலையம் – II விரிவாக்கம் ஆகிய திட்டங்களிலிருந்து 493 மெகாவாட் மின்சாரத்தைப் பெறுவதற்கான இரு ஒப்பந்தங்கள் மாண்புமிகு முதல்வரின் முன்னிலையில் 20.9.2001 அன்று கையெழுத்திடப்பட்டது.

விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் மொத்தம் ரூ.977 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

*"நம்முடைய நோக்கம், நம்முடைய எண்ணம், இந்த அரசின் இலக்கு சிறு, குறு விவசாயிகள் இலவசமாக மின்சாரத்தைப் பெறவேண்டும்.*

*இப்போது உலக வங்கி சில ஷரத்துக்களைப் போட்டிருப்பதால் அந்த ஷரத்துக்களுக்கு உட்பட்டு ஆணையம் சில விதிமுறைகளை விதித்திருப்பதால் அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு நம்முடைய இலக்கை நாம் அடையவேண்டும். விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும். அதேநேரத்தில் இந்த ஷரத்துக்களை நாம் மீறக்கூடாது. இதற்கு என்ன வழி என்று யோசித்தோம். ஆகவே, இன்றையதினம் இந்த அரசு வகுத்திருக்கும் திட்டத்தின்படி யாருக்கு அந்த உதவி போய்ச் சேர வேண்டுமோ நேரடியாக அவர்களுக்குப் போய் சேருகிறது.*

*ஒரு சிறு விவசாயிக்கு 3 Horse Power Pumpset வைத்திருக்கும் ஒரு சிறு விவசாயிக்கு ஆண்டு ஒன்றுக்கு 750 ரூபாய் கட்டணம் வரும் என்று கணக்கிட்டு அவருக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறோம். அவரே அதைக் கொண்டு போய்ச் செலுத்துகிறார். ஆகவே, அந்தச் சட்டத் தேவையும் நிறைவு செய்யப்படுகிறது. அரசாங்கம் நேரடியாக அவர்களுக்குப் பணம் கொடுப்பதால், அதை உலக வங்கிக்கு இலவச மின்சாரம் இல்லை என்று நாம் சொல்லிக்கொள்ளலாம். அதே நேரத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தை நாமே அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறோம். ஆகவே, அந்த விவசாயி பயனடைகிறார். அவருக்கு மேலும் 250 ரூபாய் கிடைக்கிறது.*

*அதைப் போலவே, 5 எச்.பி. பம்பு செட் வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 1,250 ரூபாய் கட்டணம் ஆகிறது என்று சொன்னால், அந்தத் தொகையை அரசாங்கமே கொடுத்து விடுகிறது. இதன் மூலம் யாருக்கு இந்த உதவி போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு மட்டும் இந்த உதவி போய்ச் சேரும். மின்சாரம் திருட்டு போகிறது, அது தடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்''.*

*– சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2003–2004ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் மீது ஆற்றிய பதிலுரையிலிருந்து.*




இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மின்சாரத்தின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

ஏற்கெனவே இலவச மின்சாரம் பெற்று வரும் சிறு மற்றும் குறு விவசாயிகளை இந்த சுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக அவர்கள் ஓர் ஆண்டிற்கு ரூ.1000 என்ற வீதத்திலும் ஐந்து குதிரைத் திறன் பம்பு செட் வைத்திருந்தால் ஓர் ஆண்டிற்கு ரூ.1,250 என்ற வீதத்திலும் நேரடி உதவித்தொகை வழங்க தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும் ஒவ்வொரு குடிசை இணைப்புக்கும் ஒரு வருடத்திற்கு ரூ.100 நேரடி உதவித்தொகையாக அளிக்க அறிவித்துள்ளது. இதனால் 9.41 இலட்சம் சிறு / குறு விவசாயிகள் மற்றும் 14 இலட்சம் குடிசை இணைப்புகள் தொடர்ந்து இலவச மின்சாரத்தைப் பெறுவர்.

### தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

இந்நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டு (2001–2002 மற்றும் 2002–2003) காலத்தில் ரூ.423.60 கோடியை நிகர வைப்பீட்டுத் தொகையாகத் திரட்டியுள்ளது. ரூ.354.84 கோடியைத் தவணை கொள்முதல் கடன் மற்றும் நீண்டகாலக் கடனாகக் கொடுத்துள்ளது.

2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில், இந்நிறுவனத்தின் மொத்த நிகர இலாபம் ரூ.44.56 கோடி ஆகும். இந் நிறுவனம், ஆண்டிற்கு ரூ.4.40 கோடி வீதம் இரண்டு ஆண்டுகளில் ரூ.8.80 கோடியை ஈவுத் தொகையாக தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது.

## போக்குவரத்துக்குப் புதுப்பொலிவு

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் தான் மக்களின் அன்றாட வாழ்க்கை அல்லல் இல்லாமல் கழிகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அந்தத் துறை அடுக்கடுக்கான பணிகளை மேற்கொண்டு வளர்ச்சி கண்டு வருகிறது.

ஒரு நிறுவனம் இலாபம் ஈட்டினால்தான் அது பொலிவாக இருக்க முடியும். போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட நடவடிக்கை மேற்கொண்டு பேருந்து கட்டணத்தில் மாற்றம் செய்து ஓரளவு நட்டம் குறைக்கப்பட்டது.

எண்ணெய் நிறுவனங்களால் டீசல் விலை உயர்த்தப்பட்ட நிலையிலும், புதிய பேருந்துகள் இயக்கப்பட்டதன் மூலம் மக்களுக்கு சிறப்பான பணியை ஆற்றிவருகிறது. 21 போக்குவரத்துக் கழகங்களை



7 கழகங்களாக ஒருங்கிணைக்க முடிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக மாநகர போக்குவரத்துக் கழகம் கோட்டம் –1 மற்றும் 2, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 1 மற்றும் 2, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோவை மற்றும் உதகை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைக்க விரைந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.150 கோடி மதிப்பில் 1,550 புதிய பேருந்துகள் வழங்க அனுமதிக்கப்பட்டு 3 போக்குவரத்துக் கழகங்கள் 263

புதிய பேருந்துகளை 2001 டிசம்பர் வரை தடங்களில் இயக்கியுள்ளன. எல்லா போக்குவரத்துக் கழகங்களும் பிப்ரவரி 2003 வரை 1,036 புதிய பேருந்துகளை போக்குவரத்து வளர்ச்சி நிதிநிறுவனத்தின் கடன் மூலமாக வாங்கியுள்ளன.

பேருந்துகளின் இயக்கத்திறனை மேம்படுத்தவும் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், 2001 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பராமரிப்பு வாரம், பிரேக்டவுன் இல்லா வாரம், பாதுகாப்பு வாரம், மரியாதை வாரம் ஆகியவை நடத்தப்பட்டது. பேருந்துகளின் தோற்றம் மேம்படுத்தப்பட்டு பயணிகளை ஈர்த்து வருவாய் உயர வழி செய்யப்பட்டுள்ளது.

புதுடெல்லி எ.எஸ்.ஆர்.டி.யு. (ASRTU) வின் 2001–2002 ஆண்டுக்கான டீசல் சிக்கனத்துக்கான விருதை திருநெல்வேலி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் பெற்றுள்ளது.

## மக்கள் குறை தீர்ப்பில் மாபெரும் புரட்சி

பொதுமக்களுடன் தொடர்புடைய அனைத்து அலுவலகங்களும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த விதிமுறைகளையும் வரைமுறைகளையும் விளம்பரம் செய்தல் வேண்டும். பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அரசு ஆணை 15.6.2001 வெளியிடப்பட்டது. அதன்படி,

★ கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட ஐந்து தினங்களுக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

★ மனுக்கள் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் இறுதி முடிவெடுக்கப்பட வேண்டும்.

★ ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மனுநீதி நாள் நடத்துவதைப்போன்று கோப்பு முடிக்கும் வாரம் நடத்த வேண்டும். திங்கட்கிழமை அரசு விடுமுறையாக இருந்தால் அதற்கு அடுத்த நாளில் கோப்புகள் முடிக்கும் வாரம் நடத்த வேண்டும். மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக மனுதாரருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

★ துறைச் செயலாளர்கள், நிலுவையில் உள்ள கோப்புகளை நுண்ணாய்வு செய்வதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை வழங்க வேண்டும்.

★ கணினியில் மேல்நடவடிக்கை எடுத்த விவரங்கள் அன்றாடம் பதிவு செய்யப்பட வேண்டும்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (வேலைவாய்ப்புப் பிரிவு)

1. இந்த அரசு பொறுப்பேற்றதன் பின் எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கையின் விளைவாக கடந்த இரண்டாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யாத 3,214 நபர்கள் தனியார்த் துறைகளில் பணியமர்த்தம் செய்யப் பெற்றனர்.

2. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த 30441 நபர்கள் பணியமர்த்தம் செய்யப் பெற்றனர்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெறப்பட்ட 45,730 மனுக்களில் 41,647 மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

4. கண்பார்வையற்றோருக்கான வேலை வாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ் பட்டதாரி மற்றும் மேல்வகுப்பு பயின்றவர்களுக்கு ரூ.300. புகுமுக வகுப்பு/ மேல்நிலைப்பள்ளி படிப்பு பயின்றவர்களுக்கு ரூ.250/–ம், பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குகீழ் பயின்றவர்களுக்கு ரூ.200/–ம் ஒவ்வொரு மாதமும் நிவாரணமாக வழங்கப்படுகிறது. கடும் நிதிப் பற்றாக்குறைக்கு இடையேயும் 2001–2002ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 1,132 பயனாளிகளுக்கு ரூ.27.14 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

5. 2002–ஆம் ஆண்டில் ரூ.6.72 இலட்சம் செலவில் 1,150 இந்த ஆதிதிராவிடர் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு தொழிற்கல்லூரி நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்களுள் 254 மனுதாரர்கள் தொழிற் கல்லூரிகளில் சேரத் தேர்வு பெற்றனர்.

6. 2001–2002 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக சுயவேலை வாய்ப்புக்காக 1,464 விண்ணப்பதாரர்கள் ரூ.771 இலட்சம் கடன் உதவி பெற்றனர்.

★ 2000–ஆம் ஆண்டில் 29,080 ஆக இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 2001–இல் 31,433 ஆகவும் 2002இல் 32,773 ஆகவும் உயர்ந்துள்ளது.

★ கடந்த இரண்டாண்டுகளில் பயனடைந்த தொழிலாளர்கள் 2000 – 11,86,448, 2001 – 12,23,060, 2002 – 12,37,653.

பணி நிரந்தரத் தகுதி கடந்த இரண்டாண்டுகளில்

அ) நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கை 43,043

ஆ) சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,693



*கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நிதியுதவி – 28.11.2002*

வழக்குகள்

கடந்த இரண்டாண்டுகளில் கடும் முரண்பாடுகள் காணப்பட்ட நிர்வாகத்தினர் மீது தொடரப்பட்ட வழக்குகள் 6,073, நீதிமன்ற அபராதத் தொகை வசூல் ரூ.90,10,215.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

கடந்த இரண்டாண்டுகளில் 1.1.2002 முதல் 31.12.2002 வரை குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு சம்பந்தமாக 164 வழக்குகள் தொடரப் பெற்றன. அபராதத் தொகை வசூலானது ரூ.3,43,000.

பாதுகாப்பு விருதுகள்

31.3.2003 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் மாநிலப்பாதுகாப்பு விருதுகள் முதல் பரிசு 198 நிர்வாகத்தினர்களுக்கும், இரண்டாம் பரிசு 134 நிர்வாகத்தினர்க்கும் வழங்கப்பட்டன. மற்றும் அதே விழாவில் 2000 ஆண்டுக்கான 'உயர்ந்த உழைப்பாளர்' விருதுகள் 101 தொழிலாளர்களுக்கு ரூ.1,44,000/– தொகையில் வழங்கப்பட்டன.

## தொழிலாளர் துறை

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 1,30,525 தொழிலாளர்கள் பதிவு செய்யப் பெற்றனர். இதன் மூலம் 8,856 கட்டுமானத் தொழிலாளர்கள் ரூ.5,12,19,324/– உதவித்தொகை பெற்றனர்.

2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்துக்கென சென்னையில் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.11.2002 அன்று திறந்து வைக்கப்பட்டது.

3. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சமூகப்பாதுகாப்பு மற்றும் நல வாரியங்களில் 1,44,798 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களுள் 2,536 தொழிலாளர்களுக்கு ரூ.79,71,000 உதவித் தொகை வழங்கப்பட்டது.

4. தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தின் நலத்திட்டங்களின் கீழ் 17,766 பயனாளிகள் ரூ.54,88,690/– உதவித் தொகை பெற்றனர்.

## மாநிலத் திட்டக் குழுவின் மகத்தான பணிகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், முனைவர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டு 17.9.2001 அன்று மாநிலத் திட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டது. இக்குழுவில் மூன்று பகுதி நேர உறுப்பினர்கள், ஒரு முழுநேர உறுப்பினர், உறுப்பினர்–செயலர், மற்றும் வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறை செயலர், திட்டம் மற்றும் வளர்ச்சித்

துறை செயலர், விவசாயத் துறை செயலர் ஆகியோர் பதவி வழி உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

மாநிலத் திட்டக் குழுவிற்கு, முக்கியமான இனங்களுக்கு இலக்கு நிர்ணயித்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் தயாரித்து அவ்வப்போது அந்த இலக்குகளை கண்காணித்தல் முக்கியப் பணியாக அளிக்கப் பட்டுள்ளது. மேலும் மனித வளர்ச்சிக் குறியீடு (Human Development Index) மற்றும் பாலின வளர்ச்சிக் குறியீடு (Gender Development Index)களுக்கான குறியீடுகளின் வளர்ச்சியைக் கண்காணித்தல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் எடுத்தலும் முக்கியமான பணியாகும்.

## பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

தேசிய வளர்ச்சிக் குழுமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைகள் மற்றும் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு, மாநிலத் திட்டக்குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டது. இதற்கென பல்வேறு பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பணிக்குழு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. இப்பணிக்குழு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவுக் கண்ணோட்டம் (Draft outline) தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் மற்றும் மாநிலத் திட்டக்குழுத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது வறுமை ஒழிப்பு, முதன்மைத் துறையில் விரைவான வளர்ச்சி, தொழில் துறையில் வளர்ச்சி வேகத்தை மீட்பது மற்றும் சேவைத்துறையில் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து வளர்ச்சிப்பாதையை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்ச திட்டங்களை உள்ளடக்கி மாநிலத்தின் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநில மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமான வளமான வாழ்விற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் இக்குறிக்கோள்களை எய்த இயலும்.

## தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான வளர்ச்சி விகிதம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2010இல் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயித்துள்ளார். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது 2002–2003 முதல் 2006–2007 வரை மாநில மொத்த வருமானத்தில், ஆண்டுக்கு 8 சதவீத வளர்ச்சி விகிதத்தை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளது. 2010இல் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டுமெனில், தனிநபர் வருமான வளர்ச்சி விகிதமானது ஆண்டுக்கு 9 சதவீதத்தை எட்ட வேண்டியுள்ளது. தற்போது மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1 சதவீதமாக உள்ள நிலையில், 2010இல் மாநில மொத்த வருமானத்தின் வளர்ச்சி விகிதம் 10 சதவீதத்தை எட்ட வேண்டியுள்ளது. இந்த இலக்கினை, பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (2002–2007) 8 சதவீத வளர்ச்சி விகிதத்தையும், 2007–2010ஆம் ஆண்டுக் காலத்தில் 13 சதவீத வளர்ச்சி வீதத்தையும் எய்துவதன் மூலம் அடைய இயலும்.

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக்குழுவின் துணைத்தலைவர் ஆகியவர்களிடையே 12–6–2002 அன்று புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டிற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.40,000 கோடி என முடிவு செய்யப்பட்டது.*

## மரபைக் காக்கும் தொல்லியல் துறை

மரபுப் பாதுகாப்புக்காக தொல்லியல் துறைக்கு 2001–2002ஆம் ஆண்டிற்கு ரூ.15.58 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டுக்கு ரூ.170 இலட்சமும் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மரபுப் பாதுகாப்பு நிதியிலிருந்து வரலாற்று நினைவுச் சின்னங்கள், தொன்மைமிக்க கலைப் பொருட்கள், கல்வெட்டுக்கள் மற்றும் ஓலைச் சுவடிகளின் நிழற்படங்களை கணினி மற்றும் குறுந்தகடுகளில் மாற்றிப் பாதுகாக்க திட்டமிடப்பட்டுள்ளது.



ஆண்டுதோறும் முதுகலைப்பட்டம் பெற்ற 8 மாணவர்களுக்கு கல்வெட்டு மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## சமூக நலப் பணிகளில் புத்தெழுச்சி

தமிழ்நாட்டில் உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்ற முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

தமிழக அரசு பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.200 பணவிடை மூலம் உதவித்தொகை வழங்குகிறது. மேலும் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும், சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ இலவச அரிசியும், உணவு உட்கொள்ளாதவர்களுக்கு 4 கிலோ இலவச அரிசியும் வழங்கி வருகிறது. இது தவிர ஆண்டு ஒன்றுக்கு பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகையின்போது இலவசமாக ஒரு வேட்டி அல்லது சேலை வழங்குகிறது.

மேற்கண்ட திட்டத்தில் தமிழக அரசு பயனாளிகளுக்கு வழங்கிய உதவித்தொகை 2001–2002இல் ரூ.284.68 கோடியும், 2002–2003இல் ரூ.330.26 கோடியும் ஆகும்.

தமிழ்நாடு நலிந்தோர் உதவித் திட்டத்தின் கீழ் 2000–2001ஆம் ஆண்டு ரூ.17.91 கோடியும், 2001–2002ஆம் ஆண்டு ரூ.14.79 கோடியும் செலவிடப் பட்டது.

### பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

குடும்பக் கட்டுப் பாட்டிற்கு ஊக்கமளிக்கவும், ஆண் குழந்தைகள் மட்டுமே வேண்டும் என்ற எண்ணத் தினை கட்டுப்படுத்தவும் தமிழக அரசால் பெண் குழந்தைகள் மேம்பாட்டிற்காக பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992இல் துவங்கப் பட்டது. அதிக பணப்பயன் கிடைக்கும் வகையில் இத்திட்டம் புத்துயிரளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆண் குழந்தை இல்லாது ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பத்தில் பெற்றோர்களில் ஒருவர் கருத்தடை செய்து கொண்டால், அக்குழந்தையின் பெயரில் அரசு நிரந்தர வைப்பு நிதியாக ரூ.22,200–ஐ குழந்தையின் பெயரில் செலுத்தும், இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து, அப்பெண் குழந்தையின் ஆரம்பக் கல்வி முதல் பள்ளிக் கல்வி முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.150 வழங்கப்படும். 20 ஆண்டுகள் கழித்து வட்டியுடன் கூடிய முதிர்வு தொகை வழங்கப்படும்.

ஆண் குழந்தை இல்லாது இரு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்தில் பெற்றோர்களில் யாரேனும் ஒருவர் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் அரசு ரூ.15,200–ஐ தொடக்க வைப்பீடாக செலுத்தும். இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆரம்பக் கல்வி முதல் பள்ளிக் கல்வி முடிக்கும் வரை மாதம் ஒன்றுக்கு தொகை ரூ.150 வழங்கப்படுவதோடு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொருவருக்கும் வட்டியுடன் கூடிய முதிர்வுத் தொகை வழங்கப்படும். 2001–2002இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2 கோடியில் ரூ.178.48 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1171 குழந்தைகளும் பயன் பெற்றுள்ளனர்.

2002–2003இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1270.75 இலட்சம் இத்திட்டத்தில் திட்டம்–1ல் 39 குழந்தைகளும், திட்டம்–2இல் 6,978 குழந்தைகளும் பயன்பெற்றுள்ளனர்.

## தத்தெடுத்தல்

குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறையும் நாட்டமும் கொண்டுள்ள இந்த அரசு அக்குழந்தைகளுக்கு ஓர் குடும்ப சூழலை ஏற்படுத்த தத்து திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. மக்களிடையே தத்து திட்டம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் மூலம் தத்து திட்டம் ஊக்குவிக்கப்படுகிறது.

மாவட்டத்திற்கு ஓர் தத்து நிறுவனம் துவங்க அரசு முயற்சி செய்து வருகிறது. இம்முயற்சியின் விளைவாக 2001இல் பதினைந்தாக (15) இருந்த அங்கீகரிக்கப்பட்ட தத்து நிறுவனங்களின் எண்ணிக்கை இரண்டாண்டுகளில் இருபத்தி மூன்றாக (23) உயர்ந்துள்ளது.

## தொட்டில் குழந்தைத் திட்டம்

1992 முதல் மே 2001 வரை 150 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர். பின்னர் 51 கைவிடப்பட்ட குழந்தைகளின்றி, 528 தொட்டில் குழந்தைகள் பெறப்பட்டு உள்ளனர். மொத்தம் பெறப்பட்ட 729 குழந்தைகளில் 542 குழந்தைகளைக் குடும்ப சூழலை ஏற்படுத்தித் தரும் வகையில் தத்து நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் 43 ஆண் குழந்தைகளும், 499 பெண் குழந்தைகளும் அடங்கும். இத்திட்டத்தின் மீது அரசு மிகுந்த அக்கறையினையும் ஆர்வத்தையும் செலுத்தி வருகிறது.

★ விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடபுத்தகம் மற்றும் குறிப்பேடுகள் ஆகியவை 38,434 பேர்களுக்கு 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டன.

★ ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண உதவித் திட்டத்தில் 2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகள் 1,729 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

★ அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 231 பேர் 2001–2003 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பயன்பெற்றுள்ளனர்.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் கடந்த இரு ஆண்டுகளில் 321 பேர் பயனடைந்துள்ளனர்.

★ தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்படி 2,356 பேர் நிதிஉதவி பெற்றுள்ளனர்.

★ 2001–2002ஆம் ஆண்டு, நான்கு திருமண உதவித் திட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட மாறுதல் செய்யப்பட்டுள்ளது. அனைத்து திருமண உதவித் திட்டங்களின் கீழ் திருமண உதவி பெற மணமகளின் வயது 18லிருந்து 20ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப் பட்டுள்ளது. அதேபோன்று அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ½ கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தில் உள்ள பள்ளிகளுக்குப் பேருந்து மூலம் பயணம் செய்யும் 10,11,12ஆம் வகுப்பு பயிலும் அரசு



முதல்வரின் அரவணைப்பில் மகளிரின் மகிழ்ச்சியான வாழ்க்கை

குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர்களுக்கு 2002–2003ஆம் ஆண்டு முதல் இலவச மிதிவண்டி வழங்கப்படுகிறது. 372 பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றார்கள். இத்திட்டத்திற்காக ரூ.5.61 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சி

- பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத அமர்த்தப்படும் உதவியாளர்களுக்கு உதவித் தொகை 2001–2002ஆம் ஆண்டில் ரூ.1.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 261 பேர்கள் பயனடைந்துள்ளனர். 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.1.67 இலட்சம் நிதிஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 265 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளைப் பராமரிக்கும் மூன்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியமாக (ரூ.7400 x 3) ரூ.22,200 ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 96 பேர் பயனடைந்துள்ளனர்.

- மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு மருத்துவ உதவிகள் செய்து பராமரிக்கும் மதுரை, சிஷ்டி தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு அரசு மானிய உதவியாக 2001–2002ஆம் ஆண்டிற்கு முதல் தவணையாக ரூ.42,000 அனுமதிக்கப்பட்டு 54 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

- 96 சிறப்புப் பள்ளிகளின் விடுதியில் தங்கிப் பயிலும் ஊனமுற்ற மாணவ/மாணவியர்களுக்கு உணவூட்டு மானியம் தலா ரூ.200 வீதம் 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.99.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 7,218 பேர்கள் பயனடைந்துள்ளனர். 2002–2003ஆம் நிதியாண்டில் ரூ.96.24 இலட்சம் ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 4,822 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

- காது கேளாதோர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி மையம், சிறுமலர் காது கேளாதோர் பயிற்சி மையத்திற்கு, ஆசிரியர் ஊதியம், கல்வி உதவித்தொகை மற்றும் சில்லறைச் செலவினமாக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 32 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

- ஊனமுற்றவர்களுக்கு தடையற்ற சுற்றுச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் தலைமைச் செயலகத்தில் ரூ.20 இலட்சம் செலவில் சாய்வுதளமும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சாய்வுதளமும் அமைக்க ரூ.45 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.





இவ்வரசு பதவியேற்றவுடன் 2001–2002 நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது ஊனமுற்றோர் கடன் பெற ஏதுவாக ரூ.4 கோடிக்கு அரசு முழு உத்தரவாதம் வழங்கியது. எல்லா மாவட்டங்களிலும் தகுதி வாய்ந்த ஊனமுற்றோருக்கு கடனுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஆற்றிய சாதனைகள்

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் கலோரி அதிகம் கிடைக்கும் உணவை உட்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஒவ்வொரு குழந்தைக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் 20 கிராம் உருளைக் கிழங்கு, 20 கிராம் பச்சைப் பயறு மற்றும் 20 கிராம் கொண்டைக் கடலை அளிக்கப்பட வேண்டும் என்னும் புதிய முறையை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- ✧ வாரத்திற்கு ஒருமுறை அளிக்கப்படும் முட்டைக்குப் பதில் மேற்குறிப்பிட்டவாறு



உருளைக் கிழங்கு, பச்சைப் பயறு மற்றும் கொண்டைக் கடலை வாரத்தில் மூன்று நாட்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிடப் பட்டது. முட்டை வழங்குவதில் கண்டறியப்பட்ட சீர்கேடுகளைக் களையவும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்ற குழந்தைகளின் ஊட்டச்சத்தை அதிகரிக்கும் நோக்கோடும் இந்த புதிய முறை

### ஊனமுற்றோருக்கான திருமண உதவித் திட்டம் - ஊக்கத் தொகை உயர்வு

- ✧ காது கேளாத வாய் பேசாதவரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.
- ✧ கை, கால் ஊனமுற்றோரைத் திருமணம் செய்யும் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை ரூ.7,000–லிருந்து ரூ.10,000ஆக 2002–2003 முதல் உயர்த்தி வழங்கப் படுகிறது.

### பராமரிப்பு உதவித்தொகை - பயனாளிகள் எண்ணிக்கை உயர்வு

கடும் ஊனத்தால் பாதிக்கப்பட்ட பராமரிப்பு உதவித்தொகை பெறும் பயனாளிகள் எண்ணிக்கை 2001–2002ஆம் ஆண்டு முதல் 7,400–லிருந்து 8,400ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கொண்டு வரப்பட்டது. இந்தப் புதிய முறைப்படி திங்கட்கிழமைதோறும் 20 கிராம் உருளைக் கிழங்கும், புதன்கிழமைதோறும் 20 கிராம் பச்சைப் பயறும், வெள்ளிக்கிழமைகளில் 20 கிராம் கொண்டைக் கடலையும் சமைக்கப்பட்ட வடிவத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு குழந்தையும் 158.20 கலோரி சக்தியும், 8.5 கலோரி புரதச்சத்தும் பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

✧ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கைப்படி தற்போதுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் வரையறுக்கப்பட்ட உணவுக் கட்டணத்தை மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டு ஆணையிடப் பட்டது. இவ்வாணை வழங்கப்படுவதற்கு முன்னர் காய்கறி, மசாலா பொருள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கு ஒரு குழந்தைக்கு 23 காசு என்று இருந்தது. தற்போது அரசு வழங்கிய ஆணைப்படி இந்தத் தொகை ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 35 காசாக அதாவது 12 காசு கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஊரகப் பகுதியிலுள்ள பள்ளிகளுக்கு மட்டும்




## 18 அம்ச திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ள இனங்கள்

1. வளர் இளம் பருவத்தினரின், குறிப்பாக வளர் இளம் பெண்களின் உடல் பலத்தை மேம்படுத்தல்.
2. அடிக்கடி பிள்ளைப் பேறு மற்றும் அதன் துன்பங்களிலிருந்து பெண்களை விடுவித்தல்.
3. கருக்கலைப்பு மற்றும் பெண் சிசு வதையை அறவே ஒழித்தல்.
4. குறைந்த எடையுள்ள குழந்தைகளின் எடையினை மேம்படுத்துதல்
5. தடுப்பு மருந்துகள் மூலம் நோய்கள் பரவாமல் தடுத்தல்.
6. குழந்தைப் பருவத்தில் ஏற்படும் உடல் ஊனத்தைக் கண்டறிந்து தக்க மருத்துவ வசதி மூலம் உடல் ஊனத்தை ஒழித்தல்.
7. குழந்தைப் பருவம் குறிப்பாக முதல் 3 ஆண்டுகளில் பராமரிப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக பெற்றோர்களின் கடமைகளை முன்னிருத்தல்.
8. குழந்தைகளின் இறப்பு சதவீதத்தைக் குறைத்தல்.
9. கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டினை நீக்குதல்.
10. மைக்ரோ ஊட்டச்சத்து குறைபாடுகளைக் களைதல்.
11. பெண் குழந்தைகளின் தரத்தை மேம்படுத்த பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை மக்களிடையே விளம்பரப்படுத்துதல்.
12. அனைத்து மருத்துவ மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளை பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்லிணக்கம் உள்ளவைகளாக மாற்றுதல்.
13. இளம் பிராயத்தில் ஏற்படும் இதய நோய்கள் மற்றும் அதன் தொடர்பான இலவச அறுவை சிகிச்சைகளைக் கண்டறிந்து தடுத்தல்.
14. சிறார் தொழிலாளர் முறையை ஒழித்தல்.
15. ஒவ்வொரு குழந்தைக்கும் 8 வருட பள்ளிக் கல்வியை அளித்தல்.
16. அனைத்துப் பள்ளிகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் பாதுகாப்புள்ள குடிநீர் வசதி மற்றும் சுகாதாரக் கழிப்பிட வசதிகளை அளித்தல்.
17. பெண்களின் கல்வி மற்றும் அவர் தம் தரத்தினை உயர்த்துதல்.
18. சுயஉதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தல்.

ஆண்டொன்றுக்கு ரூ.1751.86 இலட்சம் கூடுதலாக செலவாகும்.

✧ புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் அளிக்க ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✧ சத்துணவு மையங்களைக் கொண்ட கட்டடங்களில் ஏற்பட்டுள்ள சிறிய மற்றும் பெரிய பழுதுகளை நீக்கி சரிசெய்ய ரூ.812.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் 2,849 ஊரகப் பள்ளி மையங்களுக்கு ரூ.283.485 இலட்சமும், 952 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களுக்கு ரூ.122.59 இலட்சமும் பழுது நீக்கம் செய்ய பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

✧ ''தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான 18 அம்சத் திட்டம்'' என்ற புதிய திட்டம் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளிகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு மையங்களில் 100 விழுக்காடு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் சிறந்த சுகாதார வசதியைப் பெறும் பொருட்டும், மாநில, துறை மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. பள்ளி செல்லும் குழந்தைகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுத்தமான கழிப்பிட வசதிகள் பெற்று தூய்மையான சூழ்நிலையில் வளர இத்திட்டம் பெரிதும் துணை புரியும். இதுவரை 33,305 ஊரகப் பள்ளிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் 19,925 மையங்களில் சிறுநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## ஊரக வளர்ச்சிக்கு புதிய உத்வேகம்

*''பெண்களை வலிமையானவர்களாக ஆக்க வேண்டும் என்பது தான் இந்த அரசின் கொள்கை. அப்படி பெண்கள் சமுதாயத்தில் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக உயர வேண்டும், வாழ வேண்டும் என்றால் அதற்கு இரண்டு அடிப்படைத் தேவைகள் உண்டு. ஒன்று கல்வி, இரண்டாவது பொருளாதார*




*ரீதியாக பெண்கள் சொந்த காலில் நிற்க வேண்டும். இதற்காகத் தான் இந்த சுயஉதவிக் குழுக்களை அமைத்திருக்கிறோம். 1992ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்த போது நான் தான் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்தேன். அப்போது நான் இட்ட சிறிய விதை, இன்றைக்கு வளர்ந்து பெரிய ஆலமரமாகியிருக்கிறது. தமிழகத்தில் 1,26,106 சுயஉதவிக் குழுக்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 21,50,193 பெண்கள் இதில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏறக்குறைய ரூ.288 கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு இந்த சுயஉதவிக் குழுக்கள் எல்லாம் சேமிப்பு நிதியை வைத்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் 1992இல் இந்த மகளிர் சுயஉதவி குழுக்களை நான் தொடங்கிய போது, பெண்களுக்கு வங்கிகள் கடன் கொடுக்கவே தயங்கினார்கள். அப்போது இந்த சுய உதவிக் குழுக்களிலிருந்த மகளிருக்கு வங்கிகளிடம் கடன் பெற்றுத் தருவது குதிரை கொம்பாக இருந்தது. ஆனால், இன்றைக்கோ நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. இன்று இந்த சுயஉதவிக் குழுக்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு இந்த மகளிரிடம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு சேமிப்பாக இருப்பதைப் பார்த்து, வங்கிகளே இன்றைக்கு மகளிரை*



பின் தொடர்ந்து உங்களிடம் இருக்கின்ற நிதியை எங்களிடம் வைப்பு நிதியாக வையுங்கள், தாருங்கள் என்று மகளிரைத் தேடி அவர்களுக்குப் பின்னால் போகிறார்கள். மகளிர், வங்கிகளைத் தேடிப் போனது அந்தக் காலம். இன்றைக்கு வங்கிகளே மகளிரைத் தேடி வருவது இந்தக் காலம். ஆகவே, இன்றைக்கு ஏறக்குறைய 21,50,193 இலட்சம் பெண்கள் இந்த சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக் கிறார்கள் என்றால் இது போதாது, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை பெண்களும் சுயஉதவிக் குழுக்களில் சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களை மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை மகளிரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் சொந்தக் காலில் நிற்க வேண்டும். உங்கள் தேவைகளுக்காக வாழ்க்கையை நடத்துவதற்காக வாழ்க்கைக்குத் தேவையான செலவுகளுக்காக எந்த ஆணையும் நம்பி மகளிர் இருக்கக்கூடாது. அந்த அளவிற்கு ஆண்களோடு, சரி நிகர் சமானமாக மகளிர் உயர வேண்டும் என்பதற்காகத் தான் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மகளிரும் கல்வியைப் பெற வேண்டும், சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுவரை தமிழகத்தில் உள்ள எந்தப் பெண்ணாவது சுயஉதவிக் குழுவில் சேரவில்லை என்றால் உடனடியாக சேர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்".

–மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

## மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள்

2001–2002ஆம் ஆண்டில் ஒரு வளாகம் கட்ட இருந்த அலகுத் தொகை ரூ.2 இலட்சம் ரூ.2.25 இலட்சமாக 2002–2003ஆம் ஆண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது. அன்றாட பராமரிப்புப் பணிகள் பயன்பெறுவோர் குழுக்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இதுவரை 6,442 வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டு 5,721 வளாகங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் பல நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. இத் திட்டத்திற்காக தமிழக அரசு இதுவரை ரூ.126.18 கோடி செலவழித்திருக்கிறது.

## சம்பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (எஸ்ஜிஆர்ஒய்)

2002–2003ஆம் ஆண்டில் ரூ.272.02 கோடி மதிப்பில் 79,111 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.2.53 இலட்சம் மெ.டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 4,58,228 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம், தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டதால், மத்திய அரசு 2002–2003ஆம் ஆண்டுக்கு ரூ.46.17 கோடி நிதி கூடுதலாக ஒதுக்கியுள்ளது. 52,893 மெ.டன் அரிசியையும் கூடுதலாக வழங்கியுள்ளது.



### சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்ட சிறப்புக் கூறு திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 2002–2003இல் 1,25,000 மெ.டன் அரிசி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. 14,622 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 7,364 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 53,349 மெ.டன். அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 7,589 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

### கிராமக் குளங்களை சீரமைத்தல்

2002–2003ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 12,618 ஊராட்சிகளில் 50 சதவிகித ஊராட்சிகளில் அதாவது 6,309 கிராம ஊராட்சிகளில் ஒரு ஊராட்சிக்கு ஒரு குளம் என்ற வீதத்தில் 6,309 குளங்களை சீரமைக்க திட்டமிட்டு 8,165 குளங்களை சீரமைக்கும் பணிகள் எடுத்துச் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.7,868 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### சுயஉதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுதல்

பெண்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஊரக ஏழை பெண்களை ஒன்று திரட்டி அவர்கள் சுயஉதவிக் குழுக்களாக செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் 1,14,767 சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2002–2003ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளில் ஊராட்சிக்கு ஒரு கட்டடம் என்ற வீதத்தில் 6,309 கட்டடங்களைக் கட்ட திட்டமிடப்பட்டு 5,655 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு கட்டடமும் 370 சதுர அடிக்கு குறைவில்லாத பரப்பளவைக் கொண்டிருக்கும். ஒரு கட்டடத்திற்கான அலகுத் தொகை ரூ.1 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ.4,472 இலட்சம் செலவழிக்கப் பட்டுள்ளது.

### கதிர் அடிக்கும் களங்கள்

2002–2003ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 50 சதவீத ஊராட்சிகளில், ஊராட்சிக்கு ஒரு கதிரடிக்கும் களம் என்ற வீதத்தில் 6,309 கதிர் அடிக்கும் களங்களை, ஒரு களத்திற்கான அலகுத் தொகை ரூ.60,000 என்ற அடிப்படையில் கட்டித் தர திட்டமிடப்பட்டது. 2002–03ஆம் ஆண்டில் 6,779 பணிகள் முடிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.4,000.20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### ஊரகக் குடியிருப்பு

2001–2002இல் ரூ.104.64 கோடி செலவினத்தில் 28,284 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பிரதம மந்திரி கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ஊரகக் குடியிருப்பு) 5,971 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 15,256 கச்சா வீடுகள் ரூ.16 கோடி செலவினத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2002–2003இல் ரூ.121.78 கோடி மதிப்பீட்டில் 37,686 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம வளர்ச்சித் (குடியிருப்பு) திட்டத்தின் கீழ் ரூ.18.78 கோடி மதிப்பீட்டில் 5,868 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 19,142 கச்சா வீடுகள் ரூ.19.14 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### ஊரகப் பொருளாதார முன்னேற்றம் - பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்

2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் முறையே 22,967 மற்றும் 15,583 ஆக மொத்தம் 38,550 சுயஉதவி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 17,132 குழுக்களுக்கு சுழல் நிதியாக ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.25,000/– (அவற்றில் மானியமாக ரூ.10,000/–) வழங்கப்பட்டுள்ளது.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

2002–2003ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூ.192.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11,809 வேலைகள் இத்திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு, 5,638 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் இதுவரை ரூ.14,452.50 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

### கிராம நிர்வாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல்

2001–2002ஆம் ஆண்டிற்கு 990 இலட்சங்கள் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. 3,944 வேலைகள் எடுக்கப்பட்டு 3,944 வேலைகள் முடிக்கப்பட்டு 990

இலட்சங்கள் செலவிடப் பட்டுள்ளது. 2002–2003ஆம் ஆண்டிற்கு 1,155 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,740 வேலைகள் எடுக்கப்பட்டு 2,547 வேலைகள் முடிக்கப்பட்டு ரூ.1,782.90 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டுள்ளது.




## வியத்தகு தொழில் வளர்ச்சி

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வுநிலையை உயர்த்துவதற்காக தொழில் துறையில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் தரும் ஊக்கத்தால் தொய்வில்லாச் சாதனைகள் தொழில்துறையில் தொடருகின்றன.

### தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) 2003ஆம் ஆண்டு முதல் 54 குவாரிகளை இயக்கி வருகிறது.

பைத்தூர், தோகைமலை, சூலமலை முதலிய முக்கிய குவாரிகளை நவீனப்படுத்த ரூ.4.35 கோடி செலவில் அதிநவீன இயந்திரங்களை 'டாமின்' அறிமுகம் செய்துள்ளது. இதனால் செலவு குறைவதோடு சுற்றுச்சூழல் மாசுபடாமல் உற்பத்தியும் பெருகியுள்ளது. தோகைமலை குவாரியில் மட்டும் மாதம் ஒன்றுக்கு 500 கன மீட்டராக உற்பத்தி உயர்ந்துள்ளது.

சேவாத்தூரிலுள்ள வெர்மிகுலைட் சுரங்கத்தையும் டாமின் நவீனமயமாக்கியுள்ளது.

மாதேப்பள்ளியில் ஒரு புதிய பல ரம்பம் கொண்ட அறுக்கும் இயந்திரமும், காலிப்ரேஷன் இயந்திரமும் ரூ.2 கோடி செலவில் நிறுவப்பட்டு அதன் மூலம் உலகத் தரத்துக்கு இணையான உயர்தர ஓடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கிரானைட் ஓடுகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்ட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கையிலுள்ள கிராபைட் தொழிற்சாலை 2001–2002 ஆம் ஆண்டில் 4,554 மெ.டன் கிராபைட் செதில்கள் உற்பத்தி செய்தது. இது 2002–2003இல் 4,900 மெ.டன்னாக உயர்த்தி புதிய சாதனை படைக்க உள்ளது.

2001–2002ஆம் ஆண்டு 2,20,999 மெ.டன் உயர் வகை கனிமங்கள் உற்பத்தி செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை ரூ.518 இலட்சம் மதிப்புள்ள கிராபைட் செதில்களை விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் 38 சதவிகிதம் அதிகமாகும். 2002–2003ஆம் ஆண்டில் இது ரூ.580 இலட்சத்துக்கு விற்பனை செய்து புதிய சாதனை படைக்கவுள்ளது.

2001–2002ஆம் ஆண்டின் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மொத்த விற்பனை ரூ.67.05 கோடி. இது ஒரு சாதனை விற்பனையாகும். இவ்விற்பனை 2002–2003இல் ரூ.80 கோடியாக உயர்ந்து சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2001–2002இல் நிகர இலாபம் ரூ.4.04 கோடி. இது 2002–2003இல் ரூ.6.20 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### புவியியல் மற்றும் சுரங்கத் துறை

மாண்புமிகு முதல்வர் அவர்களின் நடவடிக்கையால் கனிமச் சலுகைகளை வழங்கியதாலும், எளிய செயல்முறைகளை உருவாக்கியதாலும், புதிய கொள்கை முடிவாலும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது.




## ஏற்றுமதி சேவை மையம்

ஏற்றுமதியைப் பெருக்கவும், தொழில் முனைவோரை ஏற்றுமதி செய்ய ஊக்குவிக்கவும் ஒவ்வொரு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் ஏற்றுமதி சேவை மையத்தை ஏற்படுத்த அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

## புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும் வேளாண்சார்/உணவுப்பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டம், மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் விளையும் வேளாண் பொருட்களை உபயோகித்து, குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்திற்கு மூலதன மானியம் மற்றும் பிற மானியங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் முதலீட்டில் 4 தொழில்கள் அமைக்க முடியும். இதுவரை மொத்தத்தில் 363 தொழில் திட்டங்களுக்கு மாநில அளவிலான உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவை 240 வட்டாரங்களில் ஏற்படுத்தப்படும். இதுவரை 43 தொழில் திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதி ஒப்புதல் அளித்துள்ளன. 9 தொழில் திட்டங்கள் சுய நிதியின் மூலம் துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் செயல்படும் பொழுது, ஊரக மக்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பு கிடைக்கும். கிராமங்கள் முன்னேற்றமடையும்.

தமிழ்நாட்டில் காணப்படும் தாதுப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆர்வம் காட்டி டாடா நிறுவனத்துடன் டைட்டானியம்–டை–ஆக்ஸைடு செயல் திட்டத்தை நிறுவ குறிப்பாணை உடன்பாடு நிறைவேற்றியுள்ளது. இதன்படி டாடா நிறுவனம் ரூ.2,000 கோடி முதலீடு செய்யும்.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 2001–2002 மற்றும் 2002–2003 ஆகிய ஆண்டுகளில் ரூ.348.75 கோடி நிதியுதவி அளித்து 3,953 சிறு தொழிற்சாலைகள் பயன்பெற்று, இதன்மூலம் 27,108 பேர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மைய நிதி முகவரமைப்பாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழகம் (TIIC) செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 தொழிற்சாலைகளுக்கு 28.2.2003 வரை ரூ.243.76 இலட்சம் வழங்கி வளர்ச்சியைக் கண்காணித்து வருகிறது.

## சிறுதொழில் துறை

சிறு மற்றும் குறுந்தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கு இந்த அரசு பல்வேறு கொள்கை முடிவுகளை வகுத்துள்ளது. இதனால் மாநிலத்தில் தொழில்துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது.

## சிறுதொழில் பதிவு - நிரந்தரம்

2001–2002 நிதியாண்டில் 32,544 சிறுதொழில் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, ரூ.937 கோடி நிரந்தர முதலீட்டுடன் 2,37,571 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2002–2003 நிதியாண்டில் (பிப்ரவரி முடிய) 28,742



*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் 6.2.2003 அன்று மலர் மற்றும் மாம்பழம் ஏற்றுமதிக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது*

விற்கும் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28–8–2001 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்படி 28–2–2003 முடிய ரூ.36.10 கோடி மதிப்பிலான 4813 மெட்ரிக் டன் ஊட்டி டீ விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போது ஊட்டி டீ தமிழக மக்களிடையே பிரபலமடைந்ததோடு, தமிழ்நாட்டில் தேயிலை சந்தையில் இன்கோசர்வ் ஒரு பிரதான விநியோகஸ்தர் நிலையையும் அடைந்துள்ளது.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு சிறுதொழில் பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்டு, ரூ.827 கோடி நிரந்தர முதலீட்டுடன், 2,09,816 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2002–2003ஆம் ஆண்டில் இதுவரை 22,468 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் இதுவரை 2,354 மகளிர் தொழில் தொடங்கி உள்ளனர்.

### ஒற்றைச் சாளர முறை கூட்டம்

ஒற்றைச் சாளர முறை கூட்டம் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் அனைத்துத் துறைகளிடமிருந்து அனுமதிகளைத் துரிதமாகப் பெற்று, புதிதாகத் தொழில் தொடங்க இத்துறை உதவி புரிந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2001–2002 முதல் 2002–2003) 28–2–2003 வரை 2009 மனுக்கள் பெறப்பட்டு 1909 மனுக்கள் தீர்வு காணப்பட்டது.

### ஊட்டி டீ

நீலகிரி மாவட்டத்திலுள்ள சிறு தேயிலை விவசாயி களுக்கு பச்சை தேயிலையின் விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு, பொது விநியோகக் கடைகளில் ஊட்டி டீ என்ற பெயரில் தேயிலைத் தூளை

### ஊட்டி கோல்டு

தமிழ்நாட்டில் உள்ள மேல்தட்டு உயர்ந்த மற்றும் நடுத்தர மக்களையும் கவரும் நோக்கத்தோடு "ஊட்டி கோல்டு" என்ற பெயரில் தேயிலைத் தூள் விற்பனையை சென்னை, சேலம், ஈரோடு, கோவை, கரூர், மதுரை, திருச்சி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அறிமுகம் செய்து பிப்ரவரி 2003 முடிய 5.8 மெட்ரிக் டன் ஊட்டி கோல்டு தேயிலை விற்பனையாகியுள்ளது. ஏனைய 16 மாவட்டங்களில் "ஊட்டி கோல்டு" தேயிலை விற்பதற்கான விநியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.



### டீசெர்வ் - புதிய ஏல மையம்

தேயிலை ஏலத்தை மின்னணு முறையில் வெளிப் படையாக நடத்துவதற்காக ஒரு புதிய ஏல மையத்தை டீசெர்வ் என்ற பெயரில் கூட்டுறவு முறையில் நிறுவுவதற்கு அரசு உத்தரவிட்டது. புதிய ஏல மையம் 28–8–2002இல் பதிவு செய்யப்பட்டது. புதிய ஏல மையம் தனது வியாபாரத்தைத் துவங்க தேயிலை வாரியம் 31–1–2003இல் உரிமம் வழங்கியது.

| இலாபம் ஈட்டிய பொதுத்துறை நிறுவனங்கள் |
|---|
| தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) |
| 2001–2002இல் நிகர இலாபம் சுமார் ரூ.4.04 கோடி. |
| 2002–2003இல் ரூ.6.20 கோடி. |
| தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) |
| 2001–2002இல் நிகர இலாபம் ரூ.2.90 கோடி. |
| 2002–2003இல் ரூ.5.52 கோடி. |
| தமிழ்நாடு உப்பு நிறுவனம் |
| 2001–2002 மற்றும் 2002–2003இல் நிகர இலாபம் ரூ. 76.83 இலட்சம். |
| தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் |
| 2001–2002 மற்றும் 2002–2003இல் நிகர இலாபம் ரூ. 702.60 இலட்சம். |

குன்னூரில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் தலைமைச் சங்கமான இன்கோசர்வ் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.4,109.81 இலட்சம் விற்பனை செய்துள்ளது.

மிக வெற்றிகரமாக நடைபெறும் தொழிற் கூட்டுறவுகளில் ஒரு எடுத்துக்காட்டாக சேகோசர்வ் நமது மாநிலத்தில் விளங்கி வருகிறது. சேகோசர்வ், 2001–02 மற்றும் 2002–03 (பிப்ரவரி 2003 முடிய) ஆண்டுகளில், முறையே ரூ.204.70 கோடி மற்றும் ரூ.129.47 கோடி அளவுக்கு விற்பனை செய்துள்ளது. 2000–2001ஆம் ஆண்டில் ரூ.22.89 இலட்சமாக இருந்த நிகர இலாபம், 2001–02ஆம் ஆண்டில் ரூ.26.60 இலட்சமாகவும், நடப்பு ஆண்டில் பிப்ரவரி 2003 வரை ரூ.190.47 இலட்சமாக உயர்ந்ததன் மூலம் சங்கத்தின் ஆதாயம் ஈட்டும் திறன் மேம்பட்டுள்ளது.

> உற்பத்தித் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீட்டில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்குகிறது என்று இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையம் **(Centre for Monitoring Indian Economy - CMIE)** வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
>
> *– சட்டப்பேரவையில்*
>
> *மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*

தேனி மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இலவம் பஞ்சுக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் முந்திரி சாகுபடியாளர் சங்கத்திற்கு மாக ரூ.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஊட்டி தேயிலை வணிகத்திற்காக இன்கோசர்வ் சங்கத்திற்கு ரூ.3 கோடி காசுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1–4–2001 அன்று இருந்த முந்தைய ஆண்டு திரண்ட இழப்பு ரூ.4.32 கோடி முழுவதும் சரி செய்யப்பட்டு 28–2–2003 அன்று ரூ.1.40 கோடி (தோராயமாக) நிகர லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

### திருமுல்லைவாயில் தொழிற்பேட்டை

தமிழக சட்டமன்றப் பேரவையில் தமிழக ஆளுநர் அவர்கள் 2001–2002ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் கொள்கைகள் குறித்து ஆற்றிய உரையில் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், திருமுல்லைவாயில் அருகில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை ஒன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 500 தொழிற்கூடங்கள் சிட்கோ நிறுவனத்தினால் கட்டப்பட்டு பெண் தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். இந்த தொழிற்பேட்டையில் மேம்பாட்டுப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

★ திருச்சி அருகே வாழவந்தான் கோட்டையில் 51.7 ஏக்கர் நிலம் மகளிர் தொழிற் பூங்காவிற்காக மேம்பாடு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ரூ.180 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இந்த தொழிற் பேட்டையில் 10 சென்ட் முதல் 1 ஏக்கர் பரப்பளவுள்ள 200 தொழிற் மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த தொழிற் பூங்காவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.3.2003 அன்று துவக்கி வைத்தார்கள்.

★ சேலத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் கருப்பூர் கிராமத்தில் பெரியார் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான 51.7 ஏக்கர் நிலத்தில் "மகளிர் தொழிற்பூங்கா" அமைக்க அனுமதி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சுமார் 120 பெண் தொழில் முனைவோர் இந்தத் தொழில் பூங்காவில் தொழில் துவங்க முன் வந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 22.7.2002 அன்று இத்தொழிற்பேட்டைக்கான அடிக்கல் நாட்டியுள்ளார்கள்.

## பட்டு வளர்ச்சித் துறையின் இரண்டாண்டு சாதனைகள்

2001–2002ஆம் ஆண்டில் 5,088 ஏக்கரில் புதியதாக மல்பரி நடவு செய்யப்பட்டது. 131.50 இலட்சம் பட்டு முட்டை தொகுதிகள் வளர்க்கப்பட்டு 5,882 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. இதன் மூலம் 25,440 நபர்களுக்கு கூடுதலாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது.

2001–2002ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவிகள் ரூ.182.87 இலட்சம் மற்றும் பயனடைந்தோர் 4,554 பேர்.

2002–2003ஆம் ஆண்டில் 987 ஏக்கரில் புதியதாக மல்பரி நடவு செய்யப்பட்டது. 89.564 இலட்சம் பட்டு முட்டை தொகுதிகள் வளர்க்கப்பட்டு 4,005 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது.

2002–2003ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட நிதி உதவிகள் ரூ.150.93 இலட்சம் மற்றும் பயனடைந்தோர் 2239.

2002–2003ஆம் ஆண்டில் மகளிர் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் 941 மகளிருக்கு பட்டுவளர்ப்புப் பயிற்சி தரப்பட்டுள்ளது.

### கதர்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 2001க்கு முன்னர் ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி செய்த கதர் ரகங்கள் ரூ.42 கோடி அளவிற்கு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்தன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற பிறகு 13.7.2001 அன்று கதர் கிராமத் தொழில் வாரிய செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த கதர் ரகங்களில் ரூ.3 கோடி மதிப்புள்ள கதர் வேட்டிகளை, முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விநியோகம் செய்யத் தக்க வகையில் ஆணை வழங்கினார்கள். இதனால் வாரியத்தில் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வாரியத்தின் விற்பனை அதிகரிக்கப் பட்டது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்து விற்கப்படும் பொருட்களின் மதிப்பில் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் நூற்பாளர்கள், நெசவாளர்கள் போன்ற கைவினைஞர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நூற்பாளர்கள், கதர் மற்றும் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்கள் சுமார் 41,500 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### சோப்

கடந்த ஆண்டுகளில் படிப்படியாக குறைந்து வந்த சோப்பு உற்பத்தி, நடப்பாண்டில் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்ற பிறகு வாரியத்தின் உற்பத்தி பொருள்களான சோப்பு வகைகள், தேன் முதலான கிராமத் தொழில் பொருட்களை 8.7.2002 அன்று நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனையை அறிமுகப்படுத்தி துவக்கி வைத்தார்கள். இதனால் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ. 10 இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்ட சோப்பு வகைகள் ஏறக்குறைய ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது.

### தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக பனைத்தொழில் வளர்ச்சிக்காகவும் பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழை பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அரசு செயல்பட்டு வருகிறது.

பனைத்தொழில் வளர்ச்சிக்காக 996 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களும், 8 மாவட்ட பனைவெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாகப் பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

## அடித்தளத்து மக்களுக்கு ஆதரவுக்கரம்

சாதி மதம் பாராது சமத்துவ உணர்வோடு ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு நிதிஉதவியை வாரி வாரி வழங்கி வருகிறார்கள். குறிப்பாக ஆதிதிராவிடர் மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி இலட்சக்கணக்கான குடும்பங்களில் கல்வி விளக்கேற்றி வைத்துள்ளார்கள்.

### ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல்

2001–2002ஆம் ஆண்டில் ரூ.7.69 கோடி செலவில் 56,525 இலவச மிதிவண்டிகள் வழங்கப் பட்டன.

2002–2003ஆம் ஆண்டில் ரூ.6.91 கோடி செலவில் 47,980 மிதிவண்டிகள் வழங்க மதிப்பீடு செய்யப்பட்டது. இதுவரை 46,737 மிதிவண்டிகள் மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி

2001–2002 முதல் முதுகலைப் பட்டபடிப்பு வரை ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியர்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### இலவச வீட்டுமனைப்பட்டாக்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 2001–2002 நிதியாண்டில் ரூ.396.77 இலட்சம் செலவில் 17,240 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

2002–2003இல் ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 11,600 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கான மயானம் மற்றும் மயானப் பாதை அமைத்திட 2001–2002ஆம் நிதியாண்டில் ரூ.74.78 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு செய்யப்பட்டது.

2002–2003இல் ரூ.74 இலட்சம் செலவில் மயானம் மற்றும் மயானப் பாதைக்காக நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் விருது

ஆதிதிராவிடர் மக்களுக்காகப் பாடுபட்டு வரும் நபருக்கு டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறும் நபருக்கு ரூ.1 இலட்சத்தில் காசோலையும், ஒரு சவரன் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகிறது. 2001ஆம் ஆண்டுக்கான டாக்டர் அம்பேத்கர் விருது, அம்பேத்கர் மக்கள் இயக்கத் தலைவரான திரு.வை.பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

### வீட்டுவசதி

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் இந்திரா ஆவாஸ் யோஜனா (இந்திரா நினைவுக் குடியிருப்பு) திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு கான்கிரிட் கூரை அமைக்க ஒரு வீட்டிற்கு ரூ.12,000 வீதம் ஆதிதிராவிடர் நலத்துறை வழங்குகிறது. 2001–2002, 2002–2003ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் ரூ.2,268.48 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது.



### விடுதிக் கட்டடங்கள்

2001–2002ஆம் ஆண்டில் 8 மாணவர் விடுதிகளும் 2 மாணவியர் விடுதிகளும் ரூ.315 இலட்சம் மதிப்பில் விடுதிக் கட்டடங்கள் கட்ட எடுத்து கொள்ளப்பட்டது.

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விடுதிகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.210.57 இலட்சம் 2002–2003ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் 2002–2003ஆம் ஆண்டில் 9 மாணவர் மற்றும் 4 மாணவியர் விடுதிகளும் கட்ட ரூ.409.50 இலட்சம் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

### தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்

2001–2002 மற்றும் 2002–2003ஆம் ஆண்டுகளில் ஜனவரி 24 முதல் 30 வரை தீண்டாமையை ஒழிப்பதற்காக ரூ.5 இலட்சம் செலவில் மனிதநேய வார விழா அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட அரசு ஆணை யிட்டுள்ளது.

2001–2002இல் ரூ.84,000–ஆம், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.2,51,000 செலவிடப் பட்டு வில்லுப்பாட்டு மூலம் தீண்டாமையை ஒழிக்கப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியை தலைமை இடமாகக் கொண்டு இரண்டு விளம்பரப் பிரிவுகள் மூலம் தீண்டாமை ஒழிப்பு குறித்து திரைப்படங்கள் மூலம் விளக்கப்பட்டு வருகிறது.

### பழங்குடியினர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம்

2001–2002ஆம் ஆண்டில் 329 குடியிருப்புகளை ரூ.114 இலட்சத்திலும் 2002–2003ஆம் ஆண்டில் 68 குடியிருப்புகளை கட்ட ரூ.23.12 இலட்சம் செலவிலும் பழங்குடியினர்களுக்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர்களுக்கு குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 8 குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூ.50 இலட்சமும், 2002–2003ஆம் ஆண்டு திட்டத்தில் 7 குடியிருப்புகளுக்கு ரூ.32 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

மாநில அரசு பழங்குடியினரின் குடியிருப்பு களுக்கு மின்வசதி அளித்தல் திட்டத்தின்கீழ் 2001–2002ஆம் ஆண்டில் 18 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு ரூ.30 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

பழங்குடியினர் குடும்பங்களை பொருளாதார நிலையில் மேம்படுத்திட அவர்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் இதர வசதிகளை அளிப்பதே பழங்குடியினர் துணைத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இந்த புதிய திட்டத்தினை தமிழகத்தில் அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கு 2002–2003இல் ரூ.323.32 இலட்சம் சிறப்பு மைய நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

தாட்கோ

இதில் 48,675 நபர்கள் பயன்பெற்று உள்ளனர். மானியமாக ரூ.26.95 கோடியும், விளிம்புத் தொகையாக ரூ.10.30 கோடியும், வங்கிக் கடன் மற்றும் பருவக்கடன் தொகையாக ரூ.40.98 கோடி ஆகமொத்தம் ரூ.78.23 கோடி நிதி உதவி வழங்கி உள்ளது. படித்த இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு பெற தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக 8,776 நபர்களுக்கு ரூ.8.44 கோடி செலவில் தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் 20,629 மகளிர் பயன்பெறும் வகையில் சுயஉதவிக் குழுக்கள் மூலம் தொழில் முனைவோர் பயிற்சி ரூ.0.96 கோடி செலவில் வழங்கப்பட்டது.

2002–2001ஆம் நிதியாண்டில் 7 மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன.

2002–2003ஆம் நிதியாண்டில் 1,59,940 ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி ரூ.93.65 கோடி மானியம் உட்பட மொத்தம் ரூ.200.98 கோடி



நிதிஉதவி செய்ய ஆண்டுத் திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளிகளில் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க ரூ.4.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தாட்கோ மூலம் 143 ஆதிதிராவிட மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.13.68 கோடியும், ஹட்கோ கடனாக ரூ.31.37 கோடியும் ஆகமொத்தம் ரூ.45.05 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் தற்சமயம் 11 விடுதிகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவு பெற்றுள்ளன.

## பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

2001–2002ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ், தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிய 770 விடுதிகளுள் 114 விடுதிகளுக்குக் கட்டடம் கட்டும் பணி ரூ.36.99 கோடி செலவில் தொடங்கப்பட்டு 21 விடுதிகளுக்கான கட்டடப்பணிகள் முடிக்கப்பட்டது.

ரூ.36 இலட்சம் செலவில் 94 விடுதிகளில் மின் இணைப்பு பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்டது.

பள்ளிகளில் வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த ஒரு மாணவனுக்கு மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.225லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி, ஆண்டொன்றுக்கு ரூ.3.70 கோடி செலவில், 49,000 மாணவ/மாணவியர் பயன்பெறுகின்றனர்.




கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு குடிநீர், மின் இணைப்பு வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள் 2001–2002 ஆண்டில் ரூ.47 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

சாலை, தெரு விளக்கு, குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகளுக்காக 2001–2002ஆம் மற்றும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.7.25 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மலைப்பிரதேசங்களில் உள்ள 18 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குக் கம்பளி ஆடைகள் ரூ.2.38 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

தமிழகத்தின் 972 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு விளையாட்டுக் கருவிகள், ஒரு விடுதிக்கு ரூ.1000 வீதம் ரூ.9,72,000 வழங்கப்பட்டது.

இவ்விடுதிகளில் ரூ.3,000 வீதம் நூலகங் களுக்காக ரூ.29.16 இலட்சம் செலவில் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

2002–2003ஆம் ஆண்டில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.3833.30 இலட்சம் வழங்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார நிலையை உயர்த்த

2002–2003ஆம் ஆண்டில் 1,500 இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டன.

## நெடுஞ்சாலைத்துறையின் நெடிய பணிகள்

✶ 2001–2002–ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ.502.47 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

✶ பகுதி 2 திட்டத்தின் கீழ் 2001–2003 ஆகிய இரண்டாண்டுகளில் 18 பாலப்பணிகள் முடிக்கப்பட்டன.

✶ நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு 213.90 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளும், 76 பாலங்கள் கட்டும் பணிகளும் 55.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2001–2002–ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. 2002–2003ஆம் ஆண்டில் ரூ.120.17 கோடி மதிப்பீட்டில் 75 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகளும், 78 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



✶ 500 முதல் 1,000 வரை மக்கள்தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்குடன் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.95.42 கோடி மதிப்பீட்டில் 669 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 9 பாலங்கள் கட்டும் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.110 கோடி மதிப்பீட்டில் 910 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 10 பாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

✶ 2001–2002ஆம் ஆண்டில் ரூ.58.73 கோடியில் 1,460 கி.மீ. சாலைகளின் மேற்தளமும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.33.41 கோடியில் 835 கி.மீ. சாலைகளின் மேற்தளமும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

✶ இருப்புப் பாதைப் பணிகள் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ஒரு சாலை கீழ்ப்பாலமும், 2002–2003ஆம் ஆண்டில் இரு சாலை மேம்பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

✶ ஹட்கோ கடனுதவியுடன் 2002–2003ஆம் ஆண்டில் 14 பாலங்கள் திரும்பக் கட்டும் பணியில் கட்டி முடிக்கப்பட்டது.

✶ தேசிய நெடுஞ்சாலை திட்டப் பணியின் கீழ் 2001–2002ஆம் ஆண்டின் ரூ.96.54 கோடியில் 386 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகளும், 5 சிறுபாலங்கள் கட்டும் பணிகளும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.84.50 கோடியில் 295 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகளும் ஒரு சிறு பாலமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## அவசர விபத்து சிகிச்சை மையம்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசிய நெடுஞ் சாலைகளிலும் மாநில நெடுஞ்சாலைகளிலும் ஒவ்வொரு 50 கி.மீ. தூரத்திற்கும் ‘சாலை விபத்து சிகிச்சை மையம்’ ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி முதற்கட்டமாக அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சென்னை–திருச்சி மற்றும் சென்னை–பெங்களூர் நெடுஞ்சாலைகளில்

முதலில் 13 சிகிச்சை மையங்களை துவக்கத் தீர்மானிக்கப்பட்டு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் 8 மையங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த சிகிச்சை மையங்களில் நோயாளி ஊர்தி மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் உள்ளன. இம்மையங்கள் விபத்தில் சிக்கியவர்களை, உரிய நேரத்தில் மீட்டு, உடனடி மருத்துவ சிகிச்சைஅளித்து, அவர்களது உயிரினைக் காப்பாற்ற உதவி புரிந்து வருகின்றன.

## பொதுப்பணியில் புதுப்பணிகள்

### நீர்வள ஆதார அமைப்பு

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் ரூபாய் 807.49 கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் ரூபாய் 1,062 கோடியாக திருத்தப்பட்டு அதற்கான களப்பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது. மற்றும் இத்திட்டக் காலத்தை 31–3–2004 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து உலக வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரத் தேவையை எதிர்நோக்கி அடவிநயினார் கோயில், கிருதமால் அணைக்கட்டு, கொடுமுடியாறு, நம்பியாறு, பொய்கையாறு, சோத்துப்பாறை, வடக்குப் பச்சையாறு, மோர்தானா, இராஜா தோப்பு கானாறு ஆகிய ஒன்பது நீர்த்தேக்கத் திட்டங்கள் உலக வங்கி உதவியுடன் முற்றிலும் முடிக்கப்பட்டன.

பாலாறு–வைகை–தாமிரபரணி படுகைகளில் உள்ள 620 ஏரிகளையும், வரத்துவாய்க்கால்களிலும் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு ரூ.100 கோடி செலவில் இரண்டு ஆண்டுகளில் பணி முடிக்கப்பட்டு சுமார் 1 இலட்சம் எக்டர் பாசனப் பரப்பு பயனடைந்துள்ளது. கால்வாய்கள், மதகுகள் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மூலம் 6 இலட்சம் எக்டர் பாசனப்பரப்பு பயன்பெறுகிறது.

### ஹட்கோ நிதியுதவித் திட்டம்

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.58 கோடி மதிப்பில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

### தூர் துடைப்புப் பணிகள்

2002–2003இல் காவிரி கழிமுகப் பகுதியிலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புக்காக வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், திருச்சி, நாகப்பட்டினம் மாவட்டங்களில் பி, சி மற்றும் டி பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரும் பணி ரூ.5 கோடியில் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்திலுள்ளது.

### நபார்டு வங்கி நிதியுதவித் திட்டங்கள்

13,300 எக்டர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் ரூ.101 கோடி மதிப்பில் 10 பாசனத் திட்டங்களுக்கு நபார்டு வங்கி அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் ரூ.14.06 கோடி நபார்டு வங்கி நிதி உதவியுடன் 42 உபயோகமில்லா குளங்களை புனரமைப்புப் பணிகள் செய்வதால் 5.054 எக்டர் ஆயக்கட்டு பயன்பெறும். அவ்வேலைகள் முடியும் தருவாயில் உள்ளது.

### புதிய வீராணத் திட்டம்

புதிய வீராணம் திட்டத்தில், வீராணம் ஏரியில் வடவாறு கால்வாயைச் சரிப்படுத்தவும், ஏரியின் முழு கொள்ளளவிற்கு உயர்த்தவும், அதிலுள்ள திட்டுக்களை அகற்றுதல் மற்றும் தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1405 மி.கன அடியாக அதிகப்படுத்தும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

- ரூ.1,540 இலட்சத்தில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.
- ரூ.1145 இலட்சத்தில் உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்ட வல்லுநர் அறைகள் கட்டடம் (Law Chamber) கட்டப்பட்டுள்ளது.
- சென்னை கிரீன்வேஸ் சாலையில் 30 நீதிபதி மாளிகைகள் ரூ.1,365 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.
- சென்னை, அரசினர் தோட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்கு ரூ.250 இலட்சத்தில் நிர்வாகப் பகுதி வளாகம் கட்டப்பட்டுள்ளது.

★ நில அளவைத் துறைக்காக 33 இடங்களில் நில பதிவறைகள் ரூ.330 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ சென்னை கிண்டியில் வேளாண் விற்பனை மைய அலுவலகக் கட்டடம் ரூ.193.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

★ கோவை மாவட்டம் திருப்பூரில் ஒழுங்குமுறை விற்பனை வளாகத்தில் ரூ.230.50 இலட்சம் செலவில் விற்பனை நிலையம் கட்டப்பட்டுள்ளது.

★ சேலம் மாவட்டத்தில் உத்தமசோழபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனை மையம் மற்றும் விற்பனை குழு அலுவலகம் ரூ.214.50 இலட்சத்திலும், விடுதியுடன் கூடிய பயிற்சி மையம் ரூ.700 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ளது.

★ சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் ரூ.44.81 கோடி செலவில் கட்டப்பட்டு கட்டடப் பணிகள் முடிவடைந்து விட்டது. மரசாமான்கள் ரூ.7.68 கோடி செலவில் வெகு சீக்கிரத்தில் பொருத்தப்பட உள்ளது.

★ கூடுதல் தமிழ்நாடு விருந்தினர் மாளிகை மற்றும் அலுவலர் குடியிருப்புகள் ரூ.22.07 கோடி செலவில் புதுடெல்லியில் கட்டப்பட்டு கட்டடப் பணிகள் முடிவடைந்து விட்டது. மர சாமான்கள் பொருத்துவது விரைவில் முடிவடைய உள்ளது.

## பொதுமக்கள் பிணி தீர்க்கும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத் துறை

மக்களின் உடல் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத்துறைக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்கி ஊக்கமளித்து வருகிறார்கள். குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு அனைத்து மருத்துவ வசதிகளையும் வழங்க ஆணையிட்டுள்ளார் முதல்வர் அவர்கள். அதன்படி,

★ ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 300 பெண் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

★ ஆரம்ப சுகாதார நலன்களை மேம்படுத்த 500 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

★ கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு தரம் வாய்ந்த சேவைகளை அருகிலேயே கிடைக்கும் வகையில் 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ மலைவாழ் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு போதுமான மருத்துவ வசதி வழங்குவதற்காக 25 நடமாடும் மருத்துவப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 20 நடமாடும் மருத்துவப் பணிக்குழுக்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

★ போதுமான வசதிகள் இல்லாத கிராமப்புற மக்களுக்கு 2001–2002ஆம் ஆண்டில் 151 சிறப்பு மருத்துவ முகாம்களும் 2002–2003–இல் 385 சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது.

★ அனைத்து வட்டார அளவிலான ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் குளுக்கோமீட்டர் சாதனமும், இருதய நோய் தொடர் கண்காணிப்பிற்கென கையடக்கமான ஈசிஜி கருவியும் வழங்கப்பட்டுள்ளது.

★ 400 துணை சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ கருவுற்ற தாய்மார்களுக்கும், வளர் இளம் பருவ மகளிருக்கு வாரந்தோறும் இரும்புச்சத்து மாத்திரை வழங்கப்படுகின்றது.



- கடந்த மூன்றாண்டுகளாக இளம்பிள்ளை வாத நோய் ஒன்றுகூட இல்லை. இது தொடர்ந்து முறையாக அனைத்து குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்குவதாலும் சிறப்பு போலியோ முகாம்கள் மூலமாக 73 இலட்சம் குழந்தைகளுக்கு கூடுதலாக இரண்டு தவணைகள் வழங்குவதாலும் அடையப்பட்டது. பிற தடுப்பூசியினால் தடுக்கப்படும் நோய்களும் குறைவாகவே உள்ளன.
- 10,000 மக்கள்தொகைக்கு தொழு நோய் கண்டவர்கள் 3.5 என்ற நிலைக்கு குறைக்கப் பட்டுள்ளது.
- யானைக்கால் நோயை அடியோடு ஒழித்திட ஒட்டுமொத்த டிஇசி சிகிச்சை முறை மூலம் தொடர்ந்து இரண்டாண்டுகளாக ஒவ்வொரு சுற்றிலும் 2.3 கோடி மக்கள் பயனடைந் துள்ளனர்.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம்

2001ஆம் வருடத்தில், 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலுள்ள 25 அறுவை அரங்கு களிலும் 9 மாவட்ட தலைமை மருத்துவமனை களிலுள்ள 9 தீக்காயப் பிரிவுகளிலும் குளிர்சாதன வசதி அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டது.

மேலும் 2003 ஆம் வருடத்தில் 64 அரசு மருத்துவமனைகளிலும் குளிர்சாதன வசதி அமைத்திட ஒப்புதலளிக்கப்பட்டது.

### அரசு மருத்துவமனைகளில் மின்னாக்கி

அரசு மருத்துவமனைகளில் மின்தடை ஏற்படும் தருணத்தை சமாளித்து தடையில்லா மின்சார விநியோகம் ஏற்படுத்திட அனைத்து மருத்துவ மனைகளிலும் மின்னாக்கி (ஜெனரேட்டர்) படிப்படியாக அமைக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

மூன்று மாவட்ட மருத்துவமனைகளில் 75 கேவிஏ திறனுள்ள மின்னாக்கிகள் அமைத்திட ஒப்புதலளிக்கப் பட்டது.

### தேசிய நெடுஞ்சாலையில் விபத்து மற்றும் மருத்துவ அவசர சிகிச்சை வசதிகள்

கிருஷ்ணகிரி, கோவில்பட்டி, திண்டிவனம், ஸ்ரீபெரும்புதூர், ஆம்பூர் ஆகிய அரசு மருத்துவ

மனைகளில் இம்மையங்களை ரூ.338 இலட்சம் செலவில் மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையிலும் இம்மையத்தை ரூ.105 இலட்சம் செலவில் மேம்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது.

## மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள் அமைத்தல்

★ திருவண்ணாமலை, விழுப்புரம், நாமக்கல், திருப்பூர், புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ரூ. 21 கோடி செலவில் மண்டல நோய்ப் பரிசோதனை மையங்கள் அமைக்கப்படுகிறது.

★ பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவை வழங்குவதற்காக அரசு மருத்துவமனைகளில், 1126 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

## மருந்து கட்டுப்பாட்டுத்துறை

★ மருந்து தயாரிப்பு நன்னடத்தை விதி முறைகளை அமல்படுத்தும் நோக்கத்தோடு மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் திடீர் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன. குறைகள் காணப்பட்ட நிறுவனம் மருந்து தயாரிப்பை உடனடியாக நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது.

★ போலி மருந்துகளைத் தடுக்க எடுத்த நடவடிக்கையில், க்ரிப் பேண்டேஜ் மற்றும் ஆக்குமெண்டின் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## குடும்பநல இயக்குநரகம்

2001–2002 ஆம் ஆண்டில் 3,90,195 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 4,00,944 பேர்கள் குடும்பநல அறுவை சிகிச்சையும், 2001–2002 ஆம் ஆண்டில் 3,88,568 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 4,11,778 பேர்கள் கருத்தடை வளையம் பொருத்தியும், 2001–2002 ஆம் ஆண்டில் 1,91,222 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 1,49,935 பேர்கள் வாய்வழி மாத்திரைகளை உட்கொண்டும் உள்ளனர். மேலும் 2001–2002 ஆம் ஆண்டில் 2,27,138 பேர்கள் மற்றும் 2002–2003 ஆம் ஆண்டில் 1,90,489 பேர்கள் ஆணுறை உபயோகிக்கின்றனர்.

## தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்

எச்.ஐ.வி. / எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.



★ 2001–ஆம் ஆண்டில் 17 ஆக இருந்த எச்.ஐ.வி. கண்டறியும் நிலையங்கள் 2002ஆம் ஆண்டில் 24 ஆக உயர்த்தப் பட்டது.

★ 2002 ஆம் ஆண்டு நோய் கண்டறியும் புள்ளி விவரங்கள் தேசிய அளவில் எடுக்கப்பட்டதில், தமிழ்நாட்டில் இந்த 24 நிலையங்களில் கர்ப்பிணிகள் முன் கவனிப்பு நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 2001–ஆம் ஆண்டில் 1.1 சதவீதமாக இருந்த நோயின் தாக்கம் 2002–ஆம் ஆண்டில் 0.87 சதவீதமாக குறைந்துள்ளது.

★ தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் 112 திட்டங்களை தொண்டு நிறுவனங்களின் மூலமாகச் செயல்படுத்தி வருகிறது.

★ பொதுமக்களிடையே பால்வினை நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும், எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய் பரவுவதை தடுப்பதற்காகவும் தமிழகத்தில் 57 பால்வினை நோய்ப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

★ தன்னார்வத்துடன் இரத்தம் அளிப்பவர்களிடம் இருந்து எடுக்கப்படும் இரத்தத்தின் பங்கு மொத்த இரத்த சேமிப்பில் 2001–ஆம் ஆண்டில் 50.40 சதவீதமாக இருந்து 2002–ஆம் ஆண்டில் 59.40 சதவீதமாக உயர்ந்துள்ளது. அக்டோபர் 1ஆம் தேதியன்று இரத்ததான முகாம் நடத்தப்பட்டு 3,783 அலகுகள் இரத்தம் சேமிக்கப்பட்டது.

★ தமிழ்நாட்டில், தாய் சேய் மேவா திட்டம் 47 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

★ சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.40 இலட்சங்கள் செலவில் வெளி நோயாளி துறைக்கான கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றன.

★ சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் ரூ.30 இலட்சங்கள் செலவில் யோகா மற்றும் இயற்கை வைத்திய பிரிவிற்கு மேல் முதல் தளம் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது.

★ சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் உயிர்வேதியல் மற்றும் உடற்கூறு இயல் ஆய்வுக்கூட மேம்பாட்டிற்காக ரூ.7.37 இலட்சங்கள் செலவில் சாதனங்களும், இரசாயனப் பொருட்களும் வாங்கப்பட்டுள்ளன.

### எம்.ஆர்.ஐ. ஸ்கேன்

தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழகம் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சென்னை அரசு பொதுமருத்துவமனை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியை இயக்கி வருகிறது. ஏழை எளிய மக்களும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இதுவரை வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்திலிருந்து ரூ.1,000 குறைத்து ஏற்கெனவே வசூலிக்கப்பட்டு வந்த ரூ.4,500–க்கு பதிலாக ரூ.3,500க்கு Brain, Cervical Lumbar, Abdomen, Thoracic, M.R.Angio, Pelvis, MRCP and large part போன்ற பாகங்களுக்கும் மற்றும் ரூ.3,500–க்கு பதிலாக ரூ.2,500க்கு Knee, Hipjoint, Shoulder, Wrist, Elbow, MR Mylogram and Small area including limited sequence of spine போன்ற பாகங்களுக்கும் மாற்றி அமைத்துள்ளது. கூடுதலாக ரூ.1,500 காண்ட்ராஸ்ட்க்கு வசூலிக்கப்படும். இந்தக் கட்டணம் தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கும் கட்டணத்தை விட மிகவும் குறைவானது.

## தமிழ்நாடு பார்வை இழப்பு தடுப்புச் சங்கம்

தற்போது தமிழ்நாட்டில் பார்வை இழப்பு விகிதம் 0.78 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இலவசமாக 7,00,000 கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு விழியுள்ளாடி, மருந்துகள் மற்றும் கண்ணாடியும் வழங்கப்பட்டது.

கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களில் தமிழ்நாட்டில் மட்டும் 91 சதவீதத்தினருக்கு விழியுள்ளாடி பொருத்தப்பட்டு, அகில இந்திய அளவில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டாண்டுகளில் 34 இலட்சம் பள்ளிச் சிறார்களின் குறைகள் கண்டறியப்பட்டு 40 ஆயிரம் சிறார்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்பட்டது.

### கண்தானம்

இவ்வாண்டில் மொத்தம் 3,320 கண்கள் இறந்தவர்களிடமிருந்து உரிய முறையில் தானமாகப் பெறப்பெற்று தகுதியான கண் அறுவை சிகிச்சை வாயிலாக 1,230 நோயாளிகளுக்குப் பார்வை பெற ஏதுவாகப் பொருத்தப்பட்டது. கண் தானம் பெறுவதற்கு ஏதுவாக கடந்த இரண்டாண்டுகளில் திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் கண் வங்கி நிறுவப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்

தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.108 கோடி மதிப்புள்ள மருந்துகளையும் 2002–2003ஆம் ஆண்டில் ரூ.115 கோடி மதிப்புள்ள மருந்துகளையும், தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவ நிலையங்களுக்கு 24 மாவட்ட மருந்து கிடங்குகள் மூலமாக வழங்கியது.

★ ரூபாய் 14 கோடி மதிப்புள்ள இசிஜி கருவிகள், அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர் கருவிகள், பாயில் கருவிகள், எக்ஸ்ரே கருவிகள் ஆகியவை, சுகாதார துணை மையங்களுக்கும், ஆரம்ப சுகாதார மையங்களுக்கும், அரசு மருத்துவ மையங்களுக்கும் இக்கழகம் கொள்முதல் செய்து வழங்கியது.

★ ரூபாய் 4.5 கோடி மதிப்புள்ள மூன்று டெலிகோபால்டு கருவிகள் இக்கழகம் கொள்முதல் செய்து, அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை, மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம், எழும்பூர் மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைகளில் இக்கழகம் நிறுவியுள்ளது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.11.50 கோடியில், 11 மாவட்ட மருந்துக் கிடங்குகளை தமிழ்நாட்டில் கட்டியுள்ளது.

★ மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் மொத்தம் ரூ.5.65 கோடி செலவில் 8 நகர சுகாதார மையங்களையும், 21 சுகாதார துணை மையங்களின் கட்டுமானப் பணி செய்து வருவதுடன் 40 ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 75 சுகாதார துணை மையங்களின் பழுது நீக்கும் பணிகளையும் செய்துவருகிறது.

★ இந்த இரண்டாண்டில் 18 சி.டி.ஸ்கேன் மையங்களை அரசு மாவட்ட மருத்துவமனைகளில் நிறுவியுள்ளது. ஆக தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் மொத்தம் 35 சி.டி.ஸ்கேன் மையங்களை இக்கழகம் நடத்தி வருகிறது. இம்மையங்களில் 1,06,999 நோயாளிகள் 2001–2002ஆம் ஆண்டிலும், 1,63,617 நோயாளிகள் 2002–2003ஆம் ஆண்டிலும் ஸ்கேன் செய்யப் பட்டுள்ளனர்.

★ சென்னை மற்றும் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இக்கழகம் நடத்திவரும் எம்.ஆர்.ஐ. மையத்தில் 2001–2002ஆம் ஆண்டில் 1,262 நோயாளிகளும், 2002–03ஆம் ஆண்டில் 4,283 நோயாளிகளும் ஸ்கேன் செய்யப் பட்டுள்ளனர்.

## ஆன்மீக எழுச்சிக்கு ஒரு புதிய பூபாளம்

### திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 23.3.2002 அன்று சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

முதற்கட்டமாக 63 திருக்கோயில்களில் தொடங்கிவைக்கப்பட்ட இத்திட்டம், நன்கொடையாளர்கள், ஆர்வலர்களின் அமோக ஆதரவினைத்



தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக 63 திருக்கோயில்களில் 15.8.2002 முதலும், மூன்றாம் கட்டமாக 18 திருக்கோயில்களில் 15.9.2002 முதலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சிறப்புற நடைபெற்று வருகின்றது. அதன்பின் 14.4.2003 அன்று மேலும் 18 திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டு தற்சமயம் 162 திருக்கோயில்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

31.3.2003 முடிய இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 54,04,681 ஆகும். சுமார், 700 இலட்சம் ரூபாய் நன்கொடையாகவும், ரூபாய் 300 இலட்சம் உண்டியல் மூலமும் இத்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்று மக்களின் பேராதரவை பெருமளவில் பெற்றுள்ளது.

## இலவசத் திருமண திட்டம்

தற்சமயம் 2003–2004ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் இதற்கு முன்பாக 2 கிராம் எடையில் வழங்கப்பட்டு வந்த பொன் திருமாங்கல்யத்தின் எடையை 4 கிராமாக உயர்வு செய்து வழங்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டதின் அடிப்படையில் இணை ஒன்றுக்கு செலவுத் திட்டம் ரூ.5,500/– ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நிதிவசதிமிக்க ஒவ்வொரு திருக்கோயில்களிலும் தனித்தனியே நடத்தப்பட்டு வந்த இலவச திருமணங்கள் இந்த ஆண்டு (14.7.2002) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சிறப்பாக ஒரே இடத்தில் முதன் முறையாக 1008 இணைகளுக்கு இலவச திருமணங்கள் நடத்தப்பட்டன. இத்திருமணத்தில் 662 இணைகள் ஆதிதிராவிடர் வகுப்பினரும், 67 இணைகள் பழங்குடி இனத்தவரும், 114 இணைகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவரும், 160 இணைகள் பிற்படுத்தப்பட்டவர்களும், 5 இணைகள் இதர வகுப்பினரும் பயனடைந்தனர்.

## திருப்பணி

உலகிலேயே மிகப்பெரிய கோவில் பிரகாரத்தை கொண்டது இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலாகும். இந்த திருத்தலத்தில் 125 வருடங்களாகப் பயனற்றுக் கிடந்த இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக செப்பனிடப்பட்டு 8.4.2002 அன்று திறந்து விடப்பட்டது.

### தர்கா

அனைத்து மத மக்களையும் சமமாகப் பாதுகாக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தில் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களிலும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டு, சென்னை, அண்ணாசாலையிலுள்ள ஹஜரத் சையத் மூஸாஷா காதிரி தர்கா வளாகத்தில் இந்தத் திட்டத்தை 3.3.2003 அன்று தொடக்கி வைத்தார்கள்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் தமிழகத்திலுள்ள பிரசித்திபெற்ற ஒரு பள்ளிவாசல் மற்றும் தர்காவில் தொழுகை நடத்த வருகைதரும் சுமார் 200 இறையன்பர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும்.

### திருக்கோயில் திருப்பணிகளுக்கு நிதியுதவி அனுமதிக்கப்பட்ட விவரம்

திருக்கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு 393 திருக்கோயில்களில் 677 பணிகளுக்கு ரூ.4025.36 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

### திருப்பணிக்கு நிதியுதவி

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி களுக்காக அரசு மானியம், ஆணையர் பொது நல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி போன்ற நிதிகளிலிருந்து 83 திருக்கோயில்களுக்கு ரூ.197.08 இலட்சம் துறை மூலம் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 150 திருக்கோயில்களுக்கு ரூ.37.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### குடமுழுக்கு

திருக்கோயில்களில் திருப்பணிகள் முடித்து இரண்டாண்டுகளில் 1,766 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழா நடத்தப்பட்டது.

1974ஆம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கிற்குப் பிறகு சுமார் 18 ஆண்டுகள் காலம் கடந்த நிலையில் திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர்



திருக்கோயிலில் சுமார் ரூ.300 இலட்சம் செலவில் அனைத்து திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு 27.6.2002 அன்று குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 450 ஆண்டுகளுக்குப் பிறகு ரூ.20 இலட்சம் செலவில் புராதன சிறப்புமிக்க ஆயிரங்கால் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்டது. இது தவிர சுமார் ரூ.85 இலட்சம் செலவில் சுவாமி மற்றும் அம்பாள் சன்னதி கொடி மரங்கள் தங்க ரேக்குகள் ஒட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

### ஒரு கால பூஜைத் திட்டம்

ஒரு கால பூஜை முறையாக நடத்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூஜை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

2001–2002 நிதியாண்டில் 1,000 திருக்கோயில் களுக்கும், 2002–2003 நிதியாண்டில் 460 திருக்கோயில்களுக்கும், ஆக கடந்த இரண்டு ஆண்டுகளில் 1,460 திருக்கோயில்களில் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற திருப்பணி

இத்திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில்களுக்கும், 2002–2003ஆம் நிதியாண்டிற்கு 100 திருக்கோயில் களுக்கும் தலா ரூ.25,000 வீதம் ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### மரத்தேர் திருப்பணி

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருத்தேருக்குப் பதிலாக ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, இதற்கான செலவுத் தொகை திருக்கோயில் "திருப்பணி மற்றும் அறப்பணி நிதி"–யிலிருந்து வழங்கவும் ஆணையிடப் பட்டுள்ளது. இது தவிர 2001–2002இல் 29 திருத்தேர்களும் 2002–2003இல் 44 திருத்தேர்களும் பழுது பார்க்கப்பட்டு சீரமைக்கப்பட்டது.

### கிராமக்கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம்

கிராமக்கோயில் பூசாரிகள் ஓய்வூதிய தேர்வுக் குழுவினரால் இத்துறை நிர்வாகத்தின் கீழ் இல்லாத திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு 1.7.2001 முதல் நபர் ஒருவருக்கு ரூ.500 வீதம் 861 பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

### பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்

பக்தர்களுக்கு 1,077 திருக்கோயில்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. 272 திருக்கோயில்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. குளியல் அறைகள் வசதிகள் 165 திருக்கோயில்களில் புதியதாக செய்து கொடுக்கப்பட்டது.

திருக்கோயில்களுக்கு காணிக்கையாக செலுத்தப்படும் பரிவட்டங்களில் உபரியாக உள்ள பரிவட்டங்களை நிதி வசதியில்லாத திருக்கோயில் களுக்கு உபயமாக வழங்கும் திட்டத்தின்படி இதுவரை 84 திருக்கோயில்களில் உள்ள உபரி பரிவட்டங்களை 6,171 திருக்கோயில் களுக்கு 37,257 பரிவட்டங்கள் உபயமாக வழங்கப்பட்டுள்ளன.

### ஆக்கிரமிப்பு அகற்றுதல்

திருக்கோயிலுக்குச் சொந்தமான 301.98 ஏக்கர் நிலம், 51 கிரவுண்ட் 1,546 சதுர அடி மற்றும் 38





*புதுமைப்பித்தனின் படைப்புகள் நாட்டுடைமை*

கட்டடங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசப்படுத்தப்பட்டது.

### தமிழ் வளர்க்கச் சீரிய பணிகள்

தமிழ் வளர்ச்சிக்கான நூல் வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.9,78,394மும், 2002–2003ஆம் ஆண்டில் ரூ.4,92,179மும் நூல்கள் வெளியிட நிதியுதவியாக வழங்கப்பெற்றன.

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

இவ்வரசு பொறுப்பேற்றபின் 2001–2002ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, விழுப்புரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, தருமபுரி, வேலூர் ஆகிய 8 மாவட்டங்களிலும் 2002–2003ஆம் ஆண்டில் சேலம், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், ஈரோடு, சென்னை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய 8 மாவட்டங்களிலும் ஆக மொத்தம் 16 ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

### குறள் பரிசுத் திட்டம்

திருக்குறள் முற்றோதல் செய்த கடலூரைச் சேர்ந்த செல்வி சிவராஜீ அவர்களுக்கு ரூ.5000த்தை 11.6.2001லும், செல்வி இரா. அருள்ஜோதி அவர்களுக்கு ரூ.5,000த்தை 4.7.2002லும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

### தமிழறிஞர்களின் பிறந்தநாள் விழா/ நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடுதல்

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழா அவர் வாழ்ந்த இடமாகிய திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன் கோயிலில் 5.2.2002 அன்றும் கோமதிமுத்துபுரத்தில் 7.2.2002 அன்றும் கொண்டாடப்பட்டது.

### நூல்கள் நாட்டுடைமையாக்கம்

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் சிறுகதைச் சிற்பி புதுமைப்பித்தன் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மகள் திருமதி. தினகரி சொக்கலிங்கம் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பரிவுத்தொகை ரூ.5 இலட்சம் 25.9.2002 அன்று வழங்கப்பட்டது.

எழுத்தாளர் கு.ப.ராசகோபாலன் அவர்களின் சகோதரியாகிய திருமதி கு.ப.சேது அம்மாள் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவருக்கு ரூ.3 இலட்சமும், கு.ப.ரா. அவர்களின் மகன் திரு. கு.ப.ரா. பட்டாபிராமன் அவர்களுக்கு ரூ.2 இலட்சமும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பரிவுத் தொகையாக 25.9.2002 அன்று வழங்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழக முதல்வருக்கு மாநிலங்களவைத் துணைத்தலைவர் பாராட்டு**

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களைப் பாராட்டி, நாடாளுமன்ற மாநிலங்களவைத் துணைத்தலைவர் நஜ்மா ஹெப்துல்லா அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :

*"தமிழக அரசின் உயர் பதவிகளில் பெண் அதிகாரிகளை நியமித்துள்ளதற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*திறமையை நிரூபிக்க பெண்களுக்கு சிறந்த வாய்ப்புகளை அளித்துள்ளீர்கள். அவர்களும் அதற்கேற்றவகையில் செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். மேலும் குழந்தையின் பெயருக்கு முன்பாக தாயின் 'இன்சியலை' போட்டுக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளீர்கள். பாரம்பரியமாகப் பெண்களுக்கு எதிராக நடந்துவரும் பாரபட்சத்தை முறியடிக்க, உங்களைப் போன்ற பெண்களால் தான் முடியும்''.*

**'சொல் வங்கி'**

ஆங்கிலம் மற்றும் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ளவும் பழைய தமிழ்ச் சொற்களை இன்றைய தேவைக்கேற்ப புதுப்பித்துக் கொள்ளவும் மக்களிடையே புழக்கத்தில் உள்ள சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளவும் 'சொல்வங்கி'த் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது.

**தமிழ் நூல்கள் வழங்கல்**

மும்பை தமிழ்ச் சங்கத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.43,025 மதிப்பிலான தமிழ் நூல்கள் 3.10.2002 அன்று வழங்கப்பட்டன.

**தமிழ் - செம்மொழி, மைய அரசின் ஆட்சி மொழியாக்கும் முயற்சிகள்**

உலகின் தொன்மை மொழியாகிய நம் தமிழ் மொழியை மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும் எனவும், "உயர் தனிச் செம்மொழி" என அறிவிக்க வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறார்கள்.

**தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கை**

21.4.2003இல் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "இந்தியத் தலைநகரில்




'பொன்விழி' – புதிய தமிழ் மென்பொருள் வெளியீடு 18.6.2002

(தில்லி) உள்ள புகழ்மிக்க ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காகத் தமிழ் இருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்தில் கொண்டு ரூ.50 இலட்சம் நல்கைத் தொகையாக ஒரே தவணையில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது" என அறிவித்தார்கள்.

★ மாணவ, மாணவியர்களின் படைப்பாற்றலை வளர்க்க தமிழ்நாடு முழுவதும் உள்ள மேல்நிலைப் பள்ளிகள்தோறும் தமிழ் மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

## சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் செறிவான பணிகள்

### சென்னைப் புறநகர் பேருந்து வளாகம் - கோயம்பேடு

பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் உத்தேசத்தில் ஏற்கெனவே இருந்துவரும் பாரிமுனை, பேசின்பாலம், எம்.யூ.சி. வளாகம் போன்ற பேருந்து நிலையங்களில் உள்ள பேருந்துகளை ஜவகர்லால் நேரு சாலையில் (உள்வட்டச்சாலை) அமைந்துள்ள கோயம்பேட்டிற்கு மாற்றி, புதிய புறநகர் பேருந்து வளாகம் சுமார் 37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.103 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இப்பேருந்து வளாகத்தை 18.11.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

### துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் – II

★ சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமே இந்த திட்டத்தை தலைமையேற்று கூட்டாக செயல்படுத்துகிறது. இந்த திட்டமானது முழு விசையோடு செயல்படுத்தப்பட்டு முதல் நிலையான செயல்பாட்டை டிசம்பர் 2003–க்குள் நிறைவேற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இரயில் நிலையங்கள் அமைக்கப்படும். இதரப் பணிகள் அதற்குப் பிறகு தொடரப்படும். இதற்கு இதுவரை செய்யப்பட்டுள்ள செலவு ரூ.448 கோடியாகும்.



## பேரூராட்சித் துறை

தமிழகமெங்கும் பேரூராட்சிகளில் பொது தேர்தல்கள் நடைபெற்று, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆலோசனைகளுடன் பேரூராட்சி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து பேரூராட்சி அலுவலகங்களிலும் கணினி மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*இயற்கை அன்னை நமக்கு அளித்துள்ள வரங்களில் மழை வளம் முதன்மையானது.*

*அனைத்து நீர் வளங்களுக்கும் பொதுவானது "மழை நீர்". இதனை உணர்ந்து, மழை நீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக்கிட எனது தலைமையிலான இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது.*

*நானும் எனது இல்லத்தில் மழை நீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்தி உள்ளேன்.*

*உங்களது இல்லங்களில் மட்டுமல்லாமல், ஊரணிகள், குளங்கள், கோயில் குளங்கள் மற்றும் பொது இடங்களிலும் மழை நீர் சேகரிக்கும் அமைப்புகளை ஏற்படுத்தி, ஒரு கூட்டு முயற்சியாக அரசுடன் இணைந்து ஒத்துழைக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.*

*தமிழகம் குடிநீர்த் தேவையில் தன்னிறைவு பெற, மழைநீர் சேகரிப்பு அவசியம்.*

*ஏனெனில், நீரின்றி அமையாது உலகு!*

*வானத்தின் மழைத்துளி!*
*வையத்தின் உயிர்த்துளி!*

*வான் மழையைச் சேகரிப்போம்!*
*வாழ்வுக்கு வளம் சேர்ப்போம்!*

*– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்*

பேரூராட்சிக்கென புதியதாக இணைய தளம் (Web Site) துவக்கப்பட்டு, பேரூராட்சித்துறை சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான தகவல்கள் தரப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளின் நிர்வாகம் மற்றும் கணக்குகள் மேம்பாடு செய்யும் பொருட்டு ஏற்கெனவே உள்ள கணக்குகள் நடைமுறையினை மாற்றி, புதியதாக இயல்பு நிலை கணக்கு முறை (Accrual based accounting) துவக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்புத் திட்டம் தமிழகமெங்கும் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் அதன் தொடர்பான கட்டடங்கள், நீர் ஆதாரங்கள் மற்றும் குடியிருப்புகளிலும் முழு முனைப்புடன் செயல்பட்டு 1,11,402க்கு மேற்பட்ட மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பேரூராட்சிப் பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக 720 நவீன கழிப்பிடம் மற்றும் குளியலறை வசதியுடன் கூடிய சுகாதார வளாகங்கள் ரூ.18 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் செயல் படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

### ஊரகக் குடிநீர்த் திட்டம்

13,493 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின் விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டது. இதில் நீராதாரத்தின் குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 2,603 ஊரகக் குடியிருப்புகளும் அடங்கும்.




குடிப்பதற்கு உகந்த குடிநீர் ஆதாரமில்லாத 2,500 ஊரகக் குடியிருப்புகளுக்கு கைப்பம்புகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கைப்பம்புகளிலிருந்து குடிநீர் பெறுவதில் கிராமப்புற மகளிருக்கு இருந்த கடின நிலையை எளிதாக்கிட, 14,661 கையிறைப்பான்களை மாற்றி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய சிறு மின்னிறைப்பான் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் நிறைவேற்றப்பட்ட 4,026 சிறு மின்னிறைப்பான் திட்டங்களும் அடங்கும்.

ஊரகப் பகுதிகளிலுள்ள 14,564 அரசு பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளிலுள்ள 1,226 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் குடிநீர்த் தேவையை ஈடுசெய்யும் முகமாக குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

முதன் முறையாக ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து கையிறைப்பான் மற்றும் மின்விசை திட்ட நீராதாரங்களிருந்தும் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

53 இடங்களில் குறைந்த செலவில் தளத்திலேயே சுத்திகரிப்புக் கலன்கள் (10 புளோரைடு நீக்கும் மற்றும் 43 இரும்பு தன்மை நீக்கும் கலன்கள்) அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி கிராம யோஜனா திட்டத்தின் கீழ் தடுப்பு அணைகள், கசிவு நீர்க்குட்டைகள் நிலத்தடி தடுப்பணைகள் உள்ளிட்ட 409 நிலத்தடி நீர் செறிவூட்டல் கட்டமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன.

## நகரக் குடிநீர்த் திட்டம்

17 நகராட்சிகள் மற்றும் 118 பேரூராட்சி களுக்குமாக மொத்தம் 135 நகரங்களுக்கு 31.32 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.280.19 கோடி மொத்த மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## சொக்கவைக்கும் தமிழகச் சுற்றுலாத்தலங்கள்

உலகச் சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரும், தமிழ்நாடு சுற்றுலாத்துறை, ஆற்றல் நிரம்பிய தமிழக முதல்வரின் நற்பயன் நோக்கிய நல்ல தலைமையில் தமிழகம் 'இந்தியச் சுற்றுலாச் செயல்பாடுகளுக்குத் தேவையான' வணிகக் களமாக விளங்குகிறது. நாட்டிலேயே முதன் முறையாக – தமிழகச் சுற்றுலா மற்றும் வணிக வளர்ச்சிக்காக, தமிழக அரசு சுற்றுலா முகமைகளையும், தொடர்பு ஆலோசகர்களையும் நியமித்துள்ளது.

தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில் கடந்த 2002–2003ஆம் ஆண்டில் தலைமைச் சுற்றுலாத் திட்டத்திற்காக ரூ. 20 இலட்சம் அளிக்கப்பட்டது. 2003–2004ஆம் நிதியாண்டிற்கு ரூ.25 இலட்சம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் முதல் ஆவுடையார் கோயில் வரை 14 வழிபாட்டுத் தலங்கள் மற்றும் இயற்கை எழில் நிறைந்த இடங்களுடன் பாரம்பரியச் சிறப்புடைய காரைக்குடி – செட்டிநாடு பாரம்பரிய மையங்களும், சுற்றுலா அடைவு மையங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டன.

**முன்னெப்போதுமில்லாத வகையில் நிதி ஒதுக்கீடு:**

2001–2002 நிதியாண்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக ஒதுக்கப் பெற்ற ரூ17.10 கோடியில், பதினைந்து மாவட்டங்களில் சுற்றுலா மையங்களின் உள்கட்டுமான வளர்ச்சிக்காக ரூ.5 கோடி செலவிடப்பட்டு, சுற்றுலா மையங்கள் புதுப்பொலிவு பெற்றன. 2002–2003 நிதியாண்டில் முன்பிருந்ததைவிட அதிகமாக ரூ.26.79 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**உள்கட்டுமான வசதிகளின் மூலம் உற்பத்தி நோக்கிய வளர்ச்சி:**

2002–2003ஆம் நிதியாண்டில் மாமல்லபுரம் சுற்றுலா மையத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்





8.1.2003 அன்று காஞ்சிபுரத்தில் தொடங்கி வைக்கப் பெற்றது.

சுற்றுலாத் தகவல் சேவைகள்

2002ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ராவில் இரண்டு சுற்றுலாத் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு, தமிழகத்தின் 14 சுற்றுலா மையங்களுடனும், மற்ற மாநிலங்களில் உள்ள 6 சுற்றுலா மையங்களுடனும் வலைத்தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு புறநகர் மாநகரப் பேருந்து நிலையத்தில் ஒரு சுற்றுலாத் தகவல் மையம் உருவாக்கப்பெற்றுள்ளது. விரைவான தகவல் தொடர்பு வளர்ச்சிக்கு உதவும் வகையில் எல்லா சுற்றுலாத் தகவல் மையங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

2002–2003ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட 25 பெரும் சுற்றுலா விழாக்களுடன் 2002 டிசம்பர் திங்களில் இந்தியத் தொழிலகங்களின் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் 'சென்னைத் திருவிழா' நடத்தப் பெற்றது. பயணிகளை மேலும் கவரும் வகையில் காஞ்சிபுரத்தில், பட்டுத் திருவிழா, திருவண்ணாமலையில் 'அருணாஞ்சலித் திருவிழா' மற்றும் மதுரையில் 'நாட்டியத் திருவிழா' ஆகியவை இணைக்கப்பெற்றன. வரலாற்றிலேயே முதன் முறையாக, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வானூர் இதழ்களில் நம் சுற்றுலா மையங்களைப் பற்றிய விரிவான விளம்பரங்கள் கொடுக்கப் பெற்றன.

சுற்றுலாச் சந்தை மற்றும் விளம்பரத்துக்காக 2001–2002 நிதியாண்டில் வழங்கப்பட்ட 4.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 2002–2003 நிதியாண்டில் 5.4 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

புதிய தொடக்கங்கள்

மதுரை, திருமலைநாயக்கர் மகாலில் கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த 'ஒலி–ஒளிக்காட்சி' கடந்த 2001 டிசம்பரில் மீண்டும் தொடரப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுற்றுலா விரும்பிகளுக்கும், பொதுமக்களுக்கும், விழிப்புணர்வு உண்டாக்கும் பொருட்டு, சுற்றுலா வளர்ச்சித்துறை ரூபாய் 30 இலட்சம் வழங்கியுள்ளது. "குப்பையற்ற பகுதிகள் மற்றும் தூய்மையான சேர்விடங்கள் இயக்கங்கள்" மாவட்ட நிர்வாகங்களால் மேற்கொள்ளப் பட்டன.

## தமிழகத்திலுள்ள சுற்றுலாத்தலங்கள்

### இராமநாதபுரம்

இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக் கோவில், பாம்பன் பாலம், நவபாஷாணம், தேவிப்பட்டினம்.

### ஈரோடு

பவானிசாகர் அணை, கூடுதுறை, கொடிவேரி அணை, தாளவாடி மலை, கொடுமுடி, ஈரோடு பெரியார் நினைவு இல்லம்.

### கடலூர்

பிச்சாவரம் (மாங்குரோவ் காடுகள்), சிதம்பரம் நடராஜர் கோயில், நெய்வேலி அனல் மின்நிலையம்.

### கன்னியாகுமரி

கன்னியாகுமரி, பத்மநாபபுரம் அரண்மனை, உவரி, சுசீந்திரம், திற்பரப்பு அருவி, பேச்சிப்பாறை அணைக்கட்டு, வட்டக்கோட்டை

### காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் அண்ணா நினைவு இல்லம், வேடந்தாங்கல், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், முட்டுக்காடு.

### கோயம்புத்தூர்

சிறுவாணி அணை, பெரியார் அருவி, டாப்சிலிப் (ஆனைமலை), வால்பாறை, அமராவதி அணை.

### சிவகங்கை

மடிப்புரம், குன்றக்குடி முருகன் கோவில், பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோவில், பிரான்மலை, கொல்லங்குடி, திருகோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோவில், தாயமங்கலம், காளையார் கோவில், கொள்ளுகுடிப்பட்டி பறவைகள் சரணாலயம்.





### சென்னை

வள்ளுவர் கோட்டம், கோல்டன் பீச், வண்டலூர் மிருகக்காட்சி சாலை, மெரினா பீச், கிண்டி சிறுவர் பூங்கா, அரசு அருங்காட்சியகம், எழும்பூர் கலைக்கூடம்.

### சேலம்

ஏற்காடு (மலைவாழிடம் – கடல் மட்டத்திலிருந்து 5100 அடி உயரம்), மேட்டூர் அணை, தாரமங்கலம் கோயில், சேலம் உருக்காலை, சேலம் கந்தாஸ்ரமம், குருவம்பட்டி உயிரியல் பூங்கா.

### தஞ்சாவூர்

தஞ்சாவூர் பெரிய கோவில், சரஸ்வதி மகால், கும்பகோணம், மனோரா.

### தருமபுரி

ஒகேனக்கல் நீர் வீழ்ச்சி, தீர்த்த மலை, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம், தூவல் நீர்வீழ்ச்சி, அனுமன் தீர்த்தம், மத்திகிரி கால்நடைப் பண்ணை, ஒசூர் சிப்காட், அதியமான் கோட்டை கோவில், ஒசூர் அருகே தொரப்பள்ளி எனும் ஊரில் அமைந்துள்ள இராஜாஜி பிறந்த இடம், சுப்பிரமணிய சிவா நினைவுத்தூண்.

### திண்டுக்கல்

கொடைக்கானல், மலைக்கோட்டை, பழனி மற்றும் திருமலைக் கேணி.

### திருச்சிராப்பள்ளி

முக்கொம்பு, கல்லணை, புளியஞ்சோலை, பொன்னணியாறு அணைக்கட்டு.

### திருநெல்வேலி

பாபநாசம், மணிமுத்தாறு நீர்வீழ்ச்சிகள், முண்டந்துறை, களக்காடு புலிகள் சரணாலயம், குற்றாலம், கிருஷ்ணாபுரம் (சிற்பக்கலை), திருக்குறுங்குடி, கூந்தக்குளம், அரியகுளம், மூன்றடைப்பு பறவைகள் சரணாலயம்.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை ரமணமகரிஷி ஆஸ்ரமம், சாத்தனூர் அணை, அமிர்தி காடுகள், ஜவ்வாது மலை.

### திருவள்ளூர்

பழவேற்காடு, பூண்டி

### திருவாரூர்

பறவைகள் சரணாலயம், வடுவூர் மற்றும் உதயமார்த்தாண்டபுரம்

### தூத்துக்குடி

தூத்துக்குடி, திருச்செந்தூர், மணப்பாடு, கழுகுமலை, ஒட்டப்பிடாரம், எட்டயபுரம் பாரதியார் நினைவு இல்லம், பாஞ்சாலங்குறிச்சி, நவதிருப்பதி, கயத்தாறு.

**தேனி**

சுருளி நீர் வீழ்ச்சி, மஞ்சளாறு அணை, வைகை அணை, கும்பக்கரை அருவி, மேகமலை அருவி, மாவூத்து வேலப்பர் கோவில், குச்சனூர் கோவில், போடி மொட்டு, டாப் ஸ்டேசன், ஹைவேவிஸ்.

**நாகப்பட்டினம்**

தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம், பூம்புகார், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் தர்கா, தரங்கம்பாடிக் கோட்டை, கோடிக்கரை வனவிலங்கு சரணாலயம்.

**நாமக்கல்**

கொல்லிமலை, ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, திருச்செங்கோடு காந்தி ஆஸ்ரமம்.

**நீலகிரி**

தாவரவியல் பூங்கா, உதகமண்டலம் ஏரி, தொட்டா பெட்டா, முதுமலை வனவிலங்கு சரணாலயம், சிம்ஸ்பார்க், குன்னூர், கோடநாடு வியூ பாயிண்ட், கோத்தகிரி, கல்லட்டி நீர் வீழ்ச்சி.

**புதுக்கோட்டை**

சித்தன்னவாசல் குகை ஓவியங்கள், கொடும்பாளூர், விராலிமலை, குடுமியான்மலை, நார்த்தாமலை, புதுக்கோட்டை, ஆவுடையார் கோவில்.

**பெரம்பலூர்**

கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம், துருவ கோட்டை (மங்களமேடு அருகில் உள்ளது), லாடபுரம் மயில் ஊற்றுநீர் அருவி, சாத்தனூர், சித்தமல்லி நீர்த்தேக்கம்.

**மதுரை**

வைகை அணைக்கட்டு, திருப்பரங்குன்றம், அழகர்மலை, திருமலை நாயக்கர் மகால், காந்தி மியூசியம்.

**விருதுநகர்**

பிளவக்கல் அணை, காமராசர் நினைவில்லம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், அய்யனார் கோவில் அருவி, இருக்கன்குடி மாரியம்மன் கோவில்.

**விழுப்புரம்**

திருக்கோவிலூர், செஞ்சிக்கோட்டை, கல்வராயன் மலை, திருவக்கரை, மயிலம், மேல் மலையனூர், கோமுகி அணை, வீடூர் அணை, மணிமுத்தாறு அணை, மரக்காணம் கடற்கரை.

**வேலூர்**

வேலூர் கோட்டை, முத்து மண்டபம், ஏலகிரி மலை, அமிர்திகாடு, ஜவ்வாது மலை, விஷ்ணு பாப்பு வான் இயற்பியல் மையம்.






## அரசின் விழிகளாகவும் செவிகளாகவும் விளங்கும் செய்தி–மக்கள் தொடர்புத்துறை

செய்தி–மக்கள் தொடர்புத்துறை அரசுக்கும், மக்களுக்கும் பாலமாகத் திகழ்கிறது. அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் அனைத்தும் மக்களுக்கு முழுமையாகச் சென்றடையச் செய்யும் சீரிய குறிக்கோளுடன் செயல்படுகின்றது செய்தி–மக்கள் தொடர்புத் துறை.

### பத்திரிக்கையாளர்கள் நலன்

★ நாளிதழ் செய்தியாளர்களுக்கு மட்டுமின்றி அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சியினருக்கும், அங்கீகார அட்டை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழி வகுத்துள்ளார்கள்.

★ 2002–2003ஆம் ஆண்டில், மொத்தம் 592 பேருக்கு செய்தியாளர் அரசு அங்கீகார அட்டையும், 383 பத்திரிகையாளர்களுக்கு இலவச பேருந்து அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

★ 20 ஆண்டுகள் பணியாற்றி பணியிலிருக்கும் போது இறக்கும் அந்தப் பத்திரிகையாளரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அவ்வாறு வழங்கப்பட்டு வருகிறது.

★ 2002–2003ஆம் ஆண்டில் 67 நலிவுற்ற ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் மாதந்தோறும் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 9 பத்திரிகையாளர் குடும்பத்தினர்கள் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 2002–2003ஆம் ஆண்டில், 23 இலட்சம் ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ ஓய்வு பெற்று நலிந்த நிலையிலுள்ள பத்திரிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை ரூ.2,000–லிருந்து ரூ.3,000–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிக்கையாளர்கள் இயற்கை எய்தினால் அவரின் துணைவி யாருக்கு

வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.500–லிருந்து ரூ.1,500–ஆக உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டத்தின்போது பத்திரிகையாளர்கள், செய்திகளை வசதியாக சேகரிக்கும் வகையிலும், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினர்கள் வசதியாக நின்று படங்கள் எடுக்கும் வகையிலும், முதலமைச்சர் அறைக்கு அருகில் ஒரு பத்திரிகையாளர் அறை அமைக்கப்பட்டு, அங்கு பத்திரிகையாளர் கூட்டங்கள் நடத்தப் படுகின்றன.

★ அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் அரசு விழாக்கள் ஆகியவை குறித்து, அறிந்துகொள்ளும் வகையில் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரம் செய்ய இத்துறை மூலம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

### தமிழரசு இதழ் மூலம் விளம்பரப் பணிகள்

அரசின் அதிகாரப்பூர்வமான ஏடாக தமிழரசு இதழ் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது. இவ்விதழ் சிறப்பாக அமையும் வகையில் தமிழரசு இதழில் பிறமொழிக் கருத்தோவியங்கள் மொழிபெயர்த்து வெளியிடப்படுகின்றன.

மேலும், அரசின் திட்டங்கள், நலத்திட்ட உதவிகள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள் சிறப்பிதழாக வெளியிடப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளில் 13 சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### நாட்டுக்கு உழைத்த சான்றோரை நினைவுகூர்ந்திடும் நல் அரசு

விடுதலை வீரர்களையும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும், சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ்மொழி மேம்பாட்டிற்கும் உழைத்திட்ட பெரியோர்களையும் போற்றி பெருமைப்படுத்தி வருகிறார்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.





கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு திருநெல்வேலி நகரில் மணிமண்டபம் அமைக்க ரூ.75 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு, 13-3-2003 அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கேரள மாநிலம் வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவகம் பராமரிப்புக்காக ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில், வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் அமைக்க ரூ.35 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் 58.69 இலட்சத்தில், சென்னை, காயிதேமில்லத் மகளிர் கல்லூரி வளாகத்தில் 8-5-2003 அன்று திறந்துவைக்கப்பட்டது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு மண்டபம் அமைப்பதற்கு, சென்னை - அடையாறில் ரூ.10.27 கோடி மதிப்புள்ள 65 சென்ட் நிலத்தை இலவசமாக வழங்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார்கள். அவ்விடத்தில் தென்னிந்திய நடிகர் சங்கம் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசாணை வழங்கப்பட்டது.

15.7.2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னையில், காமராஜர் நூற்றாண்டு விழாவினை தொடங்கிவைத்து, விழாவினை சிறப்பித்தார்கள். அதுமட்டுமன்றி, ஆண்டு முழுவதும், இவ்விழாவினை கொண்டாட ஆணையிடப்பட்டது. பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை 15-7-2003 அன்று அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

### பல்துறை பணி விளக்க முகாம்கள்

அரசு நிறைவேற்றும் சீரிய திட்டங்களை, அனைத்துத் துறைகளும் பங்கேற்கும் வகையில் விளம்பர சாதனங்களை ஒருங்கிணைத்து, பயன்படுத்தி விளம்பரம் செய்து பொதுமக்கள் அறியும் வகையில் பல்துறை பணி விளக்க முகாம்கள் நடத்தப்படுகிறது.

### திரைப்படத்துறை

தமிழ் திரைப்பட வரலாற்றில் முதன்முறையாக திரைப்படங்களில் பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு 2001-ஆம் ஆண்டில் திரைப்பட விருதுகளை அறிவித்தார்கள். இதனால்,விருது வழங்கப்படுவோர் பட்டியலில் ஆண் மற்றும் பெண் பின்னணிக் குரல் கொடுப்பவர்களும் சேர்க்கப் பட்டுள்ளனர்.

### முன்மாதிரியாகத் திகழும் அரசு திரைப்படக்கல்லூரி

திரைப்படக் கல்லூரி மாணவர்கள் கணினி பயிற்சி பெறுவதற்காக, ரூ.11 இலட்சம் செலவில் கணினி மையம் அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னையிலுள்ள திரைப்படக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கு பெறச் செய்ய ரூ.75 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு, 4 குறும்படங்கள் திரைப்பட விழாக்களுக்கு அனுப்ப தேர்வு செய்யப்பட்டுள்ளது.



### பிலிம் நியூஸ் ஆனந்தன் திரைப்பட சேகரிப்புகள் நாட்டுடைமை

தமிழ்த் திரைப்படங்கள் தொடர்பான திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய புகைப்பட சேகரிப்புகளை அரசுடைமை ஆக்குவதற்கு பரிவுத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கியும், அவர் எழுதிய ''சாதனைகள் படைத்த தமிழ் திரைப்பட வரலாறு'' என்ற புத்தகத்தினை வெளியிடுவதற்காக ரூ.5.50 இலட்சம் உதவித்தொகை வழங்க ஆணையிட்டுள்ளது.

### பொருட்காட்சி

இதுவரை 109 அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. இதன் மூலம் அரசுக்கு ரூ. 10.70 கோடி இலாபம் கிடைத்துள்ளது.

★ ★ ★




| | | |
|---|---|---|
| மொத்த மாவட்டங்கள் | – | 29 |
| மாநகராட்சிகள் | – | 6 |
| நகராட்சிகள் | – | 102 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | – | 385 |
| பேரூராட்சிகள் | – | 611 |
| கிராமப் பஞ்சாயத்து | – | 12,619 |
| மொத்த மக்கள் தொகை | – | 6,21,10,839 |
| ஆண்கள் | – | 3,12,68,654 |
| பெண்கள் | – | 3,08,42,185 |
| படிப்பறிவு பெற்றோர் | – | 73.47% |
| ஆண்கள் | – | 82.33% |
| பெண்கள் | – | 64.55% |

## மக்கள் தொகை கணக்கெடுப்புத் துறையின் தகவல்

தமிழகத்தில் 59 விழுக்காட்டினர் சொந்த வீடுகளில் குடியிருக்கின்றனர். கடந்த பத்து ஆண்டுகளில் தற்போதுள்ள வீடுகளின் எண்ணிக்கை, அவற்றின் தரம் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டில் 1.45 கோடியாக இருந்த வீடுகள் கடந்த பத்து ஆண்டில் 1.7 கோடியாக உயர்ந்துள்ளன. கிராமங்களில் 91 விழுக்காட்டினர் தற்போது சொந்த வீடுகளில் குடியிருக்கின்றனர். மொத்த வீடுகளில் தனிப் படுக்கையறைகள் கொண்ட வீடுகள் 49 விழுக்காடுதான். மீதமுள்ள வீடுகளில் பொதுவான படுக்கையறைகளே உள்ளன.

2001ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி குடிநீர்க் குழாய் இணைப்புகள் 44 விழுக்காடாகவும் கிராமங்களில் இவ்விணைப்பு கொண்ட வீடுகள் 60 விழுக்காடாகவும், மின் இணைப்பு உள்ள வீடுகள் 78 விழுக்காடாகவும் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றுள்ளது. மேலும், கழிப்பறை உள்ள வீடுகள் 35 விழுக்காடாகவும், தனிக்குளியலறை கொண்ட வீடுகள் 39 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளன. தற்போதுள்ள வீடுகளில் விறகு அடுப்புகள் குறைந்து சமையல் எரிவாயு அடுப்புகள் 19 விழுக்காடு வீடுகளிலும் மண்ணெண்ணெய் அடுப்புகள் 13 விழுக்காடு வீடுகளிலும் முன்னேறியுள்ளன.

கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றம் பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதையே காட்டுகின்றன என்று சொன்னால், அது மிகையாகாது.



இரண்டாண்டு ஆட்சியில் அரசுக்கு ஏற்பட்ட இன்னல்கள் ஏராளம்.

கடந்த கால ஆட்சி முறையால், தடம் புரண்டு போன நிதி நிர்வாகம், சுவர்களும், சன்னல்களும், கதவுகளுமிருந்தால் வீடாகி விடுமா? – கூரை வேண்டுமே! கூரையில்லா வீட்டைக் குட்டிச் சுவர் என்று தானே கூறுவர். நிதிதான் கூரை.

கொடுபடாத பட்டியல்களை விட்டுச் செல்வதா? விட்டுச் சென்றது மட்டுமல்லாமல் குற்றம் சொல்வதா? இயல்பான ஆற்றலாலும் அறிவுத் திறத்தாலும் – அனுபவத்தாலும் – வியூகத்தை உடைத்து வெற்றி கண்டார் புரட்சித்தலைவி. பார்வையிட வந்த உலக வங்கியின் பாராட்டுதலையும் பெற்றார்.

*வீறுநடை போட்டு*
*வெற்றிப் பாதையில் –*
*இரண்டாண்டுச் சாதனைகளை*
*முடித்துவிட்டது தமிழக அரசு.*

உண்மை – ஊக்கம் – உழைப்பு இருக்கும் வரை மக்கள் நெஞ்சகத்திலிருந்து மாறாது இந்த அரசு.

தன்னிகரற்ற மன உறுதியோடும் – கூரிய மதிநலத்தோடும் – தமிழகத்தை வழி நடத்திவரும் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில், தொடர்ந்து செல்வோம்! தொடர்ந்து வெல்வோம்!


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2034
சித்திரை – வைகாசி
மே 2003
மலர் : 34 இதழ் : 21 & 22
விலை ரூ.10


இப்போது, என் அன்புக்குரிய மக்களாகிய உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1967ஆம் ஆண்டில் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்ற போது நடந்த நிகழ்ச்சி இது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பதவி ஏற்றவுடன், சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமாக்கினார். இனிமேல் நடைபெறப் போகும் சுயமரியாதைத் திருமணங்கள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே நடைபெற்றிருக்கிற சுயமரியாதைத் திருமணங்கள் அனைத்தும், சட்டப்படி செல்லுபடியாகும் என்று அண்ணா அறிவித்தார். அப்போது, சட்டசபையில், காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கேள்வி கேட்டார். "இந்தத் தீர்மானம், நீங்கள் பெரியாருக்குத் தருகின்ற காணிக்கையோ" என்று கேட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இந்த சட்டம் மாத்திரமல்ல, இந்த அமைச்சரவையே பெரியாருக்காக தரப்படுகின்ற காணிக்கை தான்" என்று சொன்னார்.

அதைப் போலவே, நாங்கள் பெறுகின்ற ஒவ்வொரு வெற்றியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

இருவரும் தமது வாழ்நாள் முழுவதும் நேசித்த தமிழகப் பெருமக்களுக்கு காணிக்கை ஆக்கப்படுகின்ற வெற்றி.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்


ஆசிரியரும் வெளியிடுபவரும் : ச. நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

மாத சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.



Visit us at: www.cooptex.com

Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**

தமிழரசு
R.N.I.NO.21446/70
RGN.No.TN/PMG(CCR)836/03-05, WPP-518

